Registered as a News Paper
பக்கம் 20

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 15 | வெள்ளி - 04 | 19 - 25 - மார்ச் - 2004



## சுயாட்சி பெற்றவர்கள்



## அம்மா நலமா...

## வணக்கம் சோமவன்ச



ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி 19 . 03 . 2004

மின் அஞ்சல : www.weekly@Eezhanatham.com

# ஈழத்தமிழினத்தின் வரலாற்றுக்கடமை

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியைச்சேர்ந்த பெரும் எண்ணிக்கையான வாக்காளர்கள் கடந்த 2001 தேர்தலின் போது தமது வாக்குரிமையை பயன்படுத்த முடியாதவாறு தடுக்கப்பட்டதான நிகழ்வு மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்தவேண்டுமென கடந்த செவ்வாயன்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்காவை சந்தித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக்குழுவின் தலைவர் குஷ்ண ஹாண் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது இவ்வாறு இருக்க, கடந்த புதன் அன்று வன்னி இராணுவத் தலைமைப்பீடத்திற்கும் அரச அதிபர்களுக்கும் இடையே வவுனியாவில் இடம்பெற்ற வாக்களிப்பு நிலையங்களின் அமைவிடங்கள், நடைமுறைகள் தொடர்பான கலந்துரையாடலின் போது, வன்னியில் இருந்து ஓமந்தை மற்றும் மன்னார் உயிலங்குளம் ஊடாக வாக்களிக்கச்செல்லும் வாக்காளர்களில் ஆள் அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்படும் எனவும், அவர்கள் வழமையானது போன்றே சோதனையிடப்படுவார்கள் என்றும் படைத்தரப்பினரால் அறிவுறுத்தப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

இதேவேளை, சிறிலங்காவின் தேர்தல் சட்டம், வாக்களிக்கச்செல்வோர் தமது அடையாளத்தை நிரூபிப்பதற்காக ஆள் அடையாள அட்டைகளை கொண்டு செல்லவேண்டும் என்பதை எதிர்பார்க்காத அதேவேளை, ஒரு தனிநபரின் வாக்குரிமை அவரது ஆள் அடையாளம் தொடர்பான நிரூபணம் மூலமே தீர்மானிக்கப்படும் என்பதான எந்த வித முன் நிபந்தனைகளையும் கொண்டுள்ளதாக சொல்லப்படவில்லை.

எனவே, நடக்கவிருக்கும் பொதுத்தேர்தலில் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் இருந்து வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் இடங்களுக்கு-அது யுத்த சூனிப்பிரதேசத்திலோ அன்றி விசேடமாக ஒதுக்கப்பட்ட படையினரின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்திலோ அமைந்துள்ள வாக்களிப்பு நிலையங்களிற்கு - வரும் மக்களினது அடையாள அட்டைகள், ஆவணங்கள் மீதான பரிசோதனையும், சோதனை நடவடிக்கைகளும் மக்களின் இயல்பான வாக்களிக்கும் விகிதத்தை நிச்சயமாகப்பாதிக்கும்.

உண்மையில், இது வடக்குக்கிழக்கு மக்களின் வாக்களிப்பு விகிதத்தை இயன்றளவு குறைப்பதற்கும் தடுப்பதற்கும் அதன் மூலமான அவர்களின் வாக்குகளை இல்லாமல் செய்வதற்குமான திட்டமிடப்பட்ட நடவடிக்கையேயன்றி வேறொன்றும் இல்லை.

எதிர்வரும் ஏப்பிரல்-2 அன்று நடக்கவிருக்கும் பொதுத்தேர்தலுக்கு இன்னமும் பதினான்கு நாட்களே மீதமாக உள்ள நிலையில், இதுவரையில் இராணுவக் கட்டுப்பாடு தவிர்ந்த விடுதலைப்புலிகளின் கட்டுப்பாடுப் பிரதேசங்களில் வாழும் மக்கள் தமது வாக்களிப்பை மேற்கொள்வதற்கு ஏதுவான எந்தவித முடிவான நடவடிக்கைகளையும் ஏற்படுத்தாமல் காலம் கடத்துவதும், இறுதி வேளையிலேயே வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பான அறிவித்தல் மக்களுக்கு கூறப்படும் எனச்சொல்லுவதன் மூலமும், அரச தரப்பு, தமிழ் தேசியத்தின் ஏகோபித்த அபிலாசையை வெளிப்படுத்தும் தமிழர் தரப்புத்தேர்தல் முடிவிற்கான வாக்குகளை மட்டுப்படுத்துவதிலும், இல்லாமற்செய்வதிலும் குறியாக உள்ளது என்பது தெளிவாகின்றது.

எவ்வாறாயினும், எல்லாவகையான தடைகளையும் மீறி இம்முறை ஈழத்தமிழ் மக்கள் செயற்படவேண்டும் என்பதே அவசியமானது.

இலங்கைத்தீவு சுதந்திரம் அடைந்ததாகக்கூறப்பட்ட 1948 முதல் தீவில் நடாத்தப்பட்ட தேர்தல்களிலும், இத்தேர்தல் ஈழத்தமிழ்மக்களுக்கு முக்கியமானது.

இரண்டு தாசாப்தங்களுக்கும் மேலாக ஆயுதரீதியாக தாயகக்கோட்பாட்டடிப்படையில் ஈழத்தமிழ்த்தேசியவிடுதலைக்காக போராடிவரும் விடுதலைப்புலிகள் இயக்கம், தலைமைத்துவத்தினதும் போராளிகளினதும் மக்களினதும் ஏகோபித்த உறுதிப்பாட்டினாலும் தியாகத்தினாலும் அடைந்துவிட்ட மாபெரும் சாதனைகளினால், ஈழத்தமிழரின் இராணுவ வலுநிலையை சிங்கள இராணுவ வலுவுடன் சமநிலைக்கு வளர்த்துவிட்டது மாத்திரமன்றி, தீவு தவிர்ந்த, சர்வதேசத்தின் முன்னும் ஈழத்தமிழரின் அரசியற்தளத்தை விரித்துக்கொள்ளச் செய்துவிட்டுள்ளது.

இந்நிலையில், தாயகம்-தேசியம்-சுயநிர்ணயம் என ஏகோபித்துக்குரல் எழுப்பி ஒன்றிணைந்துள்ள தமிழ்த்தேசியம், தனது தேர்தல் முடிவுகள் மூலமான ஆணையை ஈழத்தமிழ்மக்களின் விடிவிற்கான ஆணையாக மாற்றியமைக்கமுடிவெடுத்துள்ளது.

அந்த மாபெரும் மக்கள் ஆணையை வழங்குவதற்காக தம்மீது திணிக்கப்படும் எல்லாத் தடைகளையும் மீறிச் செயற்படவேண்டிய வரலாற்றுக்கடமையையும் ஈழத்தமிழினம் உணர்ந்துவிட்டுள்ளது.

## தூரனின் பார்வை

# அரச பயங்கரவாதம் தொடர்பான சந்திரிகாவின் ஒப்புதல் வாக்குமூலம்

சிறிலங்காவில் தேர்தல் சமயங்களில் பொறுப்பான வாக்குறுதிகளை பல்வேறு அரசியல் கட்சிகளும் அள்ளி வீசிவரும் அதே வேளை பல்வேறுஉண்மைகளும், ஒப்புதல் வாக்குமூலங்களும் கூட வெளிவரவே செய்கின்றன.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எதிர்கட்சியினரைப் பற்றியும் எதிர்கட்சியினர் ஆளும் கட்சியினரைப்பற்றியும் கூறும் குற்றச்சாட்டுகள் வரலாற்றில் பதிவு செய்ய வேண்டிய பல ஒப்புதல் வாக்குமூலங்களை உள்ளடக்கியதாக உள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

சிறிலங்காவின் இனப்பிரச்சினையை பயங்கரவாதப்பிரச்சினையாகவும் விடுதலைப்புலிகள் இயக்கத்தினரைப் பயங்கரவாதிகளாகவும் கடந்த நூற்றாண்டு காலமாக சிங்கள அரசியல் தலைமைகளும், பேரினவாத அமைப்புக்களும் இடைவிடாது. பல கோரிக்கைகளை பொய்களைச் சொல்லிவிட்டு, பல்வேறுவகையான உத்திகளைப்பயன்படுத்தி, சர்வதேச அளவில் செய்த பிரசாரம் காரணமாக, அப்பிரச்சினையின் நிஜமான மூலங்களை உலக சமூகம் சரிவரப் புரிந்துகொள்ள முடியாமல் தவறான மதிப்பீடுகளையும் அதை தவறான அணுகுமுறைகளையும் மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

ஒருநாட்டின் அதிகார அரசும், சர்வதேச ஆதிக்க சக்திகளின் பலமும் ஒருங்கினைத்து தமது சுயநல அரசியல் அபிலாசைகளுக்கேற்ப இயங்குவதென்பது தேவையின் பாற்பட்ட அவசியம் என்பது தெரிந்த விடயமேயாகும்.

இந்த அடிப்படையில் தான் இலங்கையின் இனவிவகாரத்தை சர்வதேச சமூகம் கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்வரை கையாண்டுவந்தது.

ஆனால் கடந்த பொதுத்தேர்தலின் பின்னரான சமாதான சூழ்நிலையும் போர்நிறுத்த மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டின் அது விடயங்களும் உலகத்தின்பார்வையில் இனப் பிரச்சினையின் நிற முகம் தென்படத் தொடங்கியதன் காரணமாக சிறிலங்கா ஆட்சியாளரின் 'போலி முகங்களும் தெளியத்தொடங்கியது.

சமாதான பேச்சுக்களுக்கான சகல ஏற்பாடுகளையும் மேற்குலகு ஐரோப்பிய ஒன்றியம் செய்ய முன்வந்தபோது பிரச்சினையின் சகபரிமாணங்களையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது எனலாம். இலங்கையில் இன்றுள்ள பயங்கர வாதப் பிரச்சினையேயன்று அரசியல் ரீதியில் நியாயபூர்வமாக தீர்க்கப்படவேண்டிய இனப பிரச்சினைதான் என்ற உண்மையை உலக சமூகம் புரிந்துகொள்ளத்தொடங்கிய போது, கடந்த இருதசாப்தகால சிறிலங்கா அரசுகளின் பயங்கரவாதப் பிரச்சாரப் பூச்சாண்டிகளின் போலி முகம்வெட்ட வெளிச்சமாகியது.

இது சிங்கள அரசியல் தலைமைகளால் ஜீரணிக்க முடியாத விடையாகிப்போனது ஆச்சரியமில்லை.

இதேவேளை சமாதான முயற்சிகளில் விடுதலைப்புலிகள் ஆர்வம் காட்டுவதில்லை. அவர்கள்



வெறியர்கள், கடந்தகால சமாதான முயற்சிகளை இடைநடுவில் போரைத் தொடங்கியதன் மூலம் குழப்பியவர்கள் அவர்கள்தான் என்ற இன்னொரு குற்றச்சாட்டும் பொய்யானது என்பதையும் ரணில் அரசுடனான விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைகள் நிரூபித்தமையானது சிங்கள அதிகாரபீடங்களுக்குக் கிடைத்த மற்றொரு பின்னடைவேயாகும்.

இரண்டாண்டு காலத்துக்கும் மேலாக நீடித்த பேசசுவார்த்தை முயற்சிகளும் போர் நிறுத்தமும், விடுதலைப்புலிகளின் சமாதானம் மீதான, உறுதியான அரசியல் தீர்வின் மீதான பற்றுறுதியை வெளிப்படுத்திய அதேவேளை, அதனை குழப்பவும், விடுதலைப்புலிகளின் பொறுமையைச் சோதித்து, சினமூட்டி அவர்களை யுத்தத்திற்கு இழுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சனாதிபதி சந்திரிகாவும் அவரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பாதுகாப்புப் படைகளும் பலதடவை மேற்கொண்டபோதும் அவர்கள் மீது அபகண்டமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டபோதும், புலிகள் சர்வதேச சமூகத்தின் நகர்வுகள் மீது கொண்டிருந்த நம்பிக்கை காரணமாகவே பொறுமையைக் கடைப்பிடித்து தமது அமைதி முயற்சிகள் மீதான நம்பிக்கையின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினர்.

இது சிங்களப்பேரினவாதிகள் எதிர்பார்க்காத ஒன்றேயாகும்.

இதேசமயம், தமது எதிர்பார்ப்புகளுக்கு மாறாக சமாதான நடவடிக்கைகளை விடுதலைப்புலிகள் விருப்பார்வத்துடனும் அதேசமயம் தீர்க்கமான அரசியல் யுக்திகளுடனும்... திடமாக முன்னெடுத்துவந்ததை சனாதிபதியாலும் அவரது சகாக்களாலும் பொறுமையாகப் பார்த்துக்கொண்டிருக்க முடியாத நிலையை உருவாக்கியதன் விளைவே ஆட்சிக்கலைப்பும் இன்றைய பொதுத்தேர்தலுமாகும்.

பொதுத் தேர்தலில் மீண்டும் சமாதானமே மூலக்கொள்கைக்கான கருப்பொருளை கொள்ளவேண்டிய அவசியமே தென்பகுதி அரசியல் தலைமைகளுக்கு ஏற்பட்டுள்ளது. இது ஒரு வினோதமான நெருக்கடி நிலையை தென்பகுதி பிரதான கட்சிகள் இரண்டிற்கும் ஏற்படுத்தியுள்ளது.

இருதரப்பினரும் ஆளுக்காள் முறைப்பாடுகளையும், குற்றச்சாட்டுக்களையும் அள்ளி வீசுவதன் மூலம் ஒவ்வொரு தரப்பும் தாங்கள் தாங்களே சமாதானத்தின் காவலர்கள் என இனங்காட்ட முயல்வதுதான் மிகமோசமான கோமாளித்தனமாகும்.

இந்த பரஸ்பர குற்றச்சாட்டல்களும் முறைப்பாடுகளும் பல உண்மைகளை அவரவர் வாய்மொழி அறிக்கைகள் மூலமாக பிரசார மேடைகளில் இருந்து கொட்ட வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக என்றுமில்லாதவாறு 'அரச பயங்கரவாதம்' என்ற சொல் மூதல்தடவையாகத்தேர்தல் மேடைகளில் பயன்படுத்தப் பட்டுள்ளதாகக் கூறவேண்டும்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தை அரச பயங்கரவாதச் செயல் என வர்ணித்துள்ள சனாதிபதி சந்திரிகா இதற்கு அப்போதைய ஐ.தே.கட்சி ஆட்சியினரே காரணம் எனவும் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளதுடன் இந்த அரச பயங்கரவாதச்செயற்பாடே இன்றைய அவலங்களுக்கெல்லாம் காரணமாகும் என்றும் கூறியுள்ளார்.

நன்றி..சந்திரிகா அவர்களே நன்றி...

பௌத்த சிங்களப் பேரினவாத அரசு ஒன்றின் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட அரச பயங்கரவாத நடவடிக்கைகள் தான் இன்றைய இனப்பிரச்சினைகளுக் கெல்லாம் காரணம் என்றால்...

இப்போது நடைபெறுவது இனப்பிரச்சி னைக்கான அரசியல் தீர்வினை காண்பதற்கான சமாதான நடவடிக்கைகள் தான் என்றால்...

இலங்கையில் முன்னர் தாங்கள் பயங்கரவாதப் பிரச்சினைதான் உள்ளது எனக் கதிர்காமர் மூலம் உலகமெல்லாம் கத்திப்பிரசாரம் செய்யவைத்தது அரச பயங்கரவாதப்பிரச்சனை பற்றித்தான் என்பதை ஒப்புக்கொள்ளுகிறீகள் அப்படித்தானே...

இன்றைய பேச்சுக்களோ, இனிமேல் நீங்கள் மேற்கொள்ளப்போவதாகக் கூறும் சமாதானப் பேச்சுக்களை அரச பயன்கரவாதம் காரணமாக ஏற்பட்ட இனப்பிரச்சனைக்கு அரசியல் ரீதியில் தீர்வுகாண்பதற்காகத்தானே....

ஆக நீங்கள் பேசப்போவதும் விடுதலைப் புலிகளுடன் தான் என்றும் கூறியுள்ளீர்கள்...

எனவே இலங்கையில் அரசபயங்கரவாதம் காரணமாக ஏற்பட்ட இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணத்தான் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக நிறைவேற்று அதிகார சனாதிபதி சந்திரிகா அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூலத்தின் ..மூலங்களை இனியாவது சர்வதேச சமூகம் அறிந்துக்கொள்ளவேண்டும்.

ஞாபகமிருக்கட்டும்.

விடுதலைப்புலிகள் தற்போது போர்நிறுத்தம் செய்திருப்பதும், பேச்சுவார்த்தை செய்ததும் சிங்கள பௌத்த அரசபயங்கரவாத ஆட்சியாளருடனும் அவர்களின் ஆயுதப்படையினருடனும் தான்...

இதற்கான ஒப்புதலை சந்திரிகாவே தெரிவித்திருப்பது மிகப்பொருத்தமானதேயாகும்.

தனக்குப் புரியாததை எப்பொழுதுமே போற்றுவான் அறிவிலி. - ஸீஸர் லொம்ப்ரோஸோ

# பிரதேசவாதத்தின் புதியமுகம்

நிலாந்தன்

கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறிய சிலவிரிவுரையாளர்கள், மற்றும் பொறுப்புவாய்ந்த பதவிகளில் இருப்போருடன் கடந்தவாரம் உரையாடக்கிடைத்தது.

இவர்களில் ஒரு விரிவுரையாளர் சொன்னார்... "பிரதேச நலன்கள் வேறு, பிரதேச வாதம்வேறு" என்று "பிரதேச நலன்களைப் பாதுகாப்பது என்று சொல்லிக்கொண்டு பிரதேச வாதத்துள்வீழும் ஓர்நிலை தோன்றிவிட்டது" என்று.

மெய்தான். பிரதேசநலன்களும் பிரதேசவாதமும் ஒன்றில்லைத்தான்.

பிரதேசநலன்களைப் பேணவேண்டும் என்ற அக்கறை அப்பிரதேசவாசிகளுக்கு இருப்பது இயல்பானதே. அது சரியானதும் கூட. அப்படி என்றால்தான் அப்பிரதேசத்தைக் கட்டிஎழுப்ப முடியும். அதிலும் குறிப்பாக அப்பிர



தேசம் பின்தங்கியதொன்றாகவோ அல்லது அதிகம் பாதிக்கப்பட்ட ஒன்றாகவோ இருக்குமிடத்து அதன் நலன்களைப் பாதுகாப்பதிலும் அதற்கென்று விசேச முனனுரிமைகளைக் கோருவதிலும் தவறில்லைத்தான்.

ஆனால் பிரதேச நலன்கள் அல்லது பிரதேச அபிமானம் எப்பொழுது பிரதேசவாதமாக மாறுகிறது என்றால் - சில தனிநபர்கள் அல்லது குழுக்கள் பிரதேச நலன்களின் மறைவில் புகலிடம் தேடும்போதுதான். அதாவது தனிநபர் நலன்களை பொதுநலன்களுடன் மாறாட்டம் செய்யும்போதுதான். இதைச்சற்று விரிவாகப் பார்ப்போம்.

நலன்கள் என்றுவரும்போது மனிதர்கள் எல்லோருக்குமே நலன்களும் அபிமானங்களும் அவற்றின் அடிப்படையிலான பக்கச் சாய்வுகளும் இருக்கும். மதஅபிமானம், மொழி அபிமானம் , இன அபிமானம், பிரதேச அபிமானம், ஊர் அபிமானம்... இப்படிஒவ்வொரு அபிமானத்துக்கும் அதற்கேயானவரையறைகளும் விரிவும் உண்டு.

இதில் நலன்களின் வட்டம் சிறுக்கச் சிறுக்க முடிவில் அது தனிநபர்நலன்கள் என்ற ஆகக்குறுகிய சுய நலவட்டத்துக்குச் சிறுத்து விடுகிறது. நலன்களின் வட்டத்துள் ஆகச் சிறுவட்டம் சுயநலவட்டம்தான்.

மாறாக நலன்களின் வட்டம் விரிய விரிய அந்த நலன்களின் மகிமையும் புனிதமும் அதிகரித்துச் செல்கின்றன.

அதாவது நலன்கள் எந்தளவிற்குப் பொதுத்தன்மை வாய்ந்தவைகளாய்க் காணப்படுகின்றனவோ அவை எந்தளவுக்குக் குறுகிய வட்டங்களைத் தாண்டிச்செல்கின்றனவோ அந்தளவுக்கு அந்த நலன்களுக்குத் தலைமை தாங்குபவரின் தலையைச்சுற்றி எழும் ஒளி வட்டமும் விரிந்து கொண்டே போகிறது.

பொது நலனுக்காக தனது தனிப்பட்ட நலன்களைத் துறந்த தியாகிகளின் மிகநீண்ட பட்டியல் ஒன்று தமிழர்களிடம் உண்டு.

ஒரு தனிமனிதன் எப்படி எப்படி பொது நலன்களுக்காக தனது சுயநலன்களைத் தியாகம் செய்யமுடியும் என்பதற்கு கடந்தசுமார் முப்பது ஆண்டுகால ஈழப்போரில் மகத்தான உதாரணங்கள் ஆயிரக்கணக்கில் உண்டு.

ஒரு தனிமனிதன் பொது நலன்களுக்காக தனது தனிப்பட்ட நலன்களை எவ்வளவுக்கெவ்வளவு விட்டுக்கொடுக்கிறாரோ அவ்வளவுக்கவ்வளவு வரலாற்றில் அவருடைய நாமம் மகிமைப்படுத்தப்படுகிறது.

கடந்த நூற்றாண்டில் இதற்குரிய பொருத்தமான மிகப்பிரகாசமான ஒரு உதாரணம் முன்நாள் ரஷ்யத்தலைவர் கோர்பச்சேவ். ஒரு ரஷ்சியப் பேரரசின் நலன்களுக்கும் அப்பால் முழு உலகினதும் பூகோள நலன்களைக் கருத்தில் எடுத்து கெடுபிடிப்போரை அவர் முடிவுக்குக் கொண்டுவந்தார். இதில் அவர் அமெரிக்காவுக்குத் துணை போனார் என்றொரு விமர்சனம் உண்டுதான். ஆனால் தேசிய இனங்களை வலிந்து இணைத்து உருவாக்கப்பட்ட ரஷ்யப்பேரரசு தூர்ந்து போய்க்கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் வெற்றிகரமாக விட்டுக்கொடுத்து அவமான கரமான ஒரு இறுதித் தோல்வியிலிருந்தும் அவர் ரஷ்யாவைப் பாதுகாத்தார் என்று சொல்வோரும் உண்டு.

எதுவாயினும் கோர்பச்சேவ் ஒரு சகாப்தநாயகன். கெடுபிடிப்போரை முடிவுக்குக் கொண்டுவந்த ஒரு யுகசந்தியில் அவருடைய பெயர் மிகப்பிரகாசமாக துலங்கிக்கொண்டிருக்கிறது. முழுமனித குலத்தினதும் நன்மைகளுக்காக அவர் ஒரு பேரரசின் நலன்களை விட்டுக்கொடுக்கத் தயாராக இருந்தார். கடந்த நூற்றாண்டின் மகத்தான மனிதர்களில் ஒருவராக அவர் என்றென்றும் நினைவு கூறப்படு வார்.

மற்றொருவர், ஷேகுவரா கோர்பச்சேவ்விற்கு மூத்தவர் அவர்ஒரு நிகரற்ற சர்வதேசிய வாதி.

பொலிவியாவில் பிறந்து கியூபாவிற் காகப் போராடி வென்று அங்கு அமைச் சராக இருந்து பிறகந்தப் பதவியையும் துறந்துவிட்டு குவாட்மாலாவின் விடு தலைக்காகப் போராடப்போன இடத்தில் காட்டிக்கொடுக்கப்பட்டு அமெரிக்க உழவுத் துறையால் விசாரணைகள் இன்றி சுட்டுக் கொல்லப்பட்டவர். அவருக்கு தேசிய எல்லைகள் கிடையாது. ஒரு தனி மனிதன் எப்படியெல்லாம் பொது நலன்களுக்காகத் தன்னை ஒறுத்துப் போராடமுடியும், உயிர்த்தியாகம் செய்யமுடியும் என்பதற்கு மிகப்புனிதமான ஒரு முன்னுதாரணம் அவர்.

இலத்தீன் அமெரிக்காவில் அவரை நேசிக்கும் மக்களால் அவர் இப்பொழுது லத்தீன் அமெரிக்காவின் கிறிஸ்து என்று போற்றப்படுகிறார்.

சுயநலவட்டம்கரைந்து பொதுநல வட்டம்விரிய விரிய அதன் விரிவுக்கேற்ப அதற்கேயான புனிதமும் மகிமையும் கிடைக்கின்றன.

ஒரு கனிந்த மார்க்ஸியவாதியிடம் கேட்டால் அவர் சிரித்துக்கொண்டே சொல்வார் தேசிய வாதம்கூட ஒரு கட்டத்துக்குப் பின் கடக்கப்பட வேண்டியதுதான் என்று.

தேசிய விடுதலைக்காகப் போராடும் ஒரு இனம் அதன் போராட்டவளர்ச்சிப் போக்கில் பிரதேச, சாதி, பால் மற்றும் சிறுகுறுச்சி அசமத்துவங்களை எல்லாம் கடந்துபோக வேண்டியிருக்கிறது. தேசிய விடுதலை கிடைத்து விட்டபிறகு விடுதலையை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு விரித்துச்செல்லவேண்டி வரும்போது ஒரு கட்டத்தில் தேசிய எல்லைகளும் கரைந்துபோக நேரிடுவதுண்டு.

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் சாதி, மத,பிரதேச, பால் மற்றும் சிறுகுறுச்சி அசமத்துவங்கள் போன்ற உட்பிரச்சினைகளை போராட்டத்தின் போக்கில் படிப்படியாகக் கரைத்துக் கொண்டு போவதா? அல்லது அவற்றுக்கு முதலில் தீர்வுகண்டபின்பே பொது எதிரியுடன் மோதுவதா அல்லது விடுதலை பெற்றபின் இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு காண்பதா? என்ற விவாதங்கள் இன்றுவரை முடிவின்றித் தொடர்கின்றன.

இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் இப்படி ஒரு சர்ச்சை எழுந்தது. தேசிய விடுதலையா அல்லது ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கான விடுதலையா எது முதலில் பெறப்பட வேண்டுமென்று அங்கே சர்ச்சை கிளம்பியது. இதில் காந்திதேசிய விடுதலையே முதன்மையானது என்றார் இ.வே.ரா. பெரியாரும், கலாநிதி அப்பேத்காரும் சாதிகளின் விடுதலைக்கு முதலில் முதன்மை தரப்பட வேண்டும் என்றார்கள் முடிவில் காந்தியின் வாதமே வென்றது. பெரியார் காந்தியிடமிருந்து பிரிந்து போனதற்கு இதுவுமொரு பிரதான காரண மென்று கூறப்படுவதுமுண்டு.

இதில் பெரியார் கதைத்த சாதி அசமத்துவம் பற்றிய பிரச்சினை தனிய தென் நாட்டிற்கு மட்டும் உரிய ஒரு பிரச்சினையல்ல. அது முழு இந்தியாவுக்குமேயான ஒரு பொதுப் பிரச்சினை. அதை குறுகிய பிரதேசவாதங்களுடன் ஒப்பிடமுடியாது.

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் வெற்றியின் வேகத்தைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகளில் ஒன்று அந்தத் தேசிய இனம் எப்படித் தனக்குள் இருக்கும் பிரதேச சாதி, மத, பால் மற்றும் சிறுகுறுச்சி அசமத்துவங்கள் போராடிக்கடக்கிறது என்பது அதாவது அந்த இனம் எந்தளவுக்கு பொது நலன்களுக்காக தனிநபர் நலன்களையும் பிரதேச மற்றும் சிறுகுறுச்சி வாதங்களையும் விட்டுக் கொடுத்து போராடுகிறதோ அந்தளவுக்கு அது விடுதலைக்கு தகுதியுடைய இனமுமாகிறது.

இதில் ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை குறிப்பாக கிழக்கில் பிரதேசவாதம் கிளறப்படுவது என்பது இதுதான் முதற்தடவை அல்ல. முன்பு இராசதுரையும், தேவநாயகமும் பிரதேசவாதத்தின் மீதே தமது அரசியலைக் கட்டியெழுப் பினார்கள்.

குறிப்பாக ஜெயவர்த்தனவின் அமைச்சரவையில் நிதியமைச்சராக இருந்தவர் தேவ நாயகம். கல்குடாத்தொகுதியில் ஒருமுறை இவருடைய மேடைப்பேச்சொன்றைக் கேட்டு விட்டு வந்த ஒரு மூத்ததமிழர் சொன்னார். அது மிக மோசமான பிரதேசவாதம் என்று அதன் மீதுதான் தேவநாயகம் தனது வெற்றிகளைப் பாதுகாத்தார் என்று.

இந்நிலையில் பிரதேசவாதத்தின் புதியமுகமொன்று அதுவும் பொறுத்த நேரத்தில் அதாவது தமிழர்களின் ஐக்கியம் கொழும்பில் தமிழர்களைத் தீர்மானிக்கும் சக்தியாக மாற்ற இருக்கும் ஒரு தருணத்தில் திடீரென்று மேற்கிளம்பியிருக்கிறது.

கடந்த சுமார் 30 ஆண்டுகளாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படைகளாலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலனாய்வுக் கட்டமைப்புக்களாலும் சாதிக்கமுடியாதுபோன ஒரு விசயத்தை - வடக்குக் கிழக்குப் பிரிப்பை இப்பொழுது சில தமிழர்களே செய்யமுயல்வது என்பது வடக்கையும் கிழக்கையும் பிரிக்கக் காத்திருந்த எல்லாச் சக்திகளுக்கும் மகிழ்ச்சியூட்டும் ஒரு செய்தியாகிவிட்டது என்பதால்த் தான் செய்தி கேள்விப்பட்டதும் கிழக்கில் தமிழர்கள் அல்லாதோர் வாழும் பகுதிகளில் வெடிகொழுத்தி மகிழ்ச்சி ஆரவாரங்கள் செய்யப்பட்டனவாம்.

கொழும்பில் சில இடங்களில் மது அருந்தி விருந்துண்டு கொண்டாடப்பட்டதாக ஒரு தகவலுண்டு.

இது தமிழர்களின் பகைவர்களைப் பரவசப்படுத்தும் செய்திகள் மிகைப்படுத்தப்பட்டு பரபரப்பாக சுறுசுறுப்பாக விற்கப்படும் ஒரு காலம்.

இத்தருணத்தில் வடக்கிலும், கிழக்கிலும், புலத்திலுமுள்ள தமிழ் புத்திஜீவிகளும் படித்த தமிழ் நடுத்தரவர்க்கமும் ஒன்று திரண்டு சில முடிவுகளை எடுக்கவேண்டியிருக்கிறது என்று ஒரு இலக்கிய நண்பர் சொன்னார்.

பொதுவாக படித்த மத்திய தர வர்க்கம்தான் சமூகத்தின் அபிப்பிராயங்களை உருவாக்குகிறது, பரப்புகிறது. பிரதேச வாதங்களைக் கடந்து உணர்ச்சிவசப்படாது தீர்க்க தரிசனம் மிக்க முடிவுகளை எடுக்கக் கூடிய ஒரு மன அமைப்பு அதிகம் நகரமயப்பட்ட ஒரு நடுத்தர வர்க்கத்திடம் தான் காணப்படுகிறது.

நடுத்தரவர்க்கம் மௌனமாகிவிடும் ஒரு சமூகம் தன்னை இழந்துவிடும்.

குறிப்பாக, பிரதேசவாதம்,சிறுகுறுச்சி வாதம் போன்றன நகர்ப்புற வாழ்வில் ஒப்பீட்டளவில் வீரியம் குன்றிக் காணப்படுகின்றன.

பொதுவாக விவசாயப் பொருளாதார அடித்தளத்தின் மீது கட்டப்பட்டிருக்கும் கிராமங்களில் சாதி, பிரதேச, பால் மற்றும் சிறுகுறுச்சி பேதங்கள் ஒப்பீட்டளவில் அதிகம் பேணப்படுகின்றன.

நகரமயமாதல் நிகழும்போது இவை பெருமளவு கரைந்து போகின்றன. அல்லது அவற்றின் கூர் மழுங்கி விடுகிறது இதை இன்னொரு விதமாகச் சொன்னால் நகரமயமாதல் அல்லது கொஸ்மோ பொலிற்றன் மயமாதல் என்பது இவற்றிற்கு எதிரான ஒருபோக்கே.

கொஸ்மோ பொலிற்றன் என்ற ஆங்கில வார்த்தைக்குப் பொருள் - வெவ்வேறு பகுதிகளிலிருந்து வந்த வெவ்வேறுவிதமான மக்களை உள்ளடக்கியது என்பதாகும்.

எனவே நகரமய மாதல் நிகழாவிடங்களில் பிரதேச,சாதி,மற்றும் சிறு குறுச்சி அசமத்துவங்களை அரசிய லாக்குவது சுலபம்.

எனவே இதில் படித்த நடுத்தர வர்க்கம் எடுக்கப்போகும் முடிவுகள் முக்கியமானவை.

கிழக்குப் பல்கலைகழகத்திலிருந்து வெளியேறிய விரிவுரையாளர்களிடம் கேட்டேன் அங்கேயுள்ள நகர்ப்புற நடுத்தர வர்க்கம் இது குறித்து என்ன நினைக்கிறது என்று தங்களுடைய வெளியேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் விதத்தில் ஒரு திரட்டப்பட்ட சக்தியாக அவர்கள் அப்பொழுது உருவாகியிருக்கவில்லை என்று மேற்படி விரிவுரையாளர்கள் சொன்னார்கள்.

கிழக்கிலும் வடக்கிலும் புலத்திலும் உள்ள புத்திஜீவிகளும், படித்த தமிழ் நடுத்தர வர்க்கமும் ஒன்றுதிரள வேண்டிய ஒரு தருணம் இது.

கிழக்கைப் பிரித்துவிட்டு வடக்கிற்கு மட்டும் என்று ஒரு விடுதலை கிடையாது. வடக்கைப் பிரித்துவிட்டு கிழக்குக்கு மட்டும் ஒரு விடுதலை கிடையாது. தமிழர்களின் விடுதலை என்பதே வடக்கிற்கும் கிழக்கிற்கும் பொதுவான ஒன்றுதான். இதில் பிரிந்துபோவது என்பது பகைவரிடம் அந்தப்பிரதேசத்தை கையளிப்பதில்தான் போய்முடியும்.

படித்த தமிழ் நடுத்தரவர்க்கமும், புத்திஜீவிகளும் சமூகப்பொறுப்பு மிக்க எவரும் இனியும் வாழாயிருக்க முடியாது.

சில மதத்தலைவர்களிடமும் பொறுப்பைக் கையளித்துவிட்டு இனியும் சும்மாயிருக்க முடியாது. இத்தகைய ஒரு தருணத்தில் பேசாமலிருப்பது என்பது இவ்வளவு வியத்தகு தியாகங்களைச் செய்த இத்துணை வீரமாகப் போராடிய ஒரு இனத்தின் புத்திஜீவிகளுக்கு அழகில்லை. கௌரவமுமில்லை.

★★★

எவன் தன்னந்தனியாகத் தனித்து நிற்கின்றானோ, அவனே உலகில் வலிமை மிகுந்தவன். – ஹென்றிக் இப்ஸென்

# நறுக்கென...

## ஊருக்கு உபதேசிக்கும் சந்திரிகா



சிறிலங்காவின் தலைநகர் அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றதோ, இல்லையோ அதனை ஆட்டிப்படைப்பவர்கள் பாதாள உலகக்கும்பல்கள் எனப்படும் "மாபியா" குழுக்களைச் சேர்ந்தவர்கள் தான் என்பதில் ஐயமில்லை. கொழும்பில் எந்த நாளும் எத்தகைய பயமுமின்றி, சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழமுடியாத நிலைமை பாதாள உலகக்கும்பலைச் சேர்ந்தவர்கள் உருவாக்கியுள்ளார்கள் என்பதே உண்மையாகும்.

இது தேர்தல் காலம். இப்பொழுது பாதாள உலக மாபியாக் கும்பலைச் சேர்ந்தவர்களின் காட்டில்தான் பெருமழை. தென்னிலங்கைப் பெரும்பான்மைக் கட்சிகளின் வன்முறைத் தேர்தல் நடவடிக்கைகள் அனைத்திற்கும் காரணம் இவர்கள்தான்.

எதிர்க்கட்சி வேட்பாளரை விரட்ட, அவரின் ஆதரவாளரை அச்சுறுத்த இன்னும் சற்று அதிகம் மேலேபோய் அவர்கள் மீது தாக்குதல்களை நடத்தி, ரத்தக்கறையை உண்டுபண்ணி, நியாயமானதும், சனநாயக ரீதியானதுமான ஒரு தேர்தல் தமக்குச் சாதகமில்லாத ஒரு தொகுதியில் நடைபெறுவதைத் தடுக்க... பாதாள உலகத்தவரின் துணையை நாடிப் பணிந்து நிற்றல் தென்னிலங்கைப் பேரினவாத அரசியல்வாதிகளின் சனநாயக கலாச்சாரமாகிவிட்டது. அதாவது தடுக்கவே முடியாத பாரம்பரிய அரசியல் நடவடிக்கைகளில் ஒன்றுமாகிவிட்டது.

இப்பத்திரிகையை நீங்கள் படிக்கும் வேளையில் தென்பகுதி அரசியல் வன்முறைகளின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் அதிகமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தேர்தல் நெருங்க நெருங்க வன்முறைகளின் அதிகரிப்பு வேகம் அதிகமாகிக்கொண்டே போகும்.


இந்த நிலையில் சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா விட்டுள்ள அறிக்கை ஒன்று விசித்திரமானதாக உள்ளது. அதாவது அரசாங்க அமைச்சர்கள் மாபியாக் குழுக்களுடனான தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாதாம். அப்படி இருந்தால் பொலிசாரால் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டக் கூடியதாக இருக்குமாம்.

கடந்த அரசில் சனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவிலேயே (PSD) ஒரு புகழ்பெற்ற மாபியா கும்பல் பேர்வழியான 'பித்தேகா சஞ்சீப' என்பவர் இருந்துகொண்டு செய்யும் அட்டகாசங்களைக் நாடறியும்... அவரது மாமனாரும் முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரான ரத்வத்தைக்கும் அவரது புத்திர சிகாமணிகளுக்கும் பாதாள உலகக் கும்பல்களோடு இருந்த தொடர்பும் அதனை வைத்து அவர் கடந்த பொதுத்தேர்தலின்போது நடத்திய காட்டுமிராண்டித் தனமான வன்முறைகளையும் அவற்றின் போது உடத்தலவின்னவில் அப்பாவிப் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டதையும் உலகமே அறியும்.

இந்த விறுத்தத்தில் அம்மணி மாபியாக் கும்பல்களுடன் அமைச்சர்கள் தமது தொடர்புகளைத் துண்டித்துக்கொள்ளவேண்டும் என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

'தனக்கல்லடி உபதேசம் ஊருக்குத்தான்..' என்ற கதைபோல இருக்குதோ இல்லையோ...?

## கேள்வியும் பதிலும்



சின்னப்பையன் தன் தந்தையிடம் கேட்டான்.

'அப்பா அந்த ஆமிக்காரர்களுக்கு நடுவில் போறமாமாவை ஆமி பிடிச்சுக்கொண்டா போகுது?'

'இல்லை மகனே... அவர் தேர்தலிலை போட்டி போடுற ஆள்.... பிரச்சாரம் செய்துகொண்டு போகிறார்....!'

'பிரச்சாரம் செய்ய ஏன் ஆமிகளோட போகவேணும் அப்பா? அவைக்கு ஆமிக்குப் பயமில்லையே...?"

"இல்லை அவை ஆமிக்கு உதவுற ஆக்கள். அவையள ஆமி ஒண்டும் செய்யாது"

"அப்ப அவை சிங்கள ஆக்களே...?

"இல்லை அவையும் தமிழ் ஆக்கள் தான்....!"

"அப்ப ஏன் ஆமிக்காரர் அவையளப் பாதுகாக்கினம்?'

"அவையளுக்கு யாரும் எதுவும் செய்துவிடக்கூடாதெண்டுதான்..."

"ஏன் நாங்கள் தமிழ் ஆக்கள்தானே. எங்களுக்கைதனிய வரப் பயந்து ஆமியோடை போக வெக்கமில்லையே...!"

"அது இருந்தா ஏன் அப்பிடிச் செய்யப்போகினம்....?"

"பிறகேன் எங்களுக்குப் பிரச்சாரம் செய்து தங்களுக்கு வோட் போடச் சொல்லிக் கேக்கினம்... அங்காலை அவைக்குப் பயமில்லாத வேறு இடத்திலை கேக்கலாமே...!"

"அங்கை ஒருதரும் இவைய நம்பமாட்டினம்..."

"ஏன்..."

"தங்கடை சொந்த இனத்தையே குழப்பி அரசியல் இலாபம் தேடுறவையை மற்ற இனத்தவர் எப்படி நம்புவினம்?"

"அப்ப இவர் எங்களைக் குழப்புற ஆள் என்றே சொல்லுறீங்க அப்பா?"

"அவர், ஆமிக்காரர் ஆயுதங்களுடன் சுற்றிப் பாதுகாக்க, நடுவில் செல்வதில் இருந்தே தெரியவில்லையா?"

"தெரியுது...அப்பா... ஆனால், எப்பவும் ஆமிக்காரர் இவருக்குப் பாதுகாப்பா இருப்பினமா?"

"அவரைத் தங்களுக்குத் தேவைப்படும் வரை தான் இருப்பினம்"

"அதுக்குப் பிறகு...?"

"ஆண்டவனுக்குத்தான் தெரியும்... அதாவது அவரை ஆளுகின்றவைக்குத்தான் தெரியும்..."

"அப்பிடியென்றால்...?"

"அடிமையை என்ன செய்யிறதென்று எஜமானுக்குத்தானே தெரியும்..."

"ஓஹோ... ஹோ...!"

## ஆனந்த சங்கரி + டக்ளஸ்தேவானந்தா



அந்த பிரசித்திபெற்ற நோர்வேயின் விசேட தூதுவர் தனது தலைமையிலான ஒரு குழுவினருடன் யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் விஜயம் ஒன்றை மேற்கொண்டு பல்வேறு தரப்பினரையும் சந்தித்துச் சென்றாரல்லவா?

ஆனால், யாழ்ப்பாணம் வந்த அந்தச் சமாதான ஏற்பாட்டு நாட்டுத் தூதுவர் தன்னைச் சந்திக்காது போனதில் விசனமும் கோபமும் ஒருவர் அடைந்திருக்கிறார்.

நோர்வேயின் விசேட தூதுவர் சந்திக்காமல் போய்விட்ட அதிமுக்கிய மனிதர் என்று தன்னைத்தானே நினைத்துக் குமுறியுள்ள மனிதர் யாருமில்லை....

அந்தப் பிரபலமான-தமிழின விரோதியாகத் தன்னை இனம்காட்டிக்கொண்டுள்ள ஆனந்தசங்கரியாரேதான்.

இதுவரை காலமும் கொழும்பிலும், இந்தியாவிலும் ஏனைய வெளிநாடுகளிலும் இருந்துகொண்டு அரசியல் பண்ணிக்கொண்டிருந்த ஆனந்தசங்கரியார் தேர்தலுக்காகத் தமிழ் மக்களின் வாக்கு வங்கிகளைச் சிதைத்து, தமிழ்த்தேசியத்தின் ஒருமைப்பாட்டுணர்வைக் குலைத்துத் தென்னிலங்கை அரசியல் அதிகாரபீடத்தின் அபிலாசைகளை நிறைவேற்றும் பணிப்பொறுப்பை விசுவாசமாக ஏற்றுக்கொண்டு குடாநாட்டுக்கு வருகை தந்து படைத்தரப்பினர் புடைசூழ உலாவந்து தன் சொந்த மக்கள் என உரிமை பாராட்டித் தமிழ் மக்களை மிரட்டிக்கொண்டு பிரச்சாரம் செய்துவரும் சங்கரியாரின் சங்கதி சர்வதேசத்திற்கும் புரிந்த ஒன்றாகும்.


சொல்ஹெய்ம் அண்ணாச்சியைச் சந்திக்காமல் தவிர்த்தமைக்கு உண்மையான காரணம் எதுவோ தெரியாது. ஆனால், சங்கரியார் சமாதான எதிர்ப்புக் கூட்டணியான சந்திரிகா+ஜே.வி.பி முன்னணிக்கு பின்னணியாகும் ஒருவர் என்பது அந்த நோர்வே ராஜதந்திரிக்குப் புரிந்திருக்கக் கூடும்.

விடுதலைப்புலிகளைப் பற்றி முறைப்பாடுசெய்ய சங்கரி அண்ணாச்சியார் சொல்ஹெய்மை பயன்படுத்தியிருப்பாராம்... அவர் தன்னைச் சந்தித்திருந்தால் இதுபற்றியெல்லாம் சொல்லியிருப்பாராம்... ஏன் இதைப் பற்றி அவரின் எஜமான்-எஜமானிகளான... அயலக-உள்ளக அதிகார பீடத்தலைமைகளிடம் அழுது வடித்திருக்கலாமே....

தனது உயிருக்கு விடுதலைப்புலிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று சொல்ஹெய்மிடம் சொல்லக்காத்திருந்தாராம்... அதெப்படி? அன்புள்ள தம்பி என விழித்து தேசியத் தலைவருக்குத் தேர்தல் பிரச்சார உத்தியுடனான கடிதம் ஒன்றை அச்சிட்டு ஊடகங்களுக்கு அனுப்பிய அண்ணாச்சி சங்கரியாருக்கு விடுதலைப்புலிகளால் ஆபத்து ஏற்படுமாம்? யாரின் அழுத்தங்களுக்குப் பணிந்து இனத்துரோகக் கூத்தை ஆடுகின்றாரோ அவர்களால் தான் அவருக்கு ஆபத்து என்பதை அறியாது, ஆனந்தமாய்த் தமிழினத்தைச் சங்காரம் செய்ய நினைப்போர்க்கு எடுபிடி ஆகிவிட்டார் ஆனந்தசங்கரியார்...

டக்ளஸைச் சந்தித்த சொல்ஹெய்ம் சங்கரியாரைப் புறக்கணித்தமைக்குக் காரணம் இருவரில் ஒருவரைச் சந்தித்தால் போதும் என்றும் அவர் இருக்கலாமல்லவா?

## சிங்கள அரசின் கருணைக்கு யாசிக்கும் கருணா



சுயநலத்துடன்-தமிழ்த்தேசியத்தின் நலன்களைத் தூக்கியெறிந்துவிட்டு-அந்நிய மற்றும் பேரினவாதசக்திகளின அரவணைப்புக்குள் சிக்கிப் பிரதேசவாதம் என்ற நஞ்சைக் கக்கியபடி, தமிழர் தாயக பூமியின் ஒருமைப்பாட்டைச் சிதைக்கும் அறிவிலித் தனமான முயற்சியில் தன்னிச்சையாக ஈடுபட்டு, கிழக்கில் ஒரு குழப்பநிலையைத் தோற்றுவித்துக் குதூகலித்துக்கொண்டிருக்கும் கருணா தொடர்பாக வெளிவந்துகொண்டிருக்கும் செய்திகள் அவரின் துரோகத்தனத்தை ஒவ்வொன்றாக வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து கொண்டிருக்கிறது.

தலைமைக்குத் துரோகமாக, வரித்துக்கொண்ட கொள்கைகளுக்கும் இலட்சியத்திற்கும் துரோகமாக, அவரது தாய் மண்ணிற்கும் இனத்திற்கும் துரோகமாக, தான் மிகவும் நேசிப்பதாகப் பீற்றிக்கொள்ளும் தன் பிரதேச மக்களுக்கும் துரோகமாக அவர் இதுவரை காலமும் மிக நுட்பத்துடன் மேற்கொண்ட நடவடிக்கைகள் பேரினவாதிகளின் வெறும் வாய்க்கு அவலாகியுள்ளன.

தனித்தியங்கும் முடிவை அவர் அறிவிக்க முன்னர் தன்னால் மிகவும் மோசமான எதிரியென ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்ட, அவரைக் கொல்வதற்கென்றே தனியான ஆழ ஊடுருவித் தாக்கும் அணியொன்றை மட்டக்களப்புக்குள் அனுப்பிவைத்தவரான, தமிழினத்தின் மீதான கொடூரமான போரொன்றைத் தலைமை தாங்கி நடத்தி மண்ணையும் மக்களையும் நாசம் செய்தவரான, சிறிலங்கா சனாதிபதியுடன் தொடர்புகொண்டு தனக்கு உதவியும் பாதுகாப்பும் கேட்டிருந்தாராம்...

ஆங்கில-சிங்கள ஊடகங்கள் இந்த அவமானத்தைத் தலைப்புச் செய்திகளாக வெளியிட்டு கெக்கலிக்கின்றன...

எந்த இராணுவத்திற்கு எதிராகப் போர் நடத்தினாரோ அந்த இராணுவத்தினரிடம் கூட்டு ரோந்து நடத்த உடன்பட்டு வருமாறு கேட்டு அதனை அவர்கள் நிராகரித்திருக்கிறார்கள். இதனைத் தென்னிலங்கை ஊடகங்கள் ஏளனமாகச் செய்திகளாக்கியுள்ளன.

இதுதான் கருணா தன்னை நம்பிக் களத்தில் வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களுக்கும், ஏனைய போராளிகளுக்கும், தனது பிரதேச மக்களுக்கும் பெற்றுத்தரும் கௌரவமா?... வெட்கம்!


ஊதாரித் தனத்தை நீக்க முயலும் இந்த அவலம் கருணா ஒரு துரோகியிலும் கீழான நிலைக்குக் கொண்டுபோய்விட்டுள்ளது தான் அசிங்கமும் அவமானமுமாகும்.

இதனை அவர் தனது அப்பட்டமான சுயநலத்தின் அடிப்படையில்.. அறநனைந்தவனுக்கு கூதலென்ன... குளிரென்ன..., அவமானங்களை உணரத் தவறியவனுக்கு வெட்கமென்ன... மானமென்ன... என்ற நிலையில் ஜீரணிக்கத் தொடங்கிவிட்டார் என்றே தோன்றுகின்றது...

இது எதிரியின்-ஆக்கிரமிப்பின் பிரச்சாரத்திற்கு கைகொடுக்கும் கருணா அவர்களின் கருணைக்கு யாசிக்க வைத்துவிட்டதுதான் அவமானத்திலும் அவமானம்.

**செங்குட்டுவன்**

வாழும் கலையே, தத்துவம். - ப்ளூட்டார்க்




# மக்களுக்கான முதற்கடமை

**சிறி. இந்திரகுமார்**

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் இந்த நிகழ்காலம் வரலாற்றின் கனமான ஒரு பதிவை மேற்கொண்டதொரு காலமாக நிச்சயம் இருக்கப்போகிறது.

இதற்கு எமது தேசிய விடுதலைப்போரில் புதியதொரு யுகப் பிரவேசமாக எமது விடுதலைக்கான பயணம் அமைந்துள்ளமை முக்கியத்துவம் பெறுகிறது.

எப்படியென்றால் நிகழ்காலத்தில் தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக இரு வேறு முக்கிய சம்பவங்களை எதிர்கொள்கிறார்கள்.

ஒன்று-தமிழ்த்தேசியம் ஒன்றுபட்டு எதிர்கொள்ளும் ஒரு தேர்தலைச் சந்திப்பது. இரண்டு-கிழக்கில் புறச் சக்திகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு தனிமனித நெருக்கடி.

நிச்சயமாக இந்த இரண்டு பிரதான அம்சங்களும் தமிழ் மக்களின் வாழ்வோடும் அவர்களின் வரலாற்றின் நகர்வோடும் இசைவுபெறுகின்ற அவர்களின் நகர்வில் தடம் பதிக்கின்ற இரு காரணங்களாக அமைவதனாலாகும்.

இந்தவகையில் இந்த இரண்டுவகையான அரசியல் நெருக்கடியில் தமிழ் மக்கள் இவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தெளிவுபட வேண்டியது.

இதற்கு முதலில் நாம் நிகழ்காலத் தமிழ்த்தேசியத்தின் அசைவியக்கத்தின் கனத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். இதன் மூலம் இரண்டு காரணிகளையும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளக்கூடியதாகத் தங்களைத் தயார்படுத்தமுடியும்.

முதலில் நாம் நிகழ்காலத் தமிழர்தேசிய அரசியல் அசைவியக்கத்தைப் புரிந்துகொள்ள கடந்த காலத்தை நாம் நினைவுகொள்ள வேண்டும்.

ஏறத்தாழ ஐம்பதுவருட காலத்திற்கு மேற்பட்ட தமிழர் நெருக்கடிமிகு அரசியல் வரலாற்றில் சுமார் முப்பது வருடகாலத்தைக்கொண்ட எழுச்சிமிகு புலிகளின் தலைமையிலான தமிழர்களின் விடுதலைக்கான பயணத்தில் நாம் வரித்துக்கொண்ட இலட்சியத்தைப் புரிந்துகொள்வது அவசியம்.

எங்களுடைய விடுதலை வரலாற்றின் ஒவ்வொரு கட்டப் பயணத்தின் போதான ஒவ்வொரு சமாதானப் பேச்சுக்களிலும் அதாவது திம்பு முதல் ஒஸ்லோ வரையான பேச்சின் பயணங்களில் புலிகள் வலியுறுத்திய தமிழ் மக்களுக்கான சுயநிர்ணயம் என்பது எவராலும் புறந்தள்ள முடியாத ஒன்றாகவே இருந்து வருகிறது.

இந்தச் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் வகையிலேயே புலிகள் இயக்கம் தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஒரு அரசிற்கு இணையாக சமாந்தர அரசு ஒன்றை நிறுவியிருப்பது தமிழர் விடுதலைக்கான பேச்சுக்களில் புலிகள் இயக்கத்தை முதல்நிலைப்படுத்தி வந்துள்ளது.

இதன் பயனாக தமிழர்கள் வலியுறுத்தும் இந்தச் சுயநிர்ணயத்தை எவராலும் புறந்தள்ளவும் முடியவில்லை. அதேநேரம் புலிகள் இந்தச் சுயநிர்ணய உரிமையை எவரையும் புறந்தள்ள அனுமதிக்கவும் இல்லை. தங்களுடைய ஒவ்வொரு பேச்சுக்களின் போதும் தமிழ் மக்களுக்கான விடுதலை என்பது சுயநிர்ணய உரிமையின் அடித்தளத்திலிருந்து கட்டியெழுப்பப்படும் ஒரு பலம்பொருந்திய விடுதலையாகவே பெற்றுவிட வலியுறுத்தி வந்துள்ளனர்.

இதன் அடிப்படையில்தான் நாம் மேற்சொன்ன இரண்டு நிகழ்வுகளையும் நோக்க வேண்டும்.

அதாவது தமிழர்களின் தன்னாட்சி அதிகாரத்திற்கான திட்டவரைபொன்றைப் புலிகள் சிறிலங்கா அரசிற்குச் சமர்ப்பித்திருக்கும் நிலையில் அது தொடர்பான பேச்சுக்கள் இன்னும் ஆரம்பிக்காத நிலையில் ஒரு குறைப்பிரசவமாக சிறிலங்காவில் தோன்றியிருக்கும் தேர்தல் காலச் சூழ்நிலையில் புலிகள் இயக்கம் இந்தத் தேர்தலை தமிழ் மக்களின் தன்னாட்சி அதிகாரத்திற்கான ஆணையைப் பெற்றுவிடும் தேர்தலாகப் புலிகள் இயக்கம் பயன்படுத்த முனையும் நிலையில் புலிகளின் இந்த நகர்வைக் கண்டு அஞ்சிய தமிழர்களின் விடுதலையை விரும்பாத சக்திகளின் ஒரு நகர்வுதான் கிழக்கின் நெருக்கடி.

எப்படியென்றால், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் வரையப்பட்டிருக்கும் தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபினூடாகப் பெறமுயலும் தமிழர்களுக்கான விடுதலையைச் சிதைக்க வேண்டுமாயின் முதலில் தமிழ் மக்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமைக்கான ஏதுநிலையை உடைத்தெறியவேண்டும்.

அவ்வாறு உடைத்தெறிய வேண்டுமாயின் சுயநிர்ணய உரிமைக்குள் அடங்கும் தமிழ் மக்களுக்கே உரித்தான அம்சங்களை இல்லாது செய்தல் வேண்டும்.

அந்தவகையில் சுயநிர்ணய உரிமையைக் கோரும் ஒரு இனத்திற்கு இருக்கவேண்டிய அவர்களின் பாரம்பரிய வரலாற்று ரீதியான அவர்களுக்கே உரித்தான தாயகத்தைச் சிதைக்கும் ஓர் அங்கமாக ஏற்படுத்தப்பட்ட ஒரு நெருக்கடியே இன்றைய நெருக்கடி.

இது ஒரு போர் மூலம் சிதைக்க முயலும் தமிழர் தாயகத்தை அதில் வெற்றிபெற முடியாது போனமையால் இன்னுமொரு வழியால் பெற்றுவிட முயலும் ஒரு பழைய இதுவுமோர் போர் வடிவமே.

ஆனால், இந்த நகர்வில் தமிழர் தாயகத்தைச் சிதைக்க நினைத்த சக்திகளால் ஆரம்ப கட்டங்களிலேயே புலிகள் இயக்கத்தின் எதிர் வியூகத்தின் முன் தோற்றுப் போய்விட்டமை நல்லதொரு உதாரணம். இந்தச் சக்திகளின் விருப்புக்கு இசைவாகச் செயற்படத்துணை போன கருணா தமிழர் தலைமையால் தனிமனிதனாக்கப்பட்டுள்ளதுதான்.

இதன்பயன்தான் இன்று கருணா ச்ர்வதேச ரீதியாகப் பெற்றுக்கொள்ள முயன்ற தனக்கான அங்கீகாரமும், சிறிலங்கா அரசோடு செய்துகொள்ள முயன்ற ஒப்பந்தமும் கருணாவுக்கு எதிராக கிழக்கில் தோன்றியிருக்கும் மக்களின் எதிர்ப்பும் என ஒட்டுமொத்தத் தமிழ்த்தேசிய இனத்தாலும் இன்று புறந்தள்ளப்பட்டு வருவதாகும்.

அத்தோடு தமிழர் தலைமை தனக்கான ஒரு பலம்மிக்க தளத்தைக் கொண்டியங்கும் பலம்பொருந்திய ஒரு அரசிற்கு நிகரான பலம் பொருந்திய சக்தியாகச் செயற்பட்டதனாலேயே ஆகும்.

இந்த நிலையில் இந்த இரண்டு சம்பவங்களிலும் தமிழ் மக்கள் ஒருமுக ரீதியாக எதிர்கொள்ள வேண்டியது இந்தத் தேர்தலே ஆகும். இந்தத் தேர்தல் அந்தளவுக்கு முக்கியம்பெறும் ஒரு தேர்தலாக அமைகிறது.

இந்தத் தேர்தலைத் தமிழ் மக்கள் வெற்றிகொள்வதன் மூலம் அதிகமான பிரச்சினைகளுக்கும் அதிகமான நெருக்கடிகளுக்கும் தீர்வொன்றைக் முன்மொழிவதோடு எதிரிகளின் தமிழர் தாயக சிதைப்பு எண்ணத்தின் அடிமானத்தை ஆட்டம் காணச் செய்யமுடியும்.

இதனடிப்படையில் தமிழ் மக்கள் முன் உள்ள இன்றைய முதன்மை விவகாரம் நிச்சயம் இந்தத் தேர்தல் மட்டுமே கருணாவின் பிரச்சினையல்ல.

இந்தத் தேர்தலை வெற்றிகொள்வதன் மூலம் இன்று கிழறிவிடப்பட்டிருக்கும் பழைய தூர்ந்துபோன பிரதேசவாதம் தோற்கடிக்கப்படுவதோடு தமிழர் தேசம் மீண்டுமொருமுறை நிரூபிக்கப்பட ஏதுவாக இருக்கும்.

இதன்மூலம் தமிழர் தேசியம், தமிழர் தன்னாட்சி, தமிழர் தாயகம், தமிழர் பலம் என்பவற்றோடு தமிழர் மானமும் காக்கப்படும்.

போரியல் நிபுணன் சன்சூவின் போர்க்கலை நூலில் கூறப்பட்ட ஒரு போர்க்கலை இங்கு நினைவுகூர வேண்டியது அவசியமாக இருக்கிறது.

அது போருக்கு மட்டுமல்லாது இன்றைய தமிழர் யதார்த்தத்திற்கும் பொருந்துவதாக இருப்பதனால் ஆகும்.

"ஒரு திறன் மிக்க தளபதி, தான் எதிரி இருக்கும் இடத்துக்குக் கொண்டுசெல்லப்படுவதற்குப் பதிலாக தனது விருப்பத்தை எதிரி மீது திணித்து அவனைத் தானிருக்கும் இடத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்ற போர்க்கலையை மறந்துபோன கருணாவின் செயற்பாடு இங்கு நினைவுபடுத்தப்படவேண்டியது.

ஏனென்றால், சன்சூவின் இந்தக் கூற்று கிழக்கில் தோன்றிய நெருக்கடிக்கு காரணமான கருணாவுக்கு இது பொருத்தமாக இருக்கும். ஏனென்றால், இந்தக் கலையில் தோற்றுப்போன ஒருவர் தான் கருணா.

ஏனென்றால், எதிரி விரும்பிய இடத்துக்கே இன்று கருணா சென்றுள்ளார்.


இந்தவகையில் முப்பது வருடகால புலிகளின் வரலாற்றில் இதனைவிட எத்தனையோ நெருக்கடிகளையும் அபாயங்களையும் எதிர்கொண்டே இன்று புலிகள் இயக்கம் தனது விடுதலைவரலாற்றில் பயணிக்கிறது.

முன்பு புலிகள் இயக்கம் சந்தித்த நெருக்கடிகளையும், அபாயங்களையும் மிகத்திறமையாகவே தமிழர் தலைமை வெற்றிகொண்டு புதுப்பலத்தோடு நிமிர்ந்திருக்கிறது. ஒவ்வொரு நெருக்கடியிலிருந்தும் புலிகள் இயக்கம் நிமிர்ந்தபோதும் அது தன்னை என்றுமில்லாதவாறு அதிக வீச்சோடுதான் நிரூபித்திருக்கிறது.

இதனைக் கடந்தகால வரலாற்றைத் திரும்பிப்பார்க்கும் போது தெளிவாகவேதெரியும். எத்தனையோ ஒப்பந்த சூழ்ச்சிகள், எத்தனையோ பெருமெடுப்பிலான படையெடுப்புகள், எத்தனையோ மோசமான துரோகத்தனங்கள் இவையெல்லாவற்றையும் புலிகள் இயக்கம் வெற்றிகொண்டே தன்னை நிரூபித்திருக்கின்றது.

அந்தவகையில் இன்றைய நெருக்கடியைப் புலிகள் இயக்கம் நிச்சயம் இலகுவாக வெற்றி கொள்ளும். ஆனால், இதற்குச் சமாந்தரமாக மக்களே புலிகள், புலிகளே மக்கள் என்றாகிய இன்றைய நிலையில் மக்கள் இந்தத் தேர்தலைச் சரியான வகையில் தங்களுக்குக் கிடைத்த அரிய வாய்ப்பாக இந்தத் தேர்தலில் வெற்றிபெற வாக்களிப்பது மிக அவசியம். ●

## மதவடி மயிலர்




**செய்தி:- மூன்று பொறுப்பாளர்களை நீக்கினால் மீண்டும் தான் விடுதலைப்புலிகளுடன் இணையத்தயார் என்கிறார் கருணா.**

மயிலர்:- பொறுப்பற்ற வேலை செய்திட்டு... பொறுப்பற்ற கதையுமெல்லே பேசுகிறார். பாருங்கோ... துரோகிகளை எந்த வகையிலும் புலிகள் தங்களுடன் இணைத்துக்கொள்வதில்லை. மிஸ்டர் கருணா...உங்களை சேர்த்துக்கொள்ளக் கூடியவர்களுடன் போய் இணைந்து அவர்களுக்காவது விசுவாசமாய் இருங்கள்... அவ்வளவுதான்.

**செய்தி:- இராணுவத் தளத்தில் பாரியவெடிவிபத்து ஆயுத கொள்கலன் நாசம.**

மயிலர்:- நாசமாய்ப் போறவங்களின்ரை ஆயுதக்கொள்கலன் நாசமானது நல்லது தான் பாருங்கோ... தளத்துக்குள்ளை வெடிவிபத்தென்றால்... என்னமாதிரி? அதுக்குள்ளை ஆரும் சமாதான சக்திகள் இருக்கினமே..! அல்லது புது ஆயுதக்கொள்வனவுக்காக அவையே வெடிக்க வைத்திருக்கவும் கூடும் என்ன நான் சொல்றது விளங்குதே....

**செய்தி:- ஆனந்தசங்கரியின் துண்டுப்பிரசுரங்கள் பொதுமக்களால் பறித்து எரிப்பு...**

மயிலர்:- இது சங்கரியாருக்கு எரிச்சல் தரும் சங்கதி என்று சொல்லுங்கோவன்... பொறுத்த சந்தர்ப்பத்தில் காலைவாரி இனத்தின் ஒருமைப்பாட்டை சிதைக்க நினைப்பவனை சனம் மன்னிக்காது பாருங்கோ. இனி இப்படியான ஆக்களை தமிழ் சனம் துண்டைக்காணோம், துணியைக்காணோம் என்று ஓடும் வரை தூக்கிக்கொண்டு தயாராய் இருக்கும்.

**செய்தி:- மக்களின் தேவைகளை உணராதவர்களே தேர்தலுக்கு வழிவகுத்துள்ளனர் என்கிறார் ரணில்.**

மயிலர்:- அவர்கள் தங்கடை தேவைகளை உணர்ந்து தான் மோதலை நடத்துவார்கள்... தேர்தலையும் நடத்துவார்கள் என்பது ரணிலுக்கு தெரியாதே... எல்லாரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தானே...!

நேர்நோக்கு

# எல்லையற்ற மீறல்கள்...

அ

அண்மையில் தனியார் ஊடகங்கள் தேர்தல் காலத்தில் கடைப் பிடிக்கவேண்டிய நெறிமுறைகள் குறித்து எடுத்துக்கூறப்பட்டதற்கு பலரும் வரவேற்புத் தெரிவித்தனர். தேர்தல் காலத்தில் பொதுமக்கள் அனைவரது கருத்துக்களையும் கேட்டுத் தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டிய நிலையுள்ளதால் இது அவசியமாகிறது.

ஆனால், இந்த நெறிமுறைகளைத் தனியார் ஊடகங்களைவிட சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களே அதிகம் மீறிவருகின்றன. பொதுமக்களின் வரிப்பணத்தில் செயற்படும் இவ் ஊடகங்களை அதிகாரத்திலுள்ள ஒரு சார்பினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திவரும் போக்கே காணப்படுகிறது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்தவரை ஊடகத்துறையை என்றும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவே விருப்பமுடையவராக இருக்கின்றார்.

கடந்த வருட இறுதியில் அவர்மேற்கொண்ட அமைச்சுப் பறிப்பில் இந்த ஊடகத் துறையும் ஒன்றாகும். உள் துறை, பாதுகாப்பு ஆகிய இரு அமைச்சுக்களையும் பறிப்பதற்குக் காரணங்கள் எனக் கூறிச் சிலவற்றை வெளியிட்ட போதும் ஊடகத்துறையைப் பறித்ததற்கான காரணத்தை அவர் கூறவில்லை. ஆனால், ஊடகத்துறையைப் பறித்த அவரது செயல் விரைவில் ஆட்சிக் கலைப்பு நடைபெறப்போகிறது தேர்தல் வரப்போகிறது என்பதற்குக் கட்டியம் கூறியது.

இதேவேளை, 1994 ஆம் ஆண்டு தேர்தல்களின் போது ஐந்து சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்படும் என்பது பொதுசன ஐக்கிய முன்னணி வெளியிட்ட வாக்குறுதிகளில் ஒன்றாகும். அதாவது தேர்தல், நீதி, பொலிஸ், நிர்வாகம், ஊடகம் ஆகிய ஐந்து துறைகளுக்குச் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்படும் என அவர் வாக்குறுதி வழங்கியிருந்தார். ஆனால், இவற்றில் எதனையும் அவர் தனது முதலாவது ஆறு ஆண்டுகால ஆட்சியில் அமைக்கவில்லை. பின்னர் பொதுசன ஐக்கிய முன்னணிக்குள் நெருக்கடி ஏற்பட்டு ஜே.வி.பியுடன் நன்னடத்தை ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட போது இந்த ஐந்து சுயாதீன ஆணைக்குழுக்களையும் அமைக்க ஜே.வி.பி வலியுறுத்திய போதும் ஊடகத்துறை தவிர்ந்த ஏனைய நான்கு துறைகளுக்கே அவர் சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்க ஒப்புக்கொண்டார்.





இவ்வாறு ஊடகங்களைத் தம்வசம் வைத்திருப்பதில் அதிலும் அரச ஊடகங்களைத் தன் பொறுப்பிலேயே வைத்துக்கொள்வதில் தீவிர கவனம் செலுத்திவரும் சந்திரிகா இம்முறை ஊடகத்துறையைப் பொறுப்பேற்று லக்ஸ்மன் கதிர்காமரிடம் ஒப்படைத்திருப்பது முறைகேட்டை மேலும் அதிகரித்திருக்கிறது.

தேர்தல் நெருங்கும் சமயத்தில் நாட்டு மக்களுக்குச் சனாதிபதி என்ற முறையில் அண்மையில் உரையாற்றியபோது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சுமார் அரைமணி நேரம் தேர்தல் பிரசாரமே மேற்கொண்டதாகக் குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது.

அண்மையில் அரச தொலைக் காட்சியைப் பார்வையிட்டுக்கொண்டிருந்த ஒருவர் கூறினார். அரைமணி நேரத்துக்குள் ஆறு தடவைகள் சந்திரிகா தொலைக்காட்சியில் தோன்றிவிட்டதாக.

அரச தொலைக்காட்சிச் செய்தியில் தினமும் தேர்தல் கண்ணோட்டம் ஒன்று இடம்பெற்றுவருகிறது. கடந்த தேர்தலில் மாவட்ட ரீதியாகக் கட்சிகள் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையைப் புள்ளிவிபர ரீதியாக வரைபடத்துடன் இதன் போது காண்பிக்கப்படுகிறது. இதிலுள்ள முக்கியவிடயம் என்னவென்றால் கடந்த முறை தேர்தலில் ஐ.தே.க பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையை விட பொ.ஐ.மு, ஜே.வி.பி ஆகிய பெற்ற வாக்குகளின் கூட்டுத்தொகை அதிகம் எனக் காட்டுவதே இதன் நோக்கமாகும். இது அப்பட்டமான ஒரு பக்கச்சார்பான பிரச்சாரமாகும்.

கடந்த தேர்தலில் பொ.ஐ.மு.வுக்கும் ஜே.வி.பிக்கும் வாக்களித்தவர்கள் அப்படியே இம்முறையும் வாக்களிப்பார்கள் என்ற எடுகோளுக்கு மட்டுமே இது சாத்தியப்பாடானதாகும். எனினும் அப்பட்டமாகத் தினமும் அரச தொலைக்காட்சி தனது செய்தியறிக்கையில் காட்டுவது எவ்வகையில் சரியானது?

அதேவேளை, பக்கச்சார்பான முறையில் செய்திகளைத் தொகுப்பது ஐ.தே.க வினர் மட்டுமே ஊழல் புரிவோர் என்பது அவர்கள் மீதான சேறு வீசும் பிரச்சாரங்களும் தாராளமாகவே இடம்பெற்று வருகின்றன. ஐ.தே.க.வினர் தூய்மையானவர்கள் ஊழலற்றவர்கள் என்பதோ இதன் கருத்தல்ல. ஆனால், அரச ஊடகம் ஒருதலைப்பட்சமாக நடந்துகொள்வதே இங்கு நோக்கத்தக்கதாகும்.

ஆனால், சனாதிபதி சந்திரிகாவின் அதிகாரத்தின் கீழ் இவையெல்லாம் எதிர்பார்க்கக்கூடியவையே. ஏனெனில் இன்றைய அரசியலமைப்பில் சனாதிபதிக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் எவை? பிரதமருக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் எவை? தேர்தல் ஆணையாளருக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் எவை? என்பதெல்லாம் புரிந்துகொள்ள முடியாதவையாகவே உள்ளன. உண்மையில் அரசியலமைப்பில் அவை தெளிவாக இருந்தாலுங்கூட அவற்றை மீறி நடக்கும் செயல்களே இப்பொழுது சிறிலங்காவின் அரசியலில் உள்ளது.

இம்மீறலுக்கு எதிராக முறையிடக் கூடிய உயர் நீதிமன்றம் குறித்து ஐக்கிய தேசியக்கட்சிக்குப் பெரிய நம்பிக்கையில்லைப் போலவே தெரிகிறது. உயர் நீதிமன்றம் வழங்கிய சில தீர்ப்புக்களில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டும் உள்ளது. இவ்வாறான ஓர் அதிருப்தியை வெளியிட்ட அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கா இப்பொழுது நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படும் நிலையில் உள்ளார். தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கும் விடயத்தில் அரசியலமைப்பை மீறக்கூடாது எனக் கூக்குரலிடும் இவர்கள் அதனை எல்லா வகையிலும் மீறிவருகின்றனர் என்பதே யதார்த்தமாகும்.

வேலவன்

# மருத்துவர்களின் போராட்டத்தால் பாதிக்கப்படுவது மக்கள்

நாடு

தழுவிய ரீதியில் அரசாங்க மருத்துவர் கள் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தின் போது அரசாங்க அதிகாரிகளும் அரசதலைவர்களும் பாதிக்கப்பட்டார்களோ இல்லையோ ஆனால் சதாரண அப்பாவிப் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுப் போனார்கள்.

அரசாங்க மருத்துவர்களுக்கிடையில் காணப்படும் சம்பள முரண்பாட்டை நீக்குமாறுகோரி அமைச்சர்கள் மட்டத்தில் நடத்தப்பட்ட பேச்சுக்கள் தோல்வியைத் தழுவியதையடுத்து மருத்துவர்களின் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

நாடு ஒரு தேர்தலை சந்தித்துநிற்கும் போது இந்த தேர்தல் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தம் என்ற வகையில் மக்கள் அதிகமாகவே பாதிக்கப்பட்டுத்தான் போயினர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் பல்வேறு துறைகளைச் சார்ந்த திணைக்களங்களும், நிறுவனங்களும் வேலை நிறுத்தத்தில் குதித்து மக்களுக்கு பல்வேறு அசௌகரியங்களை ஏற்படுத்தியேயுள்ளனர்.

இந்தவகையில் வைத்தியத்துறை பலதடவைகள், வைத்தியர்கள், வைத்திய சிற்றூழியர்கள், என ஒவ்வொரு பிரிவினரும் பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் வேலை நிறுத்தத்தை சந்தித்தாகிவிட்டது.


இந்த ஒவ்வொரு வேலை நிறுத்தத்தின்போதும் அதிக சிரமங்களையும் ஆபத்தையும் எதிர்கொள்பவர்கள் அப்பாவிப்பொது மக்கள்தான்.

இந்த மருத்துவர்கள், சிற்றூழியர்கள், தாதிகள் எல்லோரும் பங்கெடுக்கும் வைத்தியத்துறையானது நாட்டில் இருக்கும் ஏனைய எல்லாத்துறைகளையும் விட அத்தியாவசியமானதும் அதேநேரம் இடர்கள் இன்றி அதன்பணி தொடரவேண்டிய துறையாகவுள்ளது.

ஆனால் ஒரு அரசின் குறுகிய கால ஆட்சிக்காலத்தில் பல்வேறுமுறை வேலைநிறுத்தத்தை சந்திப்பதன் மூலம் ஏற்பட்ட இடர்கள் காரணமாக மக்களின் வாழ்வில் மிக முக்கிய பங்காற்றும் ஒரு துறையில் அரசு எவ்வளவு அக்கறைகொண்டுள்ளது என்பது இங்கு தவிர்க்க முடியாதவாறு எழும்கேள்வியாகும்.

இன்னுமொருபுறத்தில் இந்த வேலை நிறுத்தங்களின் பின்னணியில் பலமான அரசியல் சக்திகளும், அரசியற்கட்சிகளும் உள்ளதாக ஒரு சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்தேகங்கள் எந்தளவுக்கு உண்மை என்பதற்கு அப்பால் இந்த அரசியல் சக்திகள் தங்களின் குறுகிய அரசியல்



அனுகூலங்களுக்காக மக்களின் உயிரோடு விளையாடும் விபரீத விளையாட்டுக்களில் ஈடுபடுவதை முதலில் நிறுத்திக்கொள்ளப்பட வேண்டும்.

சனநாயகம் மனிதஉரிமை, மனித உயிர்கள் என்றெல்லாம் இன்று அதிகமாகப்பேசப்பட்டு வரும் இந்த உலகில் இவை சார்ந்த அமைப்புக்களும் சர்வதேச நாடுகளும் இதனை பொருத்தமானவர்களுக்கு உணர்த்த தலைப்படவேண்டும்.

அத்தோடு இது ஒரு தேர்தல்காலம் என்பதாலும் இந்த காலப் பகுதியில் மக்களின் பிரச்சினைகளோட சம்பந்தப்படும் இந்த விவகாரத்தில் அரசியல்கட்சிகள் எந்த வகையில் தமது செயற்பாடுகளை மேற்கொள்கின்றன என்பதை இனங்கண்டு தேர்தல்களில் இதனை பிரதிபலிப்பதாக இருந்தால் நிச்சயம் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வை தேடியதாக இருக்கும்.

மேலும் மருத்துவத்துறை சார்ந்தவர்களும் தங்களின் பிரச்சினைகளிற்கும் கோரிக்கைகளிற்கும் ஒரு தீர்க்கமான தீர்வை எட்டுவதை விடுத்து அடிக்கடி இவ்வாறான வேலைநிறுத்தங்களில் ஈடுபடும்போது மக்களைக் கவனத்திற்கொள்வது நல்லது.

எந்த போராட்டங்களும், எந்த கோரிக்கைகளும் அப்பாவிமக்களை மிகவும் பாதிப்பதாக ஒரு போதும் அமைந்துவிடக்கூடாது.

ஏனென்றால் இவ்வாறான முறைகளில் ஈடுபடும் ஊழியர்களின் கடமை என்பது அவர்களின் வேதனங்கள் என்பவற்றிற்கு அப்பால் அது ஒரு உயரிய சேவையாகவே கருதப்படுகிறது என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

அதுவே அதிக பிரச்சினைகளுக்கு தீர்வை நோக்கிய பயணத்திற்கு வழிசெய்யும்.

இதை விடுத்து பிரச்சினைகளோடு சம்பந்தப்பட்ட தரப்புகள் மக்களை கவனத்தில் கொள்ளாது மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்பாடும் அப்பாவிமக்களின் உயிர்களுக்கு உலைவைக்கும் செயற்பாடாகவே இருக்கும்.

இந்த நிலையில் மக்கள் தங்களின் துயரத்தை எங்கு போய் முறையிடுவது எவ்வாறு இதற்கான பரிகாரத்தை தேடுவது என்பதெல்லாம் தெரியாது மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு மருத்துவர்களின் பிரச்சினைக்கு அரசு எவ்வாறு தீர்வை எட்டுகிறதோ அந்தத்தீர்வு மக்களை அடிக்கடி பாதிக்காதவகையிலான ஒரு தீர்வாக இருப்பது மட்டும் அவசியம்.

நக்கீரர்

(தலை) சிந்தனையின் கவசம், ஆன்மாவின் ஆரண்மனை. - பைரன் பிரபு

# சோமவன்ச அமரசிங்கவுக்கு திறந்த மடல்...

## ஜே.வி.பி தலைவரே!

## வணக்கம்...

சூரியனே அஸ்தமிக்காத தேசம்
என்று பெருமைதனைச் சூட்டி நிற்கும் நாட்டின் கண்ணே
சுவைமிகு வாழ்க்கைதனைச்
சுகித்து மகிழ்ந்துவிட்டு
சொந்த நாட்டிற்கு வந்திருக்கிறீர்கள்.

உப்பரிகை மாளிகையும்
உயர்ந்த நல்ல கோபுரங்களும்
இப்புவியில் இந்திரலோகம்
இதுவோ எனச்
செப்புதற்கியலாவண்ணம்
சிந்தை கவரும்
செழிப்புமிகு காட்சிகளும் கொண்ட
முதலாழித்துவ நாடு-நீங்கள்
அஞ்ஞான வாசம் இருந்த தேசம் என்பதை
அகில உலகும் அறியும்
பாமர சிங்கள மக்களைத் தவிர

இங்கு நீங்கள் வந்ததுமே
ஏடுகளிலே உங்கள் முகங்கள்.
எழுத்துகளிலே உங்கள் செவ்வி.
பக்கங்கள் நிரம்புகிறது
படவிளக்கத் தோற்றம் பரவலாக வருகிறது.

திக்கற்றுத் தடுமாறும் இலங்கையரை
திசை காட்டி வழிநடத்தும்
தக்கதொரு தலைமை என நினை
விழித்துரைப்பார்க்கு நீங்கள்
வீறுகொண்ட புரட்சித் தலைவர்?

நாடு இன்று நல்லதொரு தலைமையை
நாடி நிற்கும் வேளையிலே
நாடிவந்துள்ளீர்-பதின்
நான்காம் தேர்தலைப் பார்த்து!
கேடு சூழாதிருக்க வேண்டும்
கீழ்மை நிலை மாறவேண்டும்
வாடிநிற்கும் லங்கா மாதா-தன்
வடுக்களை மாற்ற வேண்டும்!
நடக்குமா என்பதிலே
நமக்கெல்லாம் ஐயம் உண்டு.
இல்லை...இல்லை
நடக்காதென்று
அடித்துச் சொல்கிறது மனம்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து
எழுபத்தேழில்
ஆட்சிக்கு வந்த ஐ.தே.க
இத்தரையில் எழுச்சி பெற்றிருந்த
எங்கள் ஜே.வி.பி.யினரை
சித்திரவதை செய்தும் சிறைப்பிடித்தும்
கொடுமைகள் புரிந்தனர்-அதனால்
இங்கிருப்பது உயிராபத்தென்றெண்ணி
இங்கிலாந்து சென்றேன்-என்று
இயம்பியுள்ளீர்-அதுநிற்க
இனப்பிரச்சினை தொடர்பாக
எடுத்துச் சொன்ன விடயங்களில்
முக்கியமான சிலவற்றுக்கு
பதில் தருதல்
முக்கியமெனக் கருதியதால்
திறந்தமடல் வருகிறது-மனம்
திறந்து படிப்பீராக!

இனப்பிரச்சினை இருக்கிறது-அதனை
அனைத்துத் தரப்பினருடனும்
அலசிக் கதைத்து
ஆவன செய்ய வேண்டும் என்றுள்ளீர்.
இனப்பிரச்சினை இருக்கிறது
என்பதனாலன்றோ
எழுத்தில் வந்தன ஒப்பந்தங்கள்!
ஐம்பத்தேழில் வந்தது பிராந்திய சபைக்காக!
அறுபத்தைந்தில் வந்தது மாவட்ட சபைக்காக!
எண்பத்தேழில் எழுதியது மாகாண சபைக்காக!
இனப்பிரச்சினை இருக்கிறது
என்பதனை ஏற்றதனாலன்றோ
இவை பால் தலைவர்கள்
இட்டனர் ஒப்பம்!
அம்மணியும் ஏற்றார்
அடுத்து வந்த ரணிலும் ஏற்றார் என்பதறிக.


தமிழர் தரப்பு யாருடன்தான் பேசவில்லை
அரசு-புலிகள் பேச்சுவார்த்தை ஆரம்பித்து
ஆறாம் சுற்று முடிந்தபின்
அப்படியே நிற்கிறது.
இணக்கம் கண்ட முடிவுகள் நடைமுறையாவதில்
சுணக்கம்....மிகச் சுணக்கம்-அதனால்
நிறுத்துகிறோம் பேச்சை என்றனர் புலிகள்-அது
நிதர்சனமே என்பது மக்கள் நிலை.
1994-இல் ஆரம்பித்தது பேச்சுவார்த்தை
சனாதிபதி சந்திரிகா தரப்பினருடன்.
ஐந்து மாதங்களில் அது
முடிவுற்றது அறிவீராக!
அவ்வேளைச் சம்பவமொன்றை
அறிந்துகொள்வது நல்லது:
தடைசெய்யப்பட்ட பொருட்களில்
இருபத்தெட்டின் தடைநீக்க அறிவித்தல்
வர்த்தமானியில் வெளிவருவதற்கு முன்பே
மீண்டும் இரவோடிரவாகத் தடை
போட்டதை அறிவீராக!
எண்பத்தெட்டில் சனாதிபதியானார்
பிரேமதாசா!
நம்பத் தகுந்தது நன்மைகள் வேண்டுமென
நடைபெற்றது பேச்சுவார்த்தை.
இந்தியப் படை வெளியேற்றப்பட்டது
ஏற்புடைய அரசியல் தீர்வுக்கு
இணங்கவில்லை அரசு.மாகாண சபையும் கலைய
முறிந்தது பேச்சுவார்த்தை
மூண்டது இரண்டாம் ஈழப்போர்.
1990-ஜுலை 11-இல்

திம்புவில் நடந்தது பேச்சுவார்த்தை-ஜே.ஆரின்
தம்பி ஹெக்டர்தான் அரசுக்குழுவின் தலைவர்.
இந்திய அரசு ஏற்பாட்டாளர்
நம்பியே வருகவென அழைத்தது
இந்திய அரசு த.வி.கூட்டணியினருடன்
நாடிச் சென்றனர் நான்கு இயக்கங்கள்.
திம்பு கோட்பாடு இங்கேதான்
திடமாக வரையப்பட்டது.
பிறந்த தேசிய இனம் பேசும் மொழி
நிறைந்து வாழும் நிலப்பகுதி
யாவும் தமிழர்க்கு
சுயநிர்ணய உரிமையைத் தருகிறது என
வரையறுக்கப்பட்டது. அரசு
வளைந்து கொடுக்கவில்லை
அதனால் ஆகஸ்ட் 22 எண்பத்தைந்தில்
முறிந்தது பேச்சுவார்த்தை அறிவீராக!
விளக்குக்கும் குடத்துக்கும் வாக்குக் கேட்டு
பதவிக் காலத்தை நீடித்து
நிலைக்க வைத்த ஜே.ஆர்
சர்வ கட்சி மாநாட்டைக் கூட்டினார்.
ஆண்டுகள் இரண்டு சென்றபின்
அறிவித்தார் அது கலைந்ததென்று!
ஆகியது எதுவுமில்லை அறிவீராக.
மூன்றாம் தலைமுறைக் காலத்தில்
மாவட்டசபையும், பிராந்தியசபையும்
பிசுபிசுத்துப் போனது.
முதலாம் தலைமுறையினருடனும்
பேசப்பட்டது. அறிந்துகொள்க;
பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம்
அறிமுகமானபோது
இனவாரிப் பிரதிநிதித்துவம்
எமக்கு வேண்டுமென்றனர் தமிழர்கள்.
பலன் பூஜ்யமே.
1920-இல் இது நடக்க
1922-இல் மற்றொன்று நடந்தது
அரசாங்க சபையில் அமர்வதற்கு
சேர்.அருணாசலம் என்பார்க்கு
அளித்தனர் வாக்குறுதி
சிங்களத் தலைவர்கள்-பின்னர்
சேர்.ஜேம்ஸ்பீரிசும் சமரவிக்கிரமவும்
பிறழ்ந்தனர் வாய்மையில்!
இப்போது மூன்றாம் தலைமுறை
பேசுகிறது அறிவீராக!

ஐம்பத்தாறில் வந்தது தனிச்சிங்களச் சட்டம்.
நாற்பத்தொன்பதில் வந்தது தமிழரசுக் கட்சி.
இது ஏன் என்று தமிழரிடமே
கேட்கவேண்டுமென்கிறீர்.
வரலாற்றைத் திரும்பிப்பார்த்தால்
வந்தவழி அறிந்துகொள்வீர்.
மேல்மாகாணத் தமிழர்க்கு
இடம் தருவோம்
மேலான வாக்குறுதி
இதுவென்றனர் சிங்களத் தலைவர்கள்.
ஆனால்-
வாக்குறுதி தவறினர்
அதிருப்தியற்ற அருணாசலம் குழுவினர்
அமைத்தனர் தமிழர் மகாசபை
ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப்
பதினெட்டில் அறிவீராக!
பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தின் போது
சிங்களவருக்குப் பதின்மூன்று பேரும்
தமிழருக்கு மூன்று பேரும் வந்தனர்.
எங்களவர்களுக்கு ஏற்பட்டது அதிருப்தி
அறிந்துகொள்வீராக!

மானிபங்-டிவன்சயர் சீர்திருத்தத்தில்
எழுவர் தமிழராயும்
ஈரெண்மர் சிங்களவராயும் தெரிவானார்கள்.
சிங்களவர் எண்ணிக்கையில்
மூன்றில் இரண்டு பங்காவது
தமிழருக்கு வேண்டுமென்று
கோரப்பட்டது! கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.
முப்பத்தினான்காம் ஆண்டு
அமைச்சரவையில்

(19ஆம் பக்கம் பார்க்க....)



# நோர்வே பழங்குடியினர் பெற்ற சுயாட்சி

அன்பரசு



லப் என்ற பெயருடன் நோர்வே, சுவீடன், பின்லாந்து ரஷ்யர் ஆகிய நாடுகளின் பனிபடர்ந்த வடபகுதியில் ஸ்கன்டிநேவிய இனங்களிலிருந்து வேறுபட்டதொரு பழங்குடி மக்கள் பண்டு தொட்டு வாழ்கின்றனர். லப்(LAPP) மக்களில் பாதியிலும் கூடிய பங்கினர் நோர்வே நாட்டின் வடபால் வாழ்கின்றனர். பின்லாந்தின் வடதுருவ வட்டத்திற்குள் லப்லாந்து (LAPLAND)என்ற பகுதி காணப்படுகின்றது. மக்கள் தொகை குறைந்த லப்லாந்தில் லப் இனத்தவர் வாழ்கின்றன்ர். நோர்வே, சுவீடன், பின்லாந்து , ரஷ்யா ஆகிய நான்கு நாடுகளின் லப் இனத்தவர் வாழும் பகுதிகளைக் கூட்டாக லப்லாந்து என்று அழைக்கும் வழமையையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

ஆதிரோமாபுரியின் வரலாற்று ஆசிரியரான கோர்னீலியஸ் தசிற்றஸ் (CORNELIUS TACITUS கி.பி 56- 117) எழுதிய ஐரோப்பிய வரலாற்றில் லப் பழங்குடியினர் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. அவர் எழுதிய காலப்பகுதியில் நோர்வே, சுவீடன், பின்லாந்து, ரஷ்யா என்று எல்லை வைத்துப் பெயர்வழங்கும் வழக்கம் தோன்றாத காரணத்தால் லப் இனத்தவர் வட துருவத்திற்கு அண்மித்தாக வாழ்வோராக மாத்திரம் குறிப்பிடப் படுகின்றனர்.

நோர்வே நாட்டின் லப் பழங்குடியினர் சாமி(SAMI) என்ற பெயராலும் அழைக்கப் படுகின்றனர். லப் இனத்தவர்களில் நால் வகையினர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கரையோர லப் இனத்தவர் (THCOASTAL LAPPS) நோர்வேயின் வடதுருவத்தில் வாழ்கின்றனர். இவர்கள் கடல் மீன்பிடியைத் தொழிலாக கொண்டுள்ளனர். சுவீடன், பின்லாந்து நாடுகளின் ஏரிக்கரை நதிகளில் மீன்பிடித்து வாழ்வோர் மீனவ லப் இனத்தவர். (FISHER LAPPS) என அழைக்கப் படுகின்றனர். காட்டுப் பகுதிகளில் துருவ மான் வளர்ப்பில் ஈடுபடுவோர் காட்டுப் பகுதிகளில் வாழும் லப் இனத்தவர். (FOREST LAPPS) என்று கணிப்பிடப்படுகின்றனர். அடுத்ததாக மலை வாழ் லப் இனத்தவர் இடம்பெறுகின்றனர். இவர்கள் நாடோடி வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்கள் கூடுதலாக மலைப்பிரதேசத்தில் வாழ்வதால் மலைவாழ் லப் இனத்தவர் (MOUNTAIN LAPPS) என்று பெயரிடப் பட்டுள்ளன.

தாம் வாழும் நாட்டின் பண்பாட்டியல்புகளையும் மொழி வழக்குகளையும் தமது தேவைக் கேற்ப லப் இனத்தவர் உள்வாங்கியுள்ளனர். பின்லாந்தில் வழங்கும் லப் மொழி லப் இனத்தவர் யாவருக்கும் பொதுவான மொழியாகக் கருதப்படுகின்றது. எனினும் லப் மொழிக்குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உட்பிரிவுகள் காணப்படுகின்றன. நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளில் லப்மாணவர்களுக்கு லப்மொழியில் பாடம் புகட்டப் படுகின்ற உயர்தரக்கல்வியை அவர்கள் நோர்வே அல்லது சுவீடன் மொழியில் மேற்கொள்கின்றனர்.

நோர்வே நாட்டு சாமீ என்றழைக்கப்படும் லப் இனத்தவர் பெரும்பான்மையினருடன் நெருங்கி வாழ்ந்தாலும் தமக்கே உரித்தான ஆடை அலங்காரங்களையும் வாழ்க்கை முறைகளையும் கொண்டுள்ளனர். பார்த்த மாத்திரத்திலேயே அடையாளங் காணக்கூடிய தனித்துவமான ஆடைகளையும் தலைப் போர்வைகளையும் அவர்கள் அணிகின்றனர். அவர்களுக் கென்ற வேறுபட்ட கலாச்சார மொழி என்பன உண்டு. அவர்களுக்கு தமது தொன்மை வாய்ந்த கலாச்சார சிறப்புப்பற்றிய அபரிதமான பெருமை இருப்பது கண்கூடு.

இன்று நோர்வேயில் வாழும் சாமீ இனத்தவர் தொகை 45,000 வரையிலாக இருக்கின்றது. நோர்வேயின் வடக்குப் பிராந்தியமான பின்மார்க்கில் (FINNMARK) இவர்களிற் பெரும் பான்மையோர் வாழ்கின்றனர். இவர்களுடைய பாரம்பரிய இசைவடிவத்தை யோயிக் (YOLK) என்றழைக்கிறார்கள். இவ்விசை வடிவம் இவ்வினத்தவரின் ஆதி மதத்துடன் நெருக்கமானது இவர்களுடைய ஆதி மதத்தை ஷாமானிசம் (SHAMANISA) என்ற வகைப்படுத்தலின் கீழ் சமூகவியலாளர்கள் இணைத்துள்ளனர்.

ஷாமானிச மத வடிவங்கள் உலகின் பலபாகங்களில் பண்டு தொட்டு நிலவுகின்றன. அமானுஷ்ய சக்திகொண்ட தேவதைகளையும் தேவர்களையும் வழிபடும் முறையாக இது அறியப்படுகின்றது. இந்த வகை வழிபாடு நிலவும் சமூகங்கள். மத்தியில் மதகுருப் பரம்பரையினர் காணப்படுவதில்லை. வாழ்வாதாரமாகப் பிறதொழில் பார்க்கும் ஒருவர் சமயாசமயப் பூசாரியாகச் செயற்படுவார். இவர் பேய் பிசாசுகளை விரட்டும் திறமை உள்ளவராகவும் இடம்பெறுவார். இன்றும் தெற்கு ஆசியக்கிராமங்கள் பலவற்றில் இவ்வகை வழிபாட்டைக் காணக்கூடியதாக இருக்கிறது. குறி சொல்பவர்கள், நினைத்தகாரியம் சித்தியடைய உதவுபவர்கள், காணாமல் போன பொருள் இருக்கும் இடம் பற்றித்துப்புத் தருபவர்கள், வீபூதி போட்டு குணப் படுத்துபவர்கள், போன்றோரை ஷாமான் மதப்பகுதிநேர குருவர்களாக மதிப்பிடலாம்.

சாமீ இனத்தவர் கலாச்சாரத்தின் மையப்பொருளாக அவர்கள் பெரும் எண்ணிக்கையில் வளர்க்கும் கலைமான் (REINDEER) மந்தைகள் இடம்பெறுகின்றன. பாலாகவும், இறைச்சியாகவும், கூடாரத் தோலாகவும் இக்கால் நடை பயன்படுகின்றது. 17ஆம் நூற்றாண்டிற்கு முன் இவர்கள் வேட்டையாடியும் மீன்பிடித்தும் வாழ்ந்தார்கள். இன்று கலைமான் வளர்த்தல், விவசாய வர்த்தகம், சிறுகைத்தொழில், கைவினைபொருட் தயாரிப்பு, தொழிற்சாலை பணிபோன்றவற்றில் சாமீ இனத்தவர்கள் ஈடுபடுகின்றனர். தமது பகுதிகளில் முடங்கிக்கிடவாமல் நாட்டின் பிறபகுதிகளில் வேலை வாய்ப்புத் தேடிச்செல்லும் போக்கும் அண்மைக்காலமாக அவதானிக்கப்பட்டுள்ளது. அண்மையில் எடுபட்ட கணக்கெடுப்பின் படி பத்து வீதத்தினர் மாத்திரமே கலைமான் வளர்ப்பில் ஈடுபடுவதாக அறியவருகின்றது.

கலைமான்களை கொன்று திண்ணும் விலங்கினங்களை வேட்டையாடும் உரிமையை நோர்வே சட்டங்கள் தடைசெய்துள்ளன. இதனால் கலைமான் வளர்ப்பு மட்டுப் படுத்தப்பட வேண்டிய கட்டாய நிலைக்கு வந்துள்ளது. சாமீ இனத்தவர்களுக்கும் நோர்வே அரசுக்கும் இடையில் முரண்பாட்டை இது தோற்றுவித்துள்ளது. நோர்வே அரசு விதித்த வேட்டைத்தடையை எதிர்த்து ஐ.நா.வின் பழங்குடி மக்கள் உரிமைப் பாதுகாப்பு அமைப்பிற்கு மனுச்செய்ய சாமீ இனத்தவர்கள் தீர்மானித்துள்ளனர். கலைமான் வளர்ப்பில் பெருமளவு முதலீடு செய்யப்பட்டு இறைச்சி பதனிடும் தொழில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது மேய்ச்சல் இடநெருக்கடிகளையும் சுற்றுச்சூழல் சம்பந்தமான பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளன.

முதலாம் இரண்டாம் உலகப் போர்களுக்கு இடைப்பட்ட மூன்று தசாப்தங்களில் சாமீ இனத்தவர்கள் நோர்வே அரசினால் கடும் துன்புறுத்தல்களுக்கு உட்பட்டனர். 1940 களில் நோர்வே அரசு கொண்டு வந்த சட்டங்கள் பள்ளிக் கூடங்களில் லப்மொழி மூலம் கல்வி புகட்டும் நடவடிக்கைகளை முற்றாக நிறுத்தின. நோர்வே நாட்டின் தேசிய மொழி பேசாதோருக்கு நிலம், புலம் விற்பதை இன்னுமோர் சட்டம் தடைசெய்தது. அதாவது லப்மொழி மாத்திரம் பேசுவோர் நிலம் கொள்வனவு செய்வதை இச்சட்டம் தடுத்தது. சாமீ இனத்தவர்களை நோர்வே நாட்டவர்களாகச் செய்யும் இன்னுமோர் முயற்சியாக லப் கலாச்சார விழுமியங்களை இல்லாதொழிக்கும் பரந்துபட்ட நடவடிக்கைகளையும் நோர்வே மேற்கொண்டது. இவையாவும் கூட்டாக நோர்வே வரலாற்றில் மிகப்பெரியதொரு கரும் புள்ளியாக இடம்பெறுகின்றன.

இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற காலந்தொட்டு சாமீ இனத்தவர்களை பெருந்தன்மையோடு நடத்தும் கொள்கையை நோர்வே அரசு கடைப்பிடிக்கத்தொடங்கியது. சாமீ இனத்தவர்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட சட்டங்களின் கொடூரம் படிப்படியாகத் தணிக்கப்பட்டது. 1960 களில் தமது கலாச்சாரத்தை தங்கு தடையின்றி வளர்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதோடு ஊக்குவிப்பும் வழங்கப்பட்டது. லப் மொழி ஊடாகக் கல்வி புகட்டும் அனுமதியும் வழங்கப்பட்டது. 1980களில் லப் இனத்தவர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்த பின்மார்க்பகுதி ஊடாகப் பாயும் ஆல்ற்றா நதியை (ALTA RIVER) நோர்வே அரசு அணைகட்டி மறிக்க விளைந்த போது லப்-நோர்வே முரண்பாடுகள் மீண்டும் தோன்றின. சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்புக்களும் சாமீ இனத்தவர்கள் சார்பாக குரல் கொடுத்தன. லப் அல்லது சாமீ என்றழைக்கப்படும் இப்பழங்குடியினர் உரிமைகள் பற்றிய பிரச்சினையை தேசிய மட்டத்தில் நோக்க வேண்டிய தேவை எழுந்தது.

இதன் காரணமாக 1987ல் நோர்வே பாராளுமன்ற சாமீ இனத்தவர்களின் அந்தஸ்திற்கும் தனித்துவமான சட்டங்களுக்கும் முழுஅளவில் அங்கீகாரம் வழங்கியது. அடுத்த வருடம் 1988ல் பின்வரும் சரத்தை நோர்வே அரசியல் சாசனத்தில் இணைக்கும் தீர்மானத்தை நோர்வே பாராளுமன்றம் நிறைவேற்றியது. ''சாமீ மக்கள் தமது மொழி, கலாச்சாரம், வாழ்க்கை முறை என்பனவற்றை சாமீ சட்டத்திற்கும் சாமீ பாராளுமன்றத்திற்கும் அமைவாகப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் உரிய சூழலை உருவாக்கும் பொறுப்பு அரசுடையதாகும்''

இவ்வரசியல் சாசனத்தில் திருத்தத்திற்கு அமைவாக ஒக்டோபர் 09,1989ல் சாமீ இனத்தவர்களுக்கான பாராளுமன்றம் திறந்து வைக்கப்பட்டது. சாமீதிங்கெற் (SAME TINGET) என்று இப்பாராளுமன்றம் அழைக்கப்படுகின்றது. இன்று சகல உரிமைகளும் பெற்ற நிலையில் நோர்வே குடியுரிமையுடன் சாமீ இனமக்கள் நிறைந்த வாழ்வு வாழ்கின்றனர். சாமீ இனத்தவரின் தேசிய நாளாக பெப்ரவரி 06 பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. மிக அண்மையில் நோர்வே அரசு எடுத்த தீர்மானத்தின் படி பெப்ரவரி 06 சாமீ இனத்தவர்களின் கொடி நாளாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.




மனிதர் எத்தகையவர் என்று காட்டுவது சிரமங்கள் தான். - எபிக்டெட்டஸ்

# வேலி அம்பலம்-ஆனால் சங்கடப்படலையா?

**வெளிவாசல் பாலன்**

A-9 வீதியால் பயணிப்போர்கள் கிளிநொச்சியைப் பார்க்கும் போது நினைக்கக்கூடும் இப்போது கிளிநொச்சிதான் துரித அபிவிருத்தியில் செழித்துவரும் நகரம் என்று.

ஆனால் அவர்கள் கிளிநொச்சியில் இறங்கி ஒரு நூறு மீற்றர் தூரம் A-9 வீதியின் இரு பக்கமும் போனால் தெரியும் கிளிநொச்சியின் அபிவிருத்தி எப்படி இருக்கிறது என்று.

இன்னமும் புழுதி கிளம்பும் தெருக்கள், புழுதி படிந்த முகங்கள், புழுதி நிரம்பிய வீடுகள், புழுதியாகிப்போன ஊர்கள்...

அழிவின் புதைகுழியிலிருந்து மெல்ல மெல்லக் கிளிநொச்சி எழுகிறதுதான். ஆனால் அபிவிருத்தி என்ற வகையிலல்ல அது.


A-9 வீதியால் ஓடியும் ஊர்ந்தும் திரிகின்ற மஞ்சள், பச்சை, வெள்ளை நிற வாகனங்களும் பாரந்தூக்கிகளும், நிலந்தோண்டிகளும் அநேகமாக A-9 வீதியின் அருகேயே நின்றுவிடுகின்றன.


கிளிநொச்சி நகரத்தின் அமைப்பு வீதி நீளத்துக்கு அமைந்திருப்பதால் எல்லா வேலைகளும் கட்டுமானங்களும் வீதிநீளத்திலேயே நடக்கின்றது. இது A-9 வீதியால் போய்வருவோருக்கு கிளிநொச்சி துரிதமாக அபிவிருத்தி அடைந்துவருகிறது என்றே கருதவைக்கும். சிலகட்டடங்களும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், திணைக்களங்களும் உடனடியாக கட்டியெழுப்பப்பட வேண்டி இருப்பதால், அவை மக்களின் நாளாந்தத் தேவைகளுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் அங்கே சிறிய அளவிலான புனருத்தாரணப் பணிகள் நடக்கின்றன, சில நடந்திருக்கின்றன. இங்கும் தேவையான அளவுக்கு எதுவும் நிறைவேறவில்லை.

இன்னமும் வீதியோரத்தில் பார்க்கக்கூடியதாக இருக்கின்ற கிளிமத்தியகல்லூரி, கிளி/மகாவித்தியாலயம், கிளி/புனித திரேசா பெண்கள்கல்லூரி ஆகிய பாடசாலைகள் கூட இடிபாடுகளுடனும் சிதைவுகளுடனும்தான் இருக்கின்றன. இங்கெல்லாம் மாணவர்கள் கிடுகுக் கொட்டில்களுள்ளும் மரநிழல்களின் கீழும்தான் இன்னமும் படிக்கின்றார்கள். ஏனைய பாடசாலைகளின் நிலைமையை எண்ணிப்பாருங்கள்.

மருத்துவமனை அங்கோ இங்கோ என்று இழுபட்டு இப்போது மீண்டும் பழைய இடத்தில், முன்னர் இருந்தமாதிரியே கட்டப்பட்டுவருகிறது. நகர அபிவிருத்தி நடவடிக்கையில் திட்டமிட்டமாதிரியும் கூறப்பட்டதுபோலவும் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட இடத்தில்கட்டுவதற்கு தேவையான நிதியை அரசு ஒதுக்காததால் அந்தத் திட்டம் இப்போது கைவிடப்பட்டதாக சொல்லப்படுகிறது.

கிளிநொச்சிப் பிரதான தபாலகம், பரந்தனில் இருந்த தபாலகம் இரண்டையும் பார்த்தால் தெரியும் இந்தப்பகுதியின் அபிவிருத்தியின் இலட்சனத்தை. பரந்தன் தபாலகம் இருந்த இடமே தெரியாத அளவுக்குத்தானிருக்கிறது இன்றும். அந்த இடத்தில் மூடிவளர்ந்திருக்கும் புல்லைக்கூட வெட்டமுடியவில்லை இந்தத்துரித அபிவிருத்தியால். கிளிநொச்சித் தபாலகத்தில் பணிபுரிகின்ற ஊழியர்கள் குடிப்பதற்குத் தண்ணீர் எடுக்கவே வெளியே பொதுக்கிணறுகளைத்தான் தேடிப்போகிறார்கள். 'எண்ணெய்பரல்' தகரத்தால் 'நிர்மாணிக்கப்பட்ட' தபாலகத்தில் இருந்துதான் அவர்களின் சேவை நடக்கிறது.






உதவி அரச அதிபர் பணிமனை இயங்குவதோ கிடுகுக் கொட்டில்களில்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனை ஒரு சிறு மண்டபத்தில்.

பட்டினசபை இப்போது பிரதேசசபையாகி அது ஒரு சிறு வீட்டில் காரியமாற்றிக்கொண்டிருககிறது.

கிளிநொச்சி மைதானத்தின் அருகில் இருந்த பெரியநூலகம் இப்போது பிரதேசசபை இயங்குகின்ற வீட்டுக்காணியின் ஒரு மூலையில் கிடுகால் அமைக்கப்பட்ட சிறு மண்டபத்தில் இருக்கிறது.

இப்படித்தான் பொதுவாக எல்லாப் பணிமனைகளும் நிறுவனங்களும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. சிலவற்றுக்கு மட்டும் சிறிய அளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன.

மின்சாரம் கிளிநொச்சிக்கு வந்துவிட்டதாக யாரும் கருதக்கூடும். இப்போது மின்சாரம் வழங்குவதற்காக போடப்பட்டுவரும் மின் இணைப்புக்கள் A-9 வீதியிலிருந்து ஒரு கிலோ மீற்றருக்குள் தான் நடக்கின்றன. ஏறக்குறைய பத்துகிலோமீற்றர் நீளம் A-9 வீதியில் இருபக்கமும் ஒரு கிலோ மீற்றருக்கான ஏற்பாடுகள் உள்ளன என்று சொல்லப்படுகிறது.

இதேபோலத்தான் தொலைபேசி இணைப்புக்களும். சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தால் ஐநூறு இணைப்புகளுக்குத்தான் திட்டமிடலும் வழங்கலுக்கும் ஏற்பாடுசெய்யப்பட்டன. அதிலும் இது வரையில் 185 இணைப்புகள்தான் வழங்கப்பட்டிருக்கின்றன. மந்தமாக நடைபெற்றுவரும் இந்த இணைப்புச்செயற்பாடுகூட A-9 வீதியை மையப்படுத்தித்தான்.

ஆயிரத்துக்கு மேற்பட்ட வேண்டுகை விண்ணப்பங்கள் வந்துள்ளபோதும் சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனம் இதுவரை நூறு தொலை இணைப்புகளுக்கு ஆரம்பத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட அளவிலேயே இன்னும் இருக்கிறது. கூடுதலான இணைப்புகளுக்குரிய வலுக்கூடிய சாதனங்களை தருவிப்பதற்கும் பொருத்துவதற்கும் எந்தப் பரிசீலனையையும் ரெலிகொம் நிறுவனம் செய்ய அக்கறையற்றே இருக்கிறது என அந்நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போரினால் முற்றாகவே அழிந்த நகரம் கிளிநொச்சி. யுத்தத்தின்போது தொடர்ச்சியாக நெருக்கடிக்கும் பாதிப்புக்கும் அழிவுக்கும் உள்ளான பிரதேசம் வன்னி.

புரிந்துணர்வு உடன்படிக்கை, பேச்சுவார்த்தைகள், சமாதானத்துக்கான நடவடிக்கைகள், அபிவிருத்திக்கான திட்டமிடல்கள், புனருத்தாரணத்துக்கான செயற்பாடுகள் எல்லாவற்றுக்கும் பிறகும் வன்னியின் நிலைமையில் எந்தப்பெரிய முன்னேற்றமும் இருப்பதாகத் தெரியவில்லை.

வன்னியில் கிளிநொச்சி மட்டும்தான் கொஞ்சம் மினுக்கமாக இருக்கிறது. காரணம் A-9 வீதியோடு அது இருப்பதுதான்.

ஏனைய வன்னிக்கிராமங்களினதும் சிறு பட்டினங்களினதும் நிலைமை இன்றும் படுமோசமாகத்தானிருக்கின்றன. A-9 வீதியின் வாகனப் புழக்கமும் சனநடமாட்டமும் கிளிநொச்சியை மினுங்கவைத்துள்ளது அவ்வளவுதான்.

கிளிநொச்சியை அபிவிருத்தி செய்வதாகவும் இதுவரையில் சில பகுதிகளில் புனரமைப்பு வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் ஒரு மாயத்தோற்றம் பரவலாக வெளியே உண்டு. A-9 வீதியின் இரண்டு பக்கங்களிலும் சுமார் 500 தொடக்கம்1000 மீற்றர் பிரதேசத்துக்குள்தான் சிறு சிறு புனரமைப்புப் பணிகள் நடந்திருக்கின்றன. தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும் வேலைகளும் மேற்குறித்துள்ள எல்லை வரம்புக்குள்தான். இது வெளியேயிருந்துபார்ப்போருக்கு குறிப்பாக A-9 கிளிநொச்சி பெரிய அளவில் அபிவிருத்தி செய்யப்பட்டிருப்பதாகவே கருதவைக்கும்.

உண்மையில் ஏனைய பகுதிகளுக்கு விரிவாக்கம் செய்யாமல் ஒரு குறித்த எல்லைக்குள்ளே நின்று செய்யும் இந்த புனரமைப்புப்பணிகள் வெளிப்பார்வைக்கு அபிவிருத்தி பற்றிய மாயையையே ஏற்படுத்தியுள்ளன.

யதார்த்தத்தில் புழுதிமயமாகவும் சிதிலங்கள் காடு, மேடு, குடிசை, கொட்டில்களாகவும் இருக்கும் நகரம் வெளியே வேறுவிதமாக அபிப்பிராயம் கொள்வதற்கு என்ன காரணம். வீதியை அலங்கரிப்பதுபோல நாமும் வீதியோரங்களில் மட்டும் கவனம் கொண்டதாலா?

இப்படி அலங்கரித்துயாருக்கு எதைக் காட்டப்போகின்றோம், எதைப் பெறப்போகின்றோம்?


'வேலை அம்பலம் ஆனால் சங்கடப்படலை' என்பார்கள் அது போலத்தானிருக்கின்றன கிளிநொச்சியின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்புப்பணிகளின் தேர்வும் நடவடிக்கைகளும். ஏனிப்படி திட்டமிடுகிறீர்கள் என்று அதிகாரிகளையும் உத்தியோகத்தர்களையும் கேட்டால் நிதிபோதியளவு இல்லை. போதிய பிறவசதிகள் இல்லை என்றெல்லாம் காரணங்களைச் சொல்கிறார்கள்.

வன்னியில் புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பிரிவைத்தவிர ஏனைய எல்லா உதவி அரச அதிபர்பிரிவுகளும் இராணுவத்தாக்குதலுக்கும் இராணுவ ஆக்கிரமிப்புகளுக்கும் அழிவுக்கும் உட்பட்டவையே. சில பிரிவுகள் முற்றாகவே அழிந்த பிரதேசங்கள் இங்கெல்லாம் என்ன முன்னேற்றம் நடந்துள்ளது?

நாங்கள் நாளாந்தம் பயணிப்பதற்கு - அதுவும் சாதாரண சைக்கிளோடிப் போவதற்குக் கொஞ்சம் நல்ல றோட்டை புழுதியும் குண்டும் குழியுமற்ற றோட்டையே போடவில்லையே என்றொருவர் ஒருதடவை சொன்னார். இந்த விதமாகத்தானிருக்கிறது யதார்தத்தில் நிலைமை யாரும் சொல்வது போலல்ல உண்மை.

இராணுவத்தினரால் போடப்பட்ட மண்அணைகளே அகற்றப்படாமல்தான் இன்னும் பல பகுதிகள் இருக்கின்றன. அபிவிருத்தி இதுவும் ஓரம்சமாக கருதப்பட்டிருக்கிறதோ என்னவோ யாரறிவார்? ஆனால் ஒன்று ஒரு நகரத்தின் எழுச்சியும் வளர்ச்சியும் பல கிராமங்களினதும் ஊர்களினதும் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும்தானிருக்கிறது என்று விளங்கினால் சரி. ●






# ஓடி வந்தாய்

சில்லென்று வீசிய குளிர்காற்று இது மார்கழி மாதம் என்று ஞாபகமூட்டிக் கொண்டிருந்தது. வெளியே கும்மென்ற இருட்டு குடியிருந்தது. சுமதி அரிக்கன் லாம்புக்கருகே இருந்து படித்துக்கொண்டிருந்தாள். அவள் படிப்பதை கவலையோடு பார்த்துக்கொண்டிருந்தாள் இதயமலர்.

அ....ஆ... இ.....அ.....

பெரும் பிரயத்தனப்பட்டு உச்சரித்துக்கொண்டிருந்தவளின் குரல் தடைப்பட்டது. '∴' என்ற எழுத்தை அவளால் உச்சரிக்க முடியவில்லை.

சொல்லித்தரமாட்டாயா?

அவள் விழிகள் அருகிலிருந்த தோழியைக் கேட்டன. இதயமலர் அவள் கண்களையே உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தாள். 'இயலவில்லையே' என்ற கவலை நிழலாடிய சுமதியின் விழிகள் சில விநாடிகளில் அதை மறைத்துச் சிரித்தன.

"அம்மா..."

சுமதி தன் தோழிகளை அப்படித்தான் அழைப்பாள். மூன்று வார்த்தைகளைத் தவிர வேறு வார்த்தைகள் பேச அவளால் இயலாது.

கொப்பியைத்தூக்கிக்கொண்டு இதயமலருக்கு அருகே சென்று அமர்ந்தாள்.

"சொல்லித்தா" மீண்டும் அவள் விழிகள் கேட்டன.

"அகேணம் எங்க சொல்லு பாப்பம்"

"அ...கே..."

மிகுதியைச்சொல்லமுடியாமல் திக்கினாள். இதயமலரின் இதயம் அழுதது.

"என் இனிய தோழியே உனக்கா இந்த நிலை....?

"சொல்ல முடியவில்லையே" என்று சோகமாய்ச்சிரித்துக்கொண்டிருந்த தன் தோழியையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"பிரியா.... பிரியா..." கேற்றதிற நான் கூப்பிட்டுக்கொண்டிருக்கிறன். நீ எந்தக் கோட்டையைப் பிடிக்கத்திட்டம் போடுறாய்" பிரியா எழுந்து வந்து படலையைத்திறக்காததால் நிரஞ்சனா தானே திறந்து கொண்டு அவள் அருகே சென்றாள்.

"என்னடி கடுமையா யோசிக்கிறாய்? அசோக வனத்துசீதைதோத்தாள்போல்"

"நான் இருக்கிற விசருக்கு... நீ பகிடி விட்டுக்கொண்டிருக்கிறாய்"

"என்னம்மா கண்ணு நடந்தது"

இண்டைக்கு விஞ்ஞானத்தில படித்த கணக்கொண்டும் விளங்கேல்ல. விஞ்ஞானமே வெறுக்கிது"

"அட அதுக்கா இப்படிக்கவலைப்படுறா என்னட்டக்கேட்டிருந்தா சொல்லித் தந்திருக்க மாட்டனா? நீ யோசிக்காத, விஞ்ஞானம் மட்டுமில்ல எல்லாப்பாடத்திலயும் எனக்குத் தெரிஞ்சதெல்லாம் உனக்கும் சொல்லித்தருவன்"

எப்போதும் வகுப்பில் முதல் தரத்தில் நிற்கும் நிரஞ்சனா தன் தோழியையும் அப்படி முன்னேற்ற அயராது பாடுபட்டாள்.

"நான் ஏ.எல். இல பயோ சயன்ஸ் படிக்கப்போறன். நீ?

"பாப்பம்"

"பாப்பம் இல்ல, நீயும் அதுதான் படிக்கிறாய். சின்னப்பிள்ளையில இருந்து ஒண்டாப்படிக்கிறம். படிச்சு முடியுமட்டும் ஒண்டாவே படிக்கோணும்."

பாலர் வகுப்பு படிக்கும் போது, தனியாக வீட்டுக்குச் செல்ல பிரியா பயப்பிடுவாள். நிரஞ்சனா தைரியப்படுத்தி அழைத்துச் செல்வாள். பள்ளிவிட்டு கை கோர்த்து வீடு சென்றவர்கள். விடுதலைப்பாதையில் நடைபயின்ற போதும் கை கோர்த்தே சென்றனர். இன்று அவர்கள் இதயமலராகவும், சுமதியாகவும்.

"சமாதானத்தை விரும்பாத ஆக்கள் பேச்சுவார்த்தையைக் குழப்ப என்ன செய்யலாம் எண்டு மண்டையைப்போட்டு உடைக்கிறாங்கள் எண்டா.... நீங்க என்னத்தக் குழப்பத் திட்டம் போடுறீங்க்ள். கிச்சினுக்க கொள்ளையடிக்கப் போறீங்களோ?"

சியாமளாவின் கிண்டல் பேச்சுக்குத்தலையை ஆட்டி சிரித்த சுமதி, தன்னால் இயன்றளவு அவளை எச்சரித்தாள்.

"உடையும்"

இவர்களின் பேச்சால் இதய மலரின் சிந்தனை கலைந்தது. 'என்ன கடுமையா யோசிக் கிறாய்' என்பது போல சுமதி இதயமலரைப்பார்த்தாள்.

"நீ இப்பிடிக்காயப்பட்டது எனக்காகத்தானே?" இதயமலர் அந்தச்சம்பவத்தை நினைத்துப்பார்த்தாள்.

அந்த வலிந்த தாக்குதலில் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த பணியைச்செவ்வனே செய்து முடித்து விட்டிருந்தனர். இதயமலர் மரமொன்றில் சாய்ந்து நின்று தொலைத்தொடர்பு சாதனத்தில் பேசிக்கொண்டிருந்தாள்.

"நேற்று இந்த இடத்தில ஆமி நிண்டான். இண்டைக்கு நாங்கள். இப்படி நடக்குமெண்டு அவன் கனவிலயும் நினைச்சிருக்க மாட்டான். ஆமியின்ர பொடி எல்லாத்தை.....?

சுமதி வார்த்தையை முடிக்காமல் திடீரென இதயமலருக்குக்குறுக்கே பாய்ந்து அவளைக்கீழே தள்ளி னாள். மரத்தின் பின்னால் நின்று இதயமலரைக் குறி பார்த்துக்கொண்டிருந்த சிப்பாய் தன் வேலையை முடித்ததும் துப்பாக்கியைப் போட்டுவிட்டு ஓடத் தொடங்கினான். அவள் இதயத்தை துளைக்க வந்த ரவையை தானே ஏந்திக்கொண்ட தோழியை அதிர்ச்சியுடன் பார்த்தாள் இதயமலர். சுமதியின் தலையிலிருந்து குருதி பெருகியது.

மற்றைய செல்வங்கள் எல்லாம் நீராலும், நெருப்பாலும் பகைவராலும் அழிக்கப்படக்கூடியவை. ஆனால் கல்விச்செல்வமோ எவராலும் அழிக்கமுடியாதது என்று கற்பித்த ஆசிரியர், ரவை ஒன்றால் அதை அழிக்க முடியும் என்று அறியவில்லைப்போலும் க.பொ.த(உ/த) படித்த சுமதி இப்போது அ....,ஆ..... படித்துக்கொண்டி ருக்கிறாள்.



தன்ர உயிரை நாங்க காப்பாத்துவம் எண்டு நம்பி துளசி எங்களிட்ட ஓடி வந்தாள். ஆனா அவளக் காப்பாற்ற எங்களால் முடியேல்ல. மற்றப்பிள்ளையளுக்கு எதிர்கால சந்ததிக்கு அப்படி நடக்கவிடக்கூடாது. அதுக்காக இந்தக்கஸ்ரத்த மட்டுமில்ல எதையும் நாங்க ஏற்றுக்கொள்ளுவம்...

அந்த ஒரு துப்பாக்கி ரவை இவளின் நினைவுகளை மறக்கச்செய்தது.

"அப்ப நீ எனக்குப் படிப்பிச்சாய்.. இப்ப நான் உனக்கு அ.....,ஆஆ... சொல்லித்தாறன்!!

இதயமலர் கூறியதைக் கேட்டு சுமதி புன்னகைத்தாள். இயங்கக்கூடிய நிலையிலிருந்த கையை ஆட்டி ஏதோ சொன்னாள்.

"தாய் நாட்டுக்காக உயிரையே குடுப்பம் எண்டு வந்தனாங்கள். இதுக்குக் கவலைப்படலாமா?"

சுமதி கூறமுற்பட்டதைப் புரிந்துகொண்ட இதயமலர் மௌனமாக இருந்தாள். அவள் கண்கள் இருட்டை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தன. தீர்க்கவே முடியாது என்ற விடயத்தை நினைத்து நினைத்து கவலைப்படு வதைவிட அதைப்புரிந்து கொண்டு ஏற்றுக்கொள்ளப்பழக வேண்டும். சுமதி ஏற்றுக்கொண்டுவிட்டாள்.

"என்னால அவளின்ர நிலையைத் தாங்கேலாம இருக்கே"

"அம்மா..." இதயமலர் திரும்பிப் பார்த்தாள்.

"அந்தச்சம்பவத்தை ஒருக்கா நினைச்சுப்பார்"

கவலை படர்ந்திருந்த சுமதியின் விழிகள் அந்தச் சம்பவத்தை நினைவூட்டின முதலாந்தவணைப்பரீட்சை நடந்துகொண்டிருந்தது. திடீரென ஏதோ இரைச்சல் கேட்டது.

"பிள்ளையள் பொம்மர் வந்திட்டுது. எல்லாரும் பங்கருக்க ஓடுங்கோ" என்ற ஆசிரியர்களின் பதட்டக்குரலைக்கேட்ட மாணவர்கள் அங்குமிங்கும் சிதறி ஓடினர். பிரியாவின் அயல் வீட்டுச்சிறுமி பங்கருக்குள் செல்லாமல் அவர்களிடம் ஓடி வந்தாள். அவர்கள் தன்னைக்காப்பாற்றி விடுவார்கள் என்ற நப்பாசை போலும் துளசியின் கையைப்பிடித்துக்கொண்டு மூவிங்பங்கருக்குள் ஓடினாள் பிரியா. நிரஞ்சனா பின்னால் சென்றாள்.

"கும்..." நிலம் அதிர்ந்தது. மாணவர்களின் அவலக்கூச்சல் பாடசாலைக் கட்டடங்களில் மோதி ஒலித்தது. கீழேவிழுந்து கிடந்த துளசியைப்பிரியா தட்டி எழுப்பினாள். துளசி அசைவற்றுக்கிடந்தாள் நிரஞ்சனா ஓடிவந்து அவளைத் தூக்கினாள். குத்திட்டு நின்ற துளசியின் விழிகளில் பயம் அப்பியிருந்தது.

அந்தக் கொடிய நிகழ்வை எண்ணிப்பார்த்த இதயமலர் கண்கலங்கினாள். சுமதியைப் பார்த்தாள்.

தன்ர உயிரை நாங்க காப்பாத்துவம் எண்டு நம்பி துளசி எங்களிட்ட ஓடி வந்தாள். ஆனா அவளக் காப்பாற்ற எங்களால் முடியேல்ல. மற்றப்பிள்ளை யளுக்கு எதிர்கால சந்ததிக்கு அப்படி நடக்கவிடக்கூடாது. அதுக்காக இந்தக்கஸ்ரத்த மட்டுமில்ல எதையும் நாங்க ஏற்றுக்கொள்ளுவம் என்று மனதிற்குள் எண்ணியவள் தன் பழைய நினைவுகளிலிருந்து மெல்ல மீளத்தொடங்கினாள்.

**தமிழ் நிலா**

## உருவகம்

# அழித்தலும்...காத்தலும்...



"அம்மா அப்பாவை ஒருக்காய் அவசரமா வரச் சொல்லுங்கோ... இந்தச்சனி யனுகள்... இப்பிடியேவிட்டால் எல்லாமே நாசமாய்த்தான் போகும். உடனை ஆக்களை முடிச்சுப்போடோணும்" குமரன் பின் வளவில் நின்று படபடத் தான்...

கந்தையா வாத்தியார் ஆ... என்ன, என்ன? ஏனிப்படிப் படபடக்கிறாய் பனிக்காலத் திலை இதுகளின்ரை வேலை அப்பிடித்தான்... அதை அப்பிடியே கொழுத்திவிடு... எதையோ உணர்ந்தவராக குமரனின் தந்தை கந்தையா வாத்தியார் மக னுக்கு பதிலுரைத் தார்.

மரம எரிஞ்சு போகாதோ அப்பா? குமரன்தான் கேட்டான்

முழுமரத்திலையும் பிடிச்சுதெண்டால் முழு மரத்தையும் எரிக்கவந்தால் சிலவேளை படலாம்... இது எங்கை அடியிலையோ கொப் பிலையோ என்று தனது இருக் கையில் இருந்தவாறே நிதான மாகக் கேட்டார் வாத்தியார்.

அடிமரக்கிளையொண் டிலை ஒரு பக்கக் கொப் பிலையும் கீழுமாக அப்பிடியே பார்க்க அருவெருக்குது... ஒரேகுமைச்சலாக நெளி யாமல் அப்பிடியே கிடக்கினம்.

குப்பையைக் கீழே கொட்டிப்போட்டு மண்ணெண் ணையை ஊத்திப்போட்டு கொழுத்திவிடு... அங்காலை இஞ்சாலை ஊர்ந்துகொண்டு இருக்கிற மரத்தாலைதான் சனியன் எங்கடை முருங்கை யிலை பிடிச்சிருக்கு... அந்தப் பக்கமா இருக்கிற கிளைகளை யும்வெட்டிப்போடு... பழிபாவம் பார்த்தா உனக்கு வறைதின னக் குழம்புவைக்க.. நண்டு கணவாய்க்குப் போட்டுக்காய்ச்ச.. ஆட்டுக்கு மருந்துகுடுக்க.. இப்பிடி எல்லாத்துக்குமே ஆரிட்டையேன் இரக்கவும் மரத்தை அழிக்கவும்தான் வரும்... பேசாமல் அப்பிடியே சொன்னமாதிரிக் கொழுத்து தம்பி... ஓடப்பார்ப்பினை நெருப்பிலை எல்லாத்தையும் தட்டிப்போடு...

என்ன நீங்கள்... அது களை அங்கினை கூட்டித் தள்ளி அங்காலை விடாமல் கொழுத்துறது பாவமெல்லோ.... விடியக்காத்தாலை பாவஞ் செய்யாமல்.. வாத்தியாரின் மனைவி மரகதம்தான் அடுக் களையிலிருந்தவாறே கூறினாள்.

மூத்தவனுக்கு கண்ணி லைபட்டு மூண்டாம் வருசம் ஆசுப்பத்திரிவழியிலைஏறி இறங்கி... பட்டஅனுபவம் அதுக் கிடையிலை மறந்திட்டியளோ?

பக்கத்துக்காணியுக்கை

குமரன்...குப்பை கொட்டி எண்ணை ஊற்றி பிடித்த சிறு கிளைகளையும் வெட்டி அடுத்தகாணிக்குள் சென்ற சிறு கொப்பையும் வெட்டிப்போட்டுக் கொழுத்திககொண்டுநின்றான்.

"என்ன குமரன் மயிர்க் கொட்டியோ" என்று பக்கத்துக் காணிக்காறன் கேட்கவில்லை பார்த்துக்கொண்டு போனதை குமரன் கண்டுவிட்டு யோசித் தான். இந்தமனுசன் ஏன் ஒண்டும் பேசாமல்போகுது. தன்ரவளவுக்குள்ளாலைதான் இஞ்சாலை வந்திருக்கிறதை அவர் தெரிஞ்சிருக்கிறார் போலும் அதுதான் ஆள் கண்டும் காணாதமாதிரி... குமரன் மனதிற்குள் நினைத்தவாறு மயிர்க் கொட்டிகளை முற்றாக அழித்துவிட்டு வந்தான்.

அப்பா சொல்ல முந்தி நீ முடிச்சிடுவாய்...தாய் ஒரு மாதிரிப் புகைய... உனக்கு பாவபுண்ணியம்பற்றி தெரியா மல் புசத்தாதை... மரத் தைக்காத்த பணியைப்பார்த் தான் மகன் செய்திருக்கிறான் புரியுதோ...? அழித்தல்... காத்தல்... என்பதைக்கடவுட் தொழிலாகச் சொன்னதெல் லாம் தீமையை அழித்து நன்மையைக் காப்பதற்காக வேதான். மயிர்க்கொட்டிகள் தீயன... அதை அழிப்பதன் மூலம்.. மகன் மரத்தைக்காக் கும் பணியையும் மனிதரை மயிர்க்கொட்டிகள் தீண்டும் தீமையையும் தடுத்து அழித் திருப்பது தேவையான உச்சக் கட்டப்பணி புரிந்ததா? என்றார் வாத்தியார்.

மரகதம் மகனையும் வாத்தியாரையும் பார்த்துச் சிரித்துக்கொண்டேசொன்னாள் தீதினை அழிப்பின் நன்மைகள் ஓங்கும் அழித்தலும் காத்தலும் அவரவர் கடனே.

**வளவை வளவன்**

## இனத்தோடு இனமாய்

உயிருள்ள எல்லாம் பலதரம்
என் கண்ணில் ஜடமாய் தெரிந்தது
உயிரில்லா நீ
என்னுள் உயிரானாய்

உன்னைத் தொட்டு இன்று
ஓர் ஐந்தாண்டு தாண்டியிருக்கும்
அந்த ஐந்தாண்டில் உன்னைத்
தொடாத நாள் உண்டா.

நான்
அகதியாய்... அநாதரவாய்
அசதியாய் ஆனபோதெல்லாம்
ஆறுதலுக்கு நீமட்டுமிருந்தாய்
பல சமயம்.

உன் உடம்பில் ஏதேனும்
ஒன்றென்றால் அதுசரியாகும் வரை
என் உடம்பில் நிறைவில்லை.

நான் மட்டுமல்ல
எம் இனத்தின் வாழ்வெல்லாம்
அரைவாசிக் காலம்
உங்கள் இனத்தோடுதான்
கடந்திருக்கின்றது.

எம் மண்ணின் வாசனையோடு வரும்
இலக்கியப் படைப்புக்களில் எல்லாம்
உங்களின் இனம் நிறைய இடங்களை
நிறைத்திருக்கின்றன.
ஏன்! அவையே ஒரு பாத்திரமாகிப்போயின.

எங்கள் திரு நாட்டின் பல
வீடுகளின் பொருளாதாரம்
தீர்மாணிக்கப்படுவது.
உங்கள் இனத்தால் தான்.
ஆனால்!
என்னோடும் - எங்கள் இனத்தோடும்.
ஒன்றாகிவிட்ட ஈருருளியே!

இத்தாவில் - சீலன்

## வேருக்கு ஒரு விண்ணப்பம்

வேரே!
தயவு செய்து
வெளியே வந்துபார்
நீ!
வேராய் இருப்பது
நிழல்களும்
கனிகளும்
குளிர்மையும் தரும்
மரத்திற்கு என்றே
நீ
ஆழ வேரூன்றி
ஆணி வேருமாகி
பக்கவேருமாகி நிற்கிறாய்
வேரே!
தயவு செய்து
வெளியே வந்து பார்
கிளைகள் பலதிற்கு
பூக்களை தாங்கவும்
காய்களைத் தாங்கவும்
கனிகளை சுமக்கவும்
விருப்பமில்லைப்போல்
வெறுமனே இருக்கின்றன.
இலைகளை உதிர்ந்து விட்டு
பாதைகளின் குறுக்குமறுக்குமாயும்
நீட்டிக்கொண்டிருக்கின்றன
இளைப்பாற நினைத்த ஒருவன்
உக்கல் கிளைகளும்
பச்சைகளுக்குள் மறைந்து
இருப்பது கண்டு
விலத்திப் போகிறான்
வேரே! தயவு செய்து
வெளியே வந்து பார்
நீ வேராய் இருப்பதன்
நோக்கத்தைப்பரிசீலிக்க

பொன்காந்தன்

## படித்ததில் பிடித்தது...

### மரங்கள், நதிகள், படகுகள், தாரகைகள்

மற்றவை எதுவும் இல்லாமல்
என்னால் வாழ முடியும்
ஆனால்
மரங்கள் இல்லாமல்
வாழவே முடியாது
நேராகவும் வலுவாகவும்
என் வாழ்வில்
மரங்கள் இருக்கட்டும்.

மற்றவை எதுவும் இல்லாமல்
என்னால் வாழமுடியும்
ஆனால்
நதிகள் இல்லாமல்
வாழவே முடியாது
என்மரங்களுக்கு அருகே
ஆர்வத்தோடும் விழிப்போடும்
ஒரு நதி இருக்கட்டும்.

மற்றவை எதுவும் இல்லாமல்
என்னால் வாழமுடியும்
ஆனால்
படகுகள் இல்லாமல்
வாழவே முடியாது
என்மரங்களுக்கு அருகேயுள்ள
நதியின்
உயிர்ப்பான எதிர்பார்ப்போடு
ஒரு படகு இருக்கட்டும்.


மற்றவை எதுவும் இல்லாமல்
என்னால் வாழ முடியும்.
ஆனால்.
துருவ நட்சத்திரமே
நீ இல்லாமல்
என்னால் வாழமுடியாது.

என் மரத்தை நதியை
படகுகளை
இருள் சூழ்ந்து கொள்ள
திசையே தெரியாமல்
நான் அலைப்புறும்வேளை
ஒளியே இல்லா என்
வானிலே
துருவ நட்சத்திரமே
நீ வந்து வழிகாட்டு.

பெங்காலியில்:- நிவேந்திரநாத்சக்கரவர்த்தி,
ஆங்கிலத்தில்:- ஸ்வபீனா துட்பி,
தமிழில்:- வின்சென்ற் புவோறன்ஸ்.

# குழந்தைநாதம்

## நல்ல தீர்ப்பு



எழில் கொஞ்சும் ஒரு கிராமம் அதில் வளர்ந்து வரும் ரதனும் சுதனும் மிகவும் நெருக்கமாக பழகிவரும் இணைபிரியாத நண்பர்கள். ஒருவர் மேல் ஒருவர் அதிக நட்பு உடையவர்கள் இருவரும் ஒரு பாடசாலையில் கல்வி கற்று வந்தார்கள் ரதனை விட சுதன் கொஞ்சம் படிப்பில் கெட்டித்தனமானவன் இருந்தாலும் சற்று வித்தியாசமான குணமுடையவன் தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற பெருமிதம் கொண்டவன் வழமையாக இருவரும் தங்கள் விடுமுறை நாட்களை அருகிலுள்ள சிறுவர் பூங்காவிலேயே கழிப்பார்கள். இவர்கள் பூங்காவில் விளையாட்டில் மட்டும் ஈடுபடாது வேறு விடயங்களிலும் ஈடுபடுவது வழக்கம் இப்படியாக இவர்களுக்கிடையில் ஒரு நாள் விவாதம் ஒன்று கிளம்பியது. அப்போது ரதன் இந்த உலகில் எத்தனை சாதிகள் உள்ளது என்பதே உனக்கான கேள்விகள் என்றான். என்ன சாதியோ? ம்... சாதியெண்டா ஒரு பத்துக்கு மேற்பட்டது இருக்கும்.

இல்லை இல்லை இது முற்றிலும் தவறான விடை இல்லை நான் சொல்வதே சரியான விடை. இல்லை இப்போது நான் சொல்கிறேன் கேள் உலகில் ஆண் சாதி ஒன்றும் பெண் சாதி ஒன்றும் ஆக மொத்தத்தில் இரண்டே இரண்டு சாதிகள் தான் உள்ளது. இருவருக்கும் இடையில் விவாதம் மிகக்காரத்துடன் சூடு பிடித்தது.

இதை அவதானித்த பெரியார் ஒருவர் ஆ. நீங்கள் இருவரும் சண்டை பிடிக்கக் கூடாது இப்ப நான் சொல்லுறன் கேளுங்கள் உலகத்தில் இரண்டு சாதிகள்தான் உள்ளது. அது ஆண்சாதி ஒன்றும் பெண்சாதி ஒன்றும் ஆனால் சில மனிதர்களின் மூடநம்பிக்கையால் தொழில் ரீதியாக சாதிகள் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆனபடியால இதுகள நாங்கள் சொல்லக்கூடாது. இரண்டு சாதியெண்டு உங்களில் யார் கூறினீர்கள் நான்... நான் தான் தாத்தா கூறினேன் மகிழ்ச்சியுடன் ஆரவாரித்தான் ரதன்,

சுதன் தாத்தா நான் இவ்வளவு நேரமும் ரதனோட சும்மா விவாதம் செய்தது என்னிலதான் பிழை என்னை மன்னித்துவிடுங்கள் தாத்தா. சரி இருவருக்கும் இப்போது சந்தோசம் தானே! இருவரும் போய்வாருங்கள்!

தாத்தா விடைகொடுக்க ரதனும் சுதனும் பெரியாருக்கு நன்றி கூறி வீடுநோக்கி புறப்பட்டார்கள்.

**சாந்தனுரரப்பன்**

## வாரம் ஒரு குறள்



நாம் எப்படிப்பட்டவர்கள் என்று பிறருக்கு இனம் காட்டுவது நாம் பிரயோகிக்கும் வார்த்தைகளன்றி வேறில்லை.

அதனால்தான் வார்த்தைப் பிரயோகங்களில் கவனமாக இருக்கவேண்டும் என்று கூறப்படுகின்றது. நல்ல வார்த்தைகள் நம்மை நல்வழிப்படுத்தும். மாறாக தீயவார்த்தைகள் எம்மை இழிநிலைக்குத் தள்ளிவிடும். பிறர் எம்மை மதிப்பதும் வெறுப்பதும் எமது வார்த்தைகளில்தான் தங்கியுள்ளது.

நாம் எவ்வளவோ தான தருமங்கள் செய்வோம் ஆனால் எமது உதட்டிலிருந்து ஒரு நல்லவார்த்தையுமே வரமாட்டாது. நாம் செய்த தருமங்கள் எல்லாம் தீய வார்த்தைகளில் பொசுங்கிப் போகின்றது நல்ல வார்த்தைகள் இருக்கும் போது ஏன் தீயவார்த்தைகளை நாடவேண்டும்? இச்செயல் நல்ல சாப்பிட ருசியான பழங்கள் இருக்கும் போது கசக்கும் காய்களை உண்பதற்கு சமனானது. இதைத்தான்

*"இனிய உளவாக இன்னாத கூறல்*
*கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."*

என்று வள்ளுவப்பெருந்தகை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 27

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | ந | வ | கை | ச | ரு | தி |
| ய் | மு | னா | கை | சி | ர | யா |
| மா | கே | ஆ | வ | சு | ன | ர் |
| ழி | வி | பு | த | டு | ர | ல் |
| ர் | வை | பி | கா | இ | பி | கா |
| தோ | டை | கு | ட் | த் | து | ள் |
| ரா | சு | சீ | ழி | ல் | க் | வீ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 25 இன் விடைகள்

01. கரும்பலகை.
02. கதிரை.
03. மேசை.

01. தயிர்.
02. மோர்.

## சொற்சிலம்பம் - 25 இன் பரிசுக்குரியவர்

ச. கஜிதா,
மு/பாண்டியன்குளம் ம.வி.
வவுனிக்குளம்.

## சொற்சிலம்பம் - 25 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. வ.யோகராசா, 9ஆம் வட்டாரம், கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.
02. சி.றபினா, விஷ்னு வித்தியாலயம், புத்தூர்.
03. கி.கிரிசாந், தரம் -05, கிளி/மகாவித்தியாலயம்.
04. க.நடராசா, செக்கட்டிப்புலவு, வவுனியா.
05. ம.ரதீஸன், கனகாம்பிகைக்குளம், இரணைமடு.
06. ஜெ.ஜெயசுலக்ஷன், யா/மருதங்கேணி.இ.த.க.வி தாளையடி.

01. நாம் இறைச்சியைப் பெறும் உயிரினங்கள் இரண்டு?

01) ......................................
02) ......................................

02. மாதங்கள் மூன்று தருக?

01) ......................................
02) ......................................
03) ......................................

பெயர் :- ......................................
முகவரி :- ......................................
......................................

*சொற்சிலம்பம் -27*
*ஈழநாதம்.*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*

## புத்தகத்தைப் பாதுகாப்பது எப்படி?

01. படிக்கும்போது அதிகமாகப் பிரிக்காதீர்கள்
02. புத்தகத்தின் மூலைகளை மடிக்காதீர்கள்
03. தூக்கம் வரும்போது எடுத்து வைக்க மறக்காதீர்கள்
04. எண்ணெய் தண்ணீர் பட்டகைகளால் தொடாதீர்கள்.
05. தலையணையாக வைத்துக்கொள்ளாதீர்கள்

**ஜெயூரன்,**
**மு/விசுவமடு ம.வி.,விசுவமடு.**

## நகைச்சுவை



"உங்க மனசில எப்பவும் ஒரு குற்ற உணர்வு இருக்கும். இப்ப கூட ஒரு குறுகுறுப்பு உங்களுக்கு இருக்கு சரியா?"

"ரெம்பசரி! கையில பணம் இல்லாமல் உங்க கிட்ட சாத்திரம் கேக்கிறனே என்ற குறு குறுப்புத்தான்."

**S.கௌரீஷன்**

## முதியோர் அரும் பெரும் சொத்தாகும்

இளைய வயதில் எங்களுக்காய்
இனிய செயல்கள் பல செய்து
கனிந்து முதுமை பெற்று விட்ட
முதியோர் அரிய சொத்தாகும்.

நிழலைச் செய்ய மரம் வைத்து
நீடுவாழப் பொருள் தேடி
ஓடி ஓடி எங்களுக்காய்
உழைத்த முதியோர் பெருஞ்சொத்தாகும்.

இன்று நாங்கள் நலமாய் வாழ
நேற்றே அதற்கு வித்திட்டீர்
போற்றி உங்கள் பாதம் பணிந்தோம்
என்றும் நீங்கள் துணை புரிவீர்

அன்றும் இன்றும் முதியோர்கள்
அரிய பெரிய சொத்தாகும்
என்றும் அவரை அன்பு செய்து
கைகள் கூப்பி வணங்கி நிற்போம்.


ஆதிரை தேவராசா,
மு/மல்லாவி மத்திய கல்லூரி.

## கைவண்ணம்



**ஆ.தர்சன்**

## இங்கு சம்பந்தமில்லாத பொருள் ஏது?



## அன்பின் பெருமை

இந்த உலகத்தின் ஒளிக்குச் சூரியன் உண்டு. உலகின் கொடுமைகளை வேரோடு அழித்திட அன்பு என்ற மருந்து உண்டு. அன்பு ஆனந்தத்தின் சிகரம். ஆன்மாவின் தாய்ப்பால் தேன் பாயும் தேனாறு.

அன்பில்லா வாழ்வும் ஒரு வாழ்வா? "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்" என்றார் வள்ளுவனார். அன்பானவர்களே!

எல்லா மதங்களும் அன்பையே போதிக்கின்றது. எல்லா மகான்களும் அன்பையே ஆதாரமாக்கினர். எல்லா ஞானிகளும் அன்பால் அரனை அடைந்தனர். வாழ்வின் உயிர் மூச்சு அன்பல்லவா?

அன்பால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. அன்பே இறைவன். அன்பே கருணை. அன்பே இன்பம். அன்பே வாழ்வு. அன்பு அணையாத ஒளிச்சுடர். அந்தச் சுடரைக் கையில் ஏந்தாமல் உலகம் தடுமாறுகின்றது. ஏன் இந்த அகந்தை நிலை? வேகமாக அழிவுப் பாதைக்குச் செல்லலாமா?

சகோதர சகோதரிகளே!

அல்லும் பகலும் அன்பை வளர்ப்போம். ஒருவர்க்கொருவர் அன்பைப் பரிமாறுவோம். எல்லா உயிர்களுக்கும் அன்புப் பணிபுரிவோம்.
அன்பு வெள்ளம் பாயட்டும்.
உலகில் புதுமை பொங்கட்டும்.
உயிர்கள் அன்பால் மகிழட்டும்.

**மணிமேகலை**

விவேகிக்கு உரிய ஒரே பானம், தண்ணீர். - ஹென்றி டேவிட் தோரோ

# புரிதலும் தெளிதலும்

விபத்து என்பது ஒரு விளையாட்டு என்பது போலாகிவிட்டது.

விபத்துத்தொடர்பாக எத்தனை தடவைகள் ஊடகங்களில் எழுதப்பட்டுவிட்டது. எத்தனை தடவைகள் விபத்துக்களால் எத்தனை உயிர்கள் பறிக்கப்பட்டுவிட்டது.

ஆயினும் ஏ-ஒன்பது வீதியில் விபத்து நடந்தவண்ணமே உள்ளது.

விபத்துக்கான காரணங்களைத் தேடிக் கொண்டுபோனால் ஒன்றில் பாதசாரிகளின் கவனயீனமாக இருக்கும் அல்லது சாரதிகளின் கவனயீனமாக இருக்கும் எனக் காரணங்கள் நீளும்.



## தடுப்பது எப்படி?

ஆனால், விபத்தினால் பறிக்கப்படும் உயிர்கள் மட்டும் நிறுத்தப்பட்டதாக நிற்கும் போலவும் தெரியவில்லை.

அவ்வாறாயின் இதனைத் தடுக்கவே முடியாதா என்ற நிலை இன்று எல்லோர் மனங்களிலும் எழுகிறது.

ஆரம்பத்தில் வீதி விபத்துக்கள் கிளிநொச்சி நகரின் மையத்தை அண்டிய பிரதேசத்தில் நடந்தது. பின்னர் கட்டுப்பாட்டு வேகம் கொண்டுவரப்பட்ட காவல்துறையினரின் பணியும் முடுக்கிவிடப்பட்டதன் பின்னர் நகரத்திற்கு வெளியிலும் இது தொடர்கிறது.

ஆனால், இந்த வீதி விபத்துக்களால் அதிகமாக ஏற்படும் உயிரிழப்புக்களைத் தடுக்கக் கூடிய கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டேயாக வேண்டும்.

இதில் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது சமாதான காலத்தின் பின்னர் அதிகரித்த வாகனங்களின் பாவனை இந்த விபத்துக்குக் காரணமாகின்றது.

அதிலும் தென்பகுதியிலிருந்து வரும் ஹையஸ் வாகனங்களின் அதிவேகம் மற்றும் அதன் சாரதிகள் திடீர் திடீரென ஏனைய வாகனங்களை முந்திச்செல்ல முற்படும் போது ஏனைய வாகனங்களையும், பாதசாரிகளையும் கவனத்தில் கொள்ளாமையென இந்த அனர்த்தங்கள் தொடர்கின்றன.

இந்தநிலையில் பாதசாரிகள் மற்றும் வாகனச்சாரதிகள் உரிமையாளர்களுக்கு அதிக விழிப்பை ஏற்படுத்தவேண்டியதன் தேவை அதிகமாகவே உள்ளது.

இதற்கான பணியினை விரைவாக மேற்கொள்ள வேண்டியே உள்ளது.

இது இன்று கண்ணிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தியதற்கு இணையாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இந்த வீதி விபத்துக்களில் ஏற்கெனவே எமது பத்திரிகையில் சுட்டிக்காட்டியது போல உயிரிழப்புக்களை சந்திக்கும் வீதிவிபத்துக்களும், பாரிய காயங்களை ஏற்படுத்தும் வீதிவிபத்துக்களும் தான் வெளித் தெரியவருகின்றன.

இவற்றைவிட எத்தனையோ சிறு,சிறு விபத்துக்கள் நடந்தவண்ணமேயுள்ளன.

இவை எவரும் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை.

ஆனால் விபத்துக்கள் எந்தவகையிலும் ஏற்படவே செய்கின்றன.

இந்த வகையில் இந்த வீதி விபத்துக்களிலிருந்து தப்பித்துக்கொள்ள ஒவ்வொருவரும் தனிமனித ரீதியில் சுய பாதுகாப்பிற்காக அவர், அவர் எச்சரிக்கையோடும் பாதுகாப்போடும் எமது பயணங்களை மேற்கொள்ளவேண்டியது அவசியம்.

இதனை கருத்திற்கொள்வதன் மூலம் எம்மை நாமே, ஓரளவுக்கேனும் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

வேழினி

**தொடர் - 10**

நேரம் மதியத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. விமானத்தை விட்டு இறங்கியபின் இதுவரை நேரமும் எந்தத் திரவ அல்லது திட பதார்த்தமோ எங்கள் உடல்களின் உள்ளேயோ அல்லது வெளியேயோ போகாத அவதி மெல்ல மெல்லக் கூடலாயிற்று! இருந்திருந்து விட்டுத்தாண்டுகிற சின்னச் சின்னக் குடியிருப்புகள் ,சிறு தோட்டங்கள், பற்றைகள், சில சமயம் மரக்கூடல்கள் இவற்றை விட்டால் பெரும் பாலான நேரம் ஒரு அத்துவான வெளியின் குறுக்கே நீண்டு கிடந்த பாதையில்தான் எங்கள் வான் ஓடிக்கொண்டிருந்தது. நாலே நாலுபேர் மட்டும் அயூப்பிற்கு அருகிலிருந்த இருக்கையை பெரிய மனதுடன் விமுக்திக்குக் கொடுத்திருந்தோம் ஒரு முன்னணிப் பத்திரிகை நிறுவனத்தின் ஊடகவியலாளர்



## (கென்யப் பயணக்கட்டுரை)

# காட்டு வெளியிடை

சாந்தன்

என எவரும் இலேசில் நம்ப மறுக்கும் சின்னப்பெண் குழந்தை போன்ற உற்சாகத்துடன் முன்னாலிருந்து எல்லாவற்றையும் ஆர்வத்துடன் அறிந்து கொண்டிருந்தார் எனக்கும் செல்வாவுக்குமென ஆறு இருக்கைகள் விரும்பிய போது விரும்பிய இடத்தில் உட்கார்ந்து கொள்ளலாம்! வெளியே வெய்யிலும் இல்லை வெக்கையும்மில்லை பிரகாசமான பகல் பொழுது.

' இப்போது ஓரிடத்தில் நிற்கப் போகிறோம்' என்றார். அயூப் எங்கள் பிரச்சினையை உணர்ந்தவர் போல.

' அங்கு சிற்றுண்டிச்சாலை ரொய்லற் வசதிகள் எல்லாமுண்டு' அனுபவமுள்ள சாரதிதான்.


பாதையிலிருந்து சற்று உட்தள்ளி, தனியே கடைபோல் தெரிந்த ஒரு மரவீட்டின் முன் வான் நின்றது தகரக்கூரை. சுவரின் மரச்சட்டங்களுக்கு கறுப்பும் வெள்ளையுமாய் மாறிமாறி-வரிக்குதிரை போல-வர்ணந்தீட்டியிருந்தது பின்னால் மரச்சிலைகள், வரிசையாக நாங்கள் இறங்கியதும் இறங்காததுமாய். 'கரிபு!' என்று கூறியபடி உள்ளேயிருந்து இரு இளைஞர்கள் ஓடிவந்தார்கள் 'கரிபு' என்றால் 'நல்வரவு' என்று எனக்குப் பொருள் தெரியும் டேவிட் ருபாடிரி என்ற கிழக்காபிக்க கவிஞனின் 'ஸ்ரான்லி முத்தேசாவைச் சந்திக்கிறான் கவிதையில் அது வருகிறது: 'ம்ரு ம்வியுப்பெ கரிபு'- வெள்ளை மனிதனே உனக்கு நல்வரவு- என்று மேற்குலகு, ஆபிரிக்காவில் நுழைவது பற்றிய கவிதை அது படித்தும் படிப்பித்தும் அந்தக் கவிதையின் அந்த வரியும் அதன் பொருளும் மனப்பாடமே ஆகிஇருந்தது. ஆனால் அது. என்ன மொழி என்றுதான் தெரியாதிருந்தது. இப்போது இந்த இளைஞர்களின் குரல் ருபாடிரியையும் ஸ்ரானிலியையும் முத்தேசாவையும் மட்டுமன்றி என் ஐயத்தையும் எனக்கு நினைவூட்டவே அருகில் நின்ற அயூப்பிடம் கேட்டேன்

'கரிபு என்ன பாஷை?' ஸ்வாஹிலி என்றார்.

அதோ கழிப்பறை, இந்தப்பக்கம் வந்தால் சிற்றுண்டிச்சாலை' ஒரு இளைஞன் சுட்டினான்.

' அவற்றை முடித்துக்கொண்டு எங்கள் கடையை வந்து ஒருதரம் பாருங்கள்' என்றான் மற்றவன்.

பிறகு வந்த எங்களின் எல்லா நெடும் பயணங்களிலுமே இப்படி இடையில் ஒன்று அல்லது இரண்டு தரிப்பிடங்களில் நின்றுதான் தொடர்ந்தோம். எங்கோ ஒரு ஏகாந்தப் பெருவெளியில் தட்டந்தனியனாய்த் தெரியும் இந்தக் கொட்டில் அமைப்புகள் உண்மையில் 'த்றீ.இன்-வண் ஆக அமைந்தவை: சிற்றுண்டிச்சாலை அருகே ஒரு கைவினைப் பொருட்கள் விற்கும் கடை, பின்னால் ஒரு கழிப்பறை என்று சுற்றுலாப் பயணிகளுக்கும், கடைக்காரர்களுக்கும் இது பரஸ்பர அனுகூலமாகவே அமைந்தது. எல்லா ஓட்டுநர்களும் ஒரு தரிப்பிடத்திலேயே வாகனங்களை நிறுத்துவார்கள் என்றில்லை அவரவர்க்கு வாலாயமான தரிப்பிடங்கள் இருக்கவே செய்தன-எங்கள் கொழும்பு-யாழ்ப்பாணம்



பஸ்களோ,வான்களோ தத்தமக்குப் பிடித்த கடைகளின் முன்னால் போய் நிற்கிற மாதிரி. கழிப்பறைகள், தூய்மையாகவே இருந்தன. அந்த அலுவல்களை முடித்துக்கொண்டு சிற்றுண்டிச்சாலையில் போய் அமர்ந்தால், வாழைப்பழம் சீப்புச்சீப்பாய் அடுக்கியிருந்தது. அதே கப்பல், அதே கதலி. இதரை இல்லை. மருத்துவ வாழை மாதிரி ஒன்று. தேநீருக்கு ஓடர் பண்ணிய போது மேலை நாடுகளிற் போல எல்லாம் தனித்தனியாய் வந்தன. "எருமைப்பாலா?!" நல்ல தடிப்பாய்த் தெரிந்தது. "நோ!", அயூப் என்னை வியப்புடன் பார்த்தார், "பசுப்பால், இது! இங்கு நிறையப்பால் வளமிருக்கிறது. பாற்பொருள் உற்பத்தித்தொழிற்சாலைகள் பல இருக்கின்றன. சீஸ் மாத்திரம் மூன்று இடங்களில் செய்கின்றார்கள்..."

பால் பாலாய்த்தானிருந்தது. பழம்பாணும், பருப்பும், மாஷும் தின்று 'வாங்க வாளி நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்' யாழ்ப்பாணத்தில் தருகிற பாலையோ அல்லது பக்கற்றில் வருகிற, ஏதோ ஒரு 'ஸ்பிறே'யையோ குடித்துப்பழகியிருந்த வாய்க்கு, பசும்புல் தின்று இந்தப்பசுக்கள் தந்த பால் உண்மையிலேயே சுவையாய்த் தானிருந்தது.

'இங்கேயே இவற்றை வாங்கிவிடுங்கள்...' வரிசையாக அடுக்கியிருந்த தண்ணீர்ப்போத்தல்களைக்காட்டினார் அயூப். 'இதைவிட வேறொன்றையும் தப்பித்தவறிக்குடித்து விடாதீர்கள். அதோடு ஹோட்டல் குழாய்களில் வருகிற நீரால் வாய் கூடத் கொப்புளிக்கவேண்டாம். அதற்கும் இதைத்தான் பயன்படுத்துங்கள்'' இணையமும் இப்படி ஏதோ சொல்லியிருந்தமை இப்போ நினைவு வந்தது. ஆளுக்கு நாலு போத்தல் வாங்கிக்கொண்டோம்.

கைவினைப்பொருட்கடைக்குள் போனபோது திகைப்பாயிருந்தது! நடப்பதற்கு மாத்திரம் நடுவில் மூன்றடி அகலப்பாதை விட்டு அந்தப்பெரிய கொட்டில் முழுதும் மரச்சிலைகள், சிற்பங்கள், மற்றும் கலைப்பொருட்கள். அவற்றில் தான் எத்தனை விதம். உள்ளங்கை அளவு வேலைப்பாட்டிலிருந்து. ஆளுயரச்சிலைகள் வரை வரிசைவரிசையாக அடுக்கியிருந்தன. கருங்காலி. தேக்கு.இன்னும் பெயரறியா மரங்களில் கடைந்த சிலைகள்! ஒரு வெங்கறான் வெளியில், நிலங்கூடப்பூசாது வெறும் மண்ணாய்க்கிடக்கும் ஒரு தெருவோரத்தகரக்கொட்டிலுக்குள் இவ்வளவு கலைப்பொருள்களா! என்று மலைப்பாக இருந்தது. மரத்தை விட, மலக்கைற் என்ற பச்சைக்கல்லிலும், சோப்ஸ்ரோன் என்ற வழுவழுத்த கல்லிலும் கடைந்த சிறிய வேலைப்பாடுகள் வேறு! இவ்வளவையும் யார் வாங்குவார்கள் என்றிருந்தது.

சிலைகளைப்பார்த்ததும் வந்த பிரமிப்பு விலைகளைக்கேட்டதும் பத்துமடங்காயிற்று! ஆறங்குலத்திற்கு ஒன்பதங்குலம் வருகிற ஒரு வாழைப்பட்டைச்சித்திரம் ஐந்நூறு ஷில்லிங் சொன்னார்கள்' அதைக்கேட்டபிறகு சிலைகளின் விலையைக்கேட்கிற எண்ணமே வரவில்லை. அந்த வாழைப்பட்டைச்சித்திரம், சும்மா சொல்லக் கூடாது, எளிமையாகவும் அழகாகவுந்தான் இருந்தது, காய்ந்த பட்டையை உரித்து அதிலுள்ள கறுப்பு-வெள்ளை நிறங்களில் ஒரு உருவத்தைக்கண்டு அதற்கு ஏற்றாற்போல சிவப்புக்கடதாசி மட்டும் ஏற்ற இடங்களில் ஒட்டி, எளிமையான ஓவியங்களாக ஆக்கியிருந்தார்கள். இங்கே நாமும் அவற்றைப் போலச்செய்யலாமே என்ற எண்ணம் தான் முதலில் வந்தது. (தொடரும்)

## புனர் வாழ்வு

அதிகாரமும் ஆதிக்கமும்
என்ற அருமையான
ஆடையணிந்து அலைந்து,
திரிபவர்களின் அசிரத்தையான,
அடாவடித்தனமான,
செயல்களால், இன்றுபல
மொட்டுக்கள் விரியாமலேயே
விரிக்கப்பட்டு சாக்கடையில்
தவழவிடப்படுகின்றன
பூஜிக்கப்பட வேண்டியவையெல்லாம்
தூஜிக்கப் படுகின்றன
விரிவதும் உதிர்வதும்
மலர்களுக்கு ஒருமுறைதான்
இயற்கையாய் நிகழ்கையில்
அதற்கிணை ஏதுமுண்டோ?
ஏனோ இன்று எல்லாம்
ஏறுமாறாய் தான் நிகழ்கின்றன
இதனால்தானோ மனதிலும்
ஒருபுரியாத புதிர்.....
புனர்வாழ்வு என்பது
பூக்களுக்கும் பொருந்தும்
என்று நினைக்கிறார்களோ.

பா.வனஜா

## பெண்ணே!

இலக்கியச் சோலையில்
காதல் கவிதைகளை
தேடிப்படிக்கும்
உன்-தந்தை கூடவா?
மாப்பிள்ளை மார்க்கட்டில்
ஜாதகக் குறிப்புடன்
அலைகிறார்.

N.ஜெயவாணி

## நிலாவே வா!

நிலவை பெண்ணென்று
கவிஞர்கள் வியந்தனர்
நானோ நிலவை
பெண்ணென அழைக்கமாட்டேன்!
ஒரு இரவில் வட்டம்
இன்னொன்றில் பிறை
மற்றொன்றில் அரைவட்டம்
சிலநேரம் வெற்றுஇருட்டு
எனக்கு அது பிடிக்க வில்லை
நாளும் நாளும் மாறும்நிலவு
நான்விரும்பும் நிலவு!
பூமியிலே தவழ்கிறது
அது என்றென்றும் முழுநிலவு
அதில் பாதியும்பின்னமும்இல்லை
எப்போதும் முழுநிலவென
அதுவலம் வருகிறது
பேசுகிறதுஅழகாகசிரிக்கிறது
கவர்கிறது முத்தம் கொடுக்கிறது
அதுவே நான்விரும்பும் நிலவு
அது என்பெண்நிலவு!

S.வசந்தி

## தோழமையின் சக்தி

தோழமை பற்றி
எதுவென்று தெரியாது
பல நெஞ்சங்கள் தவிக்கின்றன
சந்தர்ப்ப வலையில்சிக்குண்டும்
சுயநலக் கத்தியில் அறுபட்டும்
நட்புக்கு பிழையான அர்த்தங்கள்
சொல்கின்றன
இதுதோழமையின் கத்தி........
உண்மைத் தோழமை
கால்கள் தளரும் போதும்
நீளும் அவர் கைகள்
சறுக்கும் போது தாங்கும்
தோள்கள்
இதுதோழமையின் சக்தி

மு.ராணி

## ஊர் வனப்பு

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய
எழில்பூத்த எங்களூரில்
எங்கு பார்த்தாலும் இப்போது
எலும்பும், மண்டையோடுகளும்,
சிங்கள தேசத்துச் சிப்பிகளின்
சிவப்புளிகள் செதுக்கிய
சிற்பங்கள் நிறைந்த
சிரசிழந்த மரங்களும், அவற்றிலே
"கவனம் மிதிவெடிகள்"என்ற
கண்டிப்புப் பலகைகளுமே
கண்ணுக்கெட்டிய தூரம்வரை
காட்சி தருகின்றன.

க.லிங்கராஜா

## மழைக் காலம்

இடியும் மின்னலும்
முகில்களைப் பிளந்தது
கரும்புகை கவ்விய
முகில்களை
பிராண்டியது பூமி
மழைநீர் முத்துக்களை
உதிர்ந்து சிதறியது.

தமிழினி.

### மரணம்

வருமானத்தின் வழிக்கு
வேலியிடப்படும் போது
இறைவன் எங்களுக்காய்
திறந்து விடும் பாதை

### சமாதானம்

ஊர் கூடி வரவில்லை
பாதிவழியில்
புதைந்து நிற்கும் தேர்.

கு.தவசீலன்

## நமது எண்ணங்களே வாழ்வைத் தீர்மானிக்கின்றன

ஒருமனிதன் தன்னைப்பற்றி எப்படி என்னுகிறானோ அப்படியே உருவாகிறான் என்பது மனோ தத்துவஉண்மை.நல்லதேநடக்கும் என்று நம்புவது ஒருஅருமையான வாழ்க்கைக் கோட்பாடு. நடந்துகொண்டிருந் தவற்றைபற்றிஎண்ணிக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பதும்நடக்கப் போவதைப்பற்றி பாதகமாக சிந்தித்துக்கொண்டிருப்பதும். எந்தவிதத்திலும் எமக்கு நன்மை அளிக்கப்போவதில்லை.

நல்லதையே நினையுங்கள், நல்லதையே செய்யுங்கள் உங்கள் வாழ்வில் நடக்கும் அனைத்தும் நன்றாகவே நடக்கும் என்று சிந்தியுங்கள் அவ் வெண்ணம் வாழ்வை வளம்படுத்தும் இதையேபகவத் கீதையும் சொல்கிறது.

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அது நன்றாகவே நடக்கும்

கடந்த காலம் மீண்டும் வரப்போவதில்லை. நம்கைவசம் உள்ளது நிகழ் காலம் மட்டுமே! அதை நல்லபடிசிந்தியுங்கள்.எதிர்காலம் எப்படி அமையப்போகிறதோ என்று மனதை அலையவிடாமல் அதுநன்றாக அமை யும் என்று உறுதியாக நம்புங்கள்.இந்த நம்பிக்கை மிகுந்தசக்தி வாய்ந் தது.கடவுள் எனக்கு எப்போதும் நல்வழியே காட்டுவார் என்று இறைவனிடம் நம்பிக்கை கொள்ளும் போது கிடைக்கும்வெற்றிகூட இத்தகையதே. வழி எதுவானாலும், நல்லதே நடக்கும் என்று நம்புகிறபோது, அந்தநம்பிக்கை நல்லது நடப்பதற்கான பல வாய்ப்புக்களை அதிகரிக்கிறது.நல்லதே நடக்கும் என்றுநினைப்பது கண்மூடித்தனமான நம்பிக்கையல்ல. மனதின் சக்திகள் வெளிப்படுத்துகின்ற அருமையான உபாயம் இது.

எனவே தான் குழந்தைகளாய் இருக்கும்போதே நல்லஇலட்சிய எண் ணங்களை உருவாக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். குழந்தைகள் சிறு வயதில் கான்கின்ற கனவு அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகின்றபோது அவர்களின் சாதனைகளாக நிறைவேறியிருக்கின்றன. வாழ்க்கையில்வெற்றி பெற்ற பலருடைய வாழ்வில் இதை நாம் தரிசிக்க முடியும்.

நம்முடைய எண்ணங்களுக்கு ஏற்றபடிதான் நம்முடைய வாழ்க்கைச் சூழ்நிலை உருவாகின்றன. ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகின்றது என்று நம்புகின்றவன் சுபீட்சமான பிரகாசமான எதிர்காலத்தைப் பெறுகின்றான். உங்கள்மனதை அவநம்பிக்கையான எண்ணங்கள் சூழ்கின்ற போது, வெற்றி எம்மை விட்டுதொலைதூரம் சென்றுவிடுகிறது.

நல்லதை நடக்கும் என்று எண்ணி,எதிர்பார்த்த,ஆக்கபூர்வமான சிந்தனைகளை நீங்கள்உருவாக்கிக் கொள்கின்ற போது,உங்களைச் சுற்றி ஒரு சாதகமான சூழ்நிலையை நீங்கள்உருவாக்கிக்கொள்கின்றீர்கள்.

இரண்டாவது ஈழப்போரில் இலங்கை அரசையே கிடுகிடுக்க வைத் தவர் கரும்புலி கப்டன் மில்லர் இவர் தனது இளம் பராயத்தில் பட்டாசு கொழுத்துவதில் சூரராக இருந்தார். புதுவருடம்,பொங்கல்,தீபாவழி எதுவென்றாலும் வெடிகள் வாங்கித் தரும்படிவீட்டில்அடம் பிடிப்பார்.

வெடி கொழுத்துவதில் கூட பல முறைகளை கையாள்வார். சிரட்டையுள் வைத்து வெடிப்பது, தகரப்பேணியில் வைத்து வெடிப்பது எனபலமுறைகளில் வெடி கொழுத்துவார். இவ்வாறான வேளைகளில் சிரட்டைகள் சிதறும் போது கைகொட்டி குதூகலிப்பாராம். அவர் வெடிக்கு பயந்ததே இல்லை.

இளம்பராயத்தில்அவர் விருப்பம்காட்டிய சூழ்நிலை போராளியான பிறகு, முதலாவது கரும்புலியாக அவரை உருவாக்கியது. நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத் தற்கொடைத் தாக்குதலில் இராணுவ முகாமை சிதற வைத்தபோது அவர் தமிழீழம் போற்றும் கரும்புலியாக புகழ் பூத்தார்.

தற்கொடைப்படையின் முதல் உருப்பினரான மில்லர் சாதனை வீரராக தன்னை ஈகம்செய்த பின்னர், பலர் அவரது வீர சாகச கதையைக் கேட்டே கரும்புலியாக மில்லருடைய வீரசாகசத்தைப்பற்றிய வரலாற்றை சிறுவயதிலேயே மனதில் பதியவைத்துக்கொண்ட பலர் போட்டி போட்டுக் கொண்டு தற்கொடைப்படையில் இணைந்தவர்கள்.

எந்த ஒரு நிகழ்வு மனித மனத்தில் ஆழமாகப் படிகிறதோ,அதில் அவர்களுக்கு இயல்பான ஈடுபாடு ஏற்பட்டு விடுகிறது. இலட்சியம் மீதான உறுதி எத்தகையது என்பது மில்லரின் இலட்சிய வாழ்விலிருந்து எமக்குப் புரிகிறதல்லவா?

நல்லதே நடக்கும் என்று நம்புகிற போது, நல்லவற்றை செய்கின் ஆர்வம் பிறக்கின்றது. எண்ணம், சொல்,செயல் ஆகிய அனைத்திலும் நல்லதே நடக்கும் என்று நம்புகின்ற போது, நல்லகாரியங்கள் நடக்கத்தொடங்குகின்றன.

எதிர்காலம் பற்றிய எமது கனவுகள்கூடஆக்கபூர்வமாக அமைய வேண்டும் எண்ணங்களே இலட்சியக் கனவுகளை உருவாக்கின்றன. வாழ்க்கையை நம்பிக்கையுடன் பார்க்கபழகிக் கொண்டவர்கள்,நல்லதே நடக்குமென்று நம்பிச் செயற்படுகின்ற போது, அவர்களுடைய முழுச்சக்தி யும் வெளிப்படுகிறது. இதனால் வெற்றி இலக்கு எளிதில்கிட்டி விடுகிறது.

டாக்டர்.ச.முருகாநந்தன்

## குறுக்கெழுத்துப்போட்டி - 62



பெயர்:-

முகவரி:-

### இடமிருந்து வலம்

01. ஒன்பது இரவுகள்.
11. கள்வன்.
19. ஆலயம்.
25. செருக்கு.
32. மாலையில் மலர்வது(குழம்பியுள்ளது)
39. மாலைக்கு எதிரானது.
48. தொடக்கம்.

### மேலிருந்து கீழ்

01. சினேகிதன்.
02. வணக்கம்.
05. இயற்கைத் துறைமுகம்.
17. சூரியன்.
36. யானை.
39. கேட்கும் புலன்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.60 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. சிவராத்திரி.
09. கழுதை.
13. பசை.
15. திருவள்ளுவர்.
25. வீடு.
34. பால்.
43. வழி.
46. வேந்தன்.

**மேலிருந்து கீழ்**

01. சித்திரம்.
06. வரிசை.
09. கருமை.
17. வருடம்.
21. வேட்பாளர்.
25. வீணை.
37. விழி.
40. தலை.

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.62
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

**குறுக்கெழுத்துப்போட்டி**
**இல.60 இன் பரிசுக்குரியவர்**
**து.கிரிஜா,**
**இல:61C சிவன்கோவில்வீதி,**
**தோணிக்கல்,**
**வவுனியா.**

**குறுக்கெழுத்துப்போட்டி**
**இல.60 இன்,**
**பாராட்டுக்குரியவர்கள்.**

01. ப. இலக்கியா, திருநகர், கிளிநொச்சி.
02. ச. புளோறன்ஸ், கற்கிடந்தகுளம், முருங்கன், மன்னார்.
03. த. கலாறஞ்சினி, கணுக்கேணி கிழக்கு, முல்லைத்தீவு.
04. ஸ்ரீ. பிரசாந்தினி, வாடியடி, பூநகரி.
05. வ.சிவதர்சினி, அரசர்கேணி, பளை..
06. ம. அஜந்தா, றோ.க.மகளிர் கல்லூரி, நெடுந்தீவு.

பூமி


# நாடக வாழ்க்கை

ஒரு நாடக மேடை மனிதர்கள் அதில் நடிகர்கள் என்று பல கல்விமான்கள் கூறியிருக்கிறார்கள். மனித வாழ்வில் நாடகம் என்பது பின்னிப் பிணைந்து இறுகப் பற்றிக்கொண்ட கொடி போன்றது. தொலையாத சீட்டாட்டம், வம்பளப்பு என்பன சிலர் பொழுது போக்காக நடித்துவரும்நாடகம். இதனால் துக்கமான செய்திகளும். வயிறுவெடிக்கச் சிரிக்கும் செயற்பாடுகளும் இடம்பெறும். சிலவேளைகளில் உருக்கமான கதைகளையும் ரசமான சம்பவங்களையும் எடுத்துச்சொல்லி மக்களை வெவ்வேறு உலகங்களில் சஞ்சரிக்கச்செய்யும் நாடகங்களும் உள்ளன.

தமிழர் பிரதேசமான தமிழீழத்திலும் நாடகம் பெரும் சாதனைகள் படைத்துள்ளமையை எவரும் மறுப்பதற்கில்லை. எமது சமுதாயத்தில் ஒவ்வொருவரும் பலருடன் தொடர்பு கொள்வதற்கு நாடகம் வழிவகுத்திருந்தது. 3ம் கட்ட ஈழப்போரின் போது மக்களுக்குச் செய்திகளை வழங்கிய பெருமை நாடகத்திற்கே சேரும். இந்நாடகங்கள் தெருவழி அரங்காகவும், பெருஅரங்காகவும் பலவடிவம் கொண்டுசெயற்பட்டன.

போராட்டக் காலத்தில் நாடகத்தினூடாக பலசெய்திகள் எமது மக்களுக்குச் சொல்லப்பட்டன. பொன்.கணேசமூர்த்தி அவர்கள் "கண்களைப்பிடுங்கி அவன் பந்தடித்து விளையாடினான். குடல்களைக் கிழித்து அவன் மாலையாகப் போட்டான்" என்ற உண்மையை நாடகத்தினூடாக மக்களுக்குச்சொல்லி சிங்கள இனவாதிகளின் கொடூரங்களையும், அட்டூழியங்களையும் வெளிக்காட்டியபோது மக்கள் விழிப்படைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அதன் பின் வந்த காலப் பகுதிகளில் தமிழன்பனின் தெருவழி நாடகத்தினூடாக குட்டிக் கண்ணன் ரோட்டில வந்து நின்ற பாட்டில் நாட்டுக்காகச் செய்தி ஒன்று சொல்லி மக்களை தட்டியெழுப்பி போராட்ட வியூகங்களுடன் இணைந்த பெருமையும் நாடகத்தையே சாரும். அது மட்டுமல்லாமல் கல்லறையின் தொட்டினிலே கண்துயிலும் கண்மணிகளின் அபிலாசைகளையும் உணர்வுகளையும் கூட நாடகத்தின் வாயிலாக சொல்லிவந்தனர்.






மக்கள் ஒன்றுபட்டு ஒரே செய்தியை ஏக காலத்தில் உலகிற்குச் சொன்ன விதமும் நாமறிவோம். கால ஓட்டத்தில் உறைந்துபோயிருந்த தமிழ் மக்களின் இனமான உணர்வைத் தட்டியெழுப்ப பல்கலைக் கழக மாணவர்களின் ஏற்பாட்டில் மாபெரும் பொங்குதமிழ் நிகழ்வு நிகழ்த்தப்பட்டது.ஊரூராய் பொங்கு தமிழ் வண்டிவந்து விடுதலை உணர்வுதனை வெளிப்படுத்திச் சென்றபோது தமிழர்களின் விடுதலை உணர்வுக் கோசங்கள் வான வெளியில் பரந்து உலக நாடுகளுக்கும் எட்டியது. உலக நாடுகளின் கவனத்தை தமிழர் பக்கம் திசை திருப்பியது.

இப்பொங்கு தமிழ் நிகழ்வினூடாக தமிழ் மக்கள் இன்னுமொருசெய்திகளைச் சொல்லியிருந்தார்கள். பொங்குதமிழ் மேடையில் சிவரதி அவர்களின் குரலில் பாடிய பாடல் ஒன்று "தம்பி ராசா ராணுவ வீரா சிங்கள சோதரி பெற்ற புதல்வா" என்ற பாடலினூடாக இனவாத எதிரியான சிங்களவர்களைக்கூட நண்பனாக, சகோதரனாக எண்ணி அவனிடம் எம் உணர்வுகளை எடுத்துக் கூறி நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்லவேண்டுமானால் நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள் என்று மிகவும் லாவகமாகச் சொல்லி தமிழர்களின் வாழ்க்கைப் பணியைச் சித்தரித்த விதமும் நாடகத்தையே சாரும்.

சில வேளைகளில் தமிழர்களின் வாழ்க்கையே நாடகத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. என்ற உணர்வு மக்கள் மனங்களில் வேரூன்றி காணப்படுகிறது.இன்றும் கூடஎம் மக்கள் தேர்தல் என்னும் நாடக மேடையில் நடிக்கத் தயாராக இருக்கின்றார்கள். ஆனாலும் போரினால் பிழைப்பு நடாத்தி வந்தவர்கள் நிறம் மாறிக்கூடிக்குழைக்கும் தருணம் இது.நிறம் மாறும் மனிதர்களின் நிலையில்லாப் பேச்சுக்களை மேடையில் ஏறிநின்று வீசுவார்கள். அப் பேச்சுவலைக்குள் அகப்படாமல் நம்மை நாமே பாதுகாக்க விழிப்பாக இருப்பதோடு கூட்டாகச் சேர்ந்து ஒரு வீடுதனை அமைப்பதற்கு அனைவருமே திறமையான நடிகராக மாறிவிடுவோம்.

பா. றுஜினா




தவறுபோல் தோன்றுவதைத் துச்சமாகக் கருதாதே-அதற்கு அடியில் தோண்டி,உண்மையைத் தேடிப்பிடி. - மார்ட்டின் டப்பர்

# ஒரு தாயகத்தின் வரவு



அம்மா நலமா?
உந்தன் வரவினால்
உள்ளம் மகிழப் பெற்று
நானும் இங்கு நலமே!
தலைதூக்கி நீ நடந்து
தடம் பதித்த
தெருக்களெல்லாம்
உந்தன் மகனென்று
உரக்கச் சொல்கிறேன்
வெளியூரிலிருந்து
வருபவர்கள் தான்
விசேடம் என்றிருந்த
வேசம் போய்
உள்ளூர் நீயும்
உலகளவில் பேசப்படுவாய்!
புதிதாய் உன்னுள்ளே
பூத்திருந்த சிறப்பெல்லாம்
எளிதாய் நீ எடுத்து வந்து
எங்களுக்கு அளித்த விதம்
ஒளிவாங்கிக்கோணமும் -
அதை நீ
உள்வாங்கிய நேர்த்தியும்
செறிவான ஆனால்
சிக்கனமான
சொல்லாடலும்
உந்தன் வரவினால்
உள்ளம் மகிழப் பெற்று
நானும் இங்கு நலமே?

எங்கு தொடங்கி
எங்கு முடிக்கவென்று
ஒன்றும் முடியாத
ஏதோ உவகையம்மா -
இருந்தும்
இந்தியப்பீடைகளுக்கெதிராய்
முந்தியே நீ வர
முடியாது போனதேனம்மா?
உத்தமர்களும்
அயோக்கியர்களும்
உலகிலே
இல்லாதவர்களுமென
வந்துபோகும் சினிமா
வழக்கினுள் வாழ்ந்தவர்
நாம்...
என்னைப்போல்
உன்னைப்போல்
எங்களுக்கு அறிந்தவர்
போல்
எம்மிடை வாழ்பவர்களே
இங்கு வந்து போனார்கள்!
தொடக்கி வைத்த தந்தை
துயரோடு கதையை
நகர்த்திச் செல்லும் தாய்
வேர்களிடம் முடியாமலேயே
விடைபெறும் மகள்:
புலம்பெயர் உறவுகளின்
பெயர் சொல்லாப்
பிரதிநிதியாய்!
ஏழ்மையிலும் இதயத்தால்
உயர்ந்து நிற்கும் - பக்கத்து
வீட்டு
அண்ணனும் மனைவியும்
அவர்தம் சின்னமகளும்!
உதவி செய்ய முன்னிற்பதும்
உள்ளத்து வேதனைகளின்
வாத வெளிப்பாடுகளும்
வெவ்வேறு
சமூகப்பார்வைகளை
வெளிக்காட்டும் முகமாய்!

கிணற்றடியில் நீரிறைக்கும்
சத்தம்...
எதிர்பார்ப்பு ஏதுமின்றியே
தானறிந்த பாட்டிற்காய்
தாங்கும் அந்தக் கைகள!
வசதி படைத்தவர்களுக்கு
இல்லாமல் போனாலும்
இதயம் படைத்த அவளுக்கு
இயலும்!
வயது மீறிய வக்கிரங்களை
மழலைப்பாங்கென
சித்தரிக்கும்
இந்தியச்சீர்கேடுகளுக்கு
முன்னால்
இதயம் நிறைந்து நிற்கும்
அவள்
அவளாகவே இருக்கின்றாள்
அதனாலே நடிக்காமலேயே
நம் நெஞ்சிடை இடம் பிடித்து
விடும்
தரமான பங்களிப்பு!
கணத்துக்குக் கணம் ஆடை
மாற்றி
கண் மூடித்திறப்பதிற்குள்
நாடுகள் மாறி
அரைகுறையாய் ஆடிப்பாடி
காதல் செய்வதாய்கூறி
காசு பண்ணும்
இந்தியத்து இழிவுகளுக்கு
முன்
காதல் உண்மையிலேயே
இங்கு
காதலிக்கத் தக்கதாய்
கனமாயுள்ளது!

ராகுலனின் அம்மா...
ஒப்பனையின்றி நீங்கள்
ஒப்பித்தது
விக்கி விக்கி நீங்கள்
வேதனையை விழுங்கி
வேர்களைத்
தாங்கிச்சென்றது
காட்சி குறைவெனினும் -
அதன்
நீட்சி எம்முள் நீண்டு நீண்டு!
தாயின் மடியினைத்
தரம்பிரித்து
உனக்கொன்று
எனக்கொன்றென
உலகிற்குச் சொல்பவர்
உள்ளம் கைகூடாதம்மா!
உன்னைக் கூறாக்கி
எம்மை வேறாக்கி...
எப்படியம்மா
முலையறுத்து பால் கொள்ள
முடியும்...!
சைக்கிள்
கடைக்காட்சிகள்...
வயது, பால் வேறுபாடின்றி
வயிறு குலுங்கச் சிரித்தனர்
வந்திருந்தவர் அனைவரும்!
பாக்கு வெத்திலை சப்பிய
பழைய வாயிலிருந்து
பால் மணம் மாறாத
சின்ன இதழ்வரை
சிரித்துச் சிரித்து களைத்துப்
போனது...
ஒருவன் மட்டுமங்கே
ஓரக்கண்கள் வடிந்தபடி!
எத்தனை சோகங்கள்
எத்தனை அவலங்கள் -
கண்டவர்
எம் மக்கள்!
அவர் ஒன்றாக சிரிக்குமந்த
விடிந்த நாளின் பொழுதை
ருசி பார்த்த ஆனந்தப்
பரவசம்!!
இன்னும் கொஞ்சம்
நீண்டிருக்கக் கூடாதா
அவை
நெஞ்சு அவாவியது!
காதில் நிறைந்து கொண்டன
கலகலத்த
புன்னகைப்பாரங்கள்

மொத்தத்தில்
ஒளிவாங்கியின் முன்னும்
பின்னும்
முளை விட்டிருக்கும் இப்
போராட்டம்
களை கட்டி வானமெட்டி
விருட்சிக்க வேண்டும்
இரு கருவி தாங்கி
எழுந்திட்டவரே!
சளையாது இன்னும்
சாதிப்பீர்!
சூரியப்புதல்வனின்
சுட்டுவிரல் ஒளிக்குள்
எங்களினத்தின் இருப்புக்கள்
தேடல்கள்
எல்லாம்
கலைக்கான
கருக்களாகட்டும்!
நிதர்சனம் எங்கும்
தரிசனமாகட்டும்!
பிஞ்சு மனத்தில் தொடங்கி
எங்கள் மனதைத்
தொட்டுச்செல்லும்
கேசவராஜனோடு
நிதர்சனப்போராளிகளே
நீளட்டும் உங்கள் பயணம்!

அம்மா நலமா! நலமே,
நாடலும் அதுவே!
உந்தன் நலம் கண்டு
உள்ளப்பூரிப்புடன்
மீண்டும் காணும் ஆவலுடன்
இங்கு நாமும் நலமே!!

பிற்குறிப்பு-
பின்னணி இசை கொஞ்சம்
மேவி
பேசுபவர் மொழி இடையிடை
கேட்காமல்
போனதும்,
தமையனின்
கோபத்தீயிலிருந்து
தப்பித்துக்கொள்பவர்
தஞ்சம் புகுந்த காட்டிடை அது
என்ன தீ?
காரணம் இல்லாமல்!
அப்பட்டமான யதார்த்தப்
போக்கிடை
இப்படியான
துரியீட்டுப்படிமங்களைத்
தவிர்த்திருக்கலாம்!

சு.ஞாலவன்




அறியாமை, உள்ளத்தின் இரவு. சந்திரனோ, விண்மீனோ இல்லாத இரவு. - கன்ஃபூசியஸ்

# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிருச்செந்திநாதன்

எமது பிரதேசங்களில் கணிசமான பகுதி மணல்பிரதேசங்களாக உள்ளன. இவை பயிர்ச்செய்கைக்கு உதவாத பகுதிகளாகவே கருதப்பட்டன.

எனினும் இப்பிரதேசங்களில் பொருத்தமான நடவடிக்கைகள் மூலம் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தலாம். அவ்வாறு உட்படுத்தப்பட்டும் வருகின்றன.

எமது மணல் பிரதேசங்களில் கணிசமான பகுதிகள் சிறந்த தென்னை வளரும் பூமியாகவும் உள்ளது இதனாலேதான். ஆனால், தனியே தென்னை மாத்திரம்தான் மணல்பகுதிக்குப் பொருத்தமானதா? என்பது பயன் உள்ள ஒரு கேள்வியே.

சில வருடங்களுக்கு முன்னர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்பு நிறுவனம் பரீட்சார்த்தமாக மணல் காட்டில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச் செய்கை வெற்றி அளித்திருந்தது.

அப்பகுதியில் பயிரிடப்பட்ட மரக்கறிப் பயிர்களான வெண்டி, கத்தரி, கீரை, பாகல், டுபாய் [illegible], புசிற்ருலோ ஆகிய பயிர்கள் பயிர் செய்யப்பட்டன.

அதற்கு முன்னர் எவ்வித பயிர்களும் உண்டு பண்ணப்படாத நிலத்தில் இப் பயிர்ச்செய்கை அப்போது வெற்றியளித்தது.

அத்துடன் நிரந்தரப் பயிர்களான எலுமிச்சை, லாவுலு, கொடித்தோடை போன்றவையும் பரீட்சார்த்தமாக வெற்றியைத் தந்தன.

இதுபோன்ற தொடர்முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமானதாகும். எங்கள் பிரதேசங்கள் பயன்தரும் பிரதேசங்களாக மாறவேண்டும்.

## தொழு உரம்

தொழு உரத்தில் சாணம், சிறுநீர், சேதனக் கழிவுகளும் உள்ளன. இதில் பயிர்களுக்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் அடங்கியுள்ளது. சிறுநீரில் சிறுநீர்ச்சத்துப் பொருட்கள் கலந்த நிலையில் எளிதில் பயிர்களுக்குக் கிடைக்கும் வகையில், உள்ளன.

தொழு உரத்தைச் சேர்க்கும் போது நிழலாலும், மழையாலும் ஊட்டச்சத்துக்கள் ஆவியாகியும் மழைநீரில் கலந்து மேல் நோக்கி விடும். ஆகவே தொழு உரத்தை நல்ல முறையில் சேமிக்க வேண்டும். நல்ல முறையில் சேமிக்கப்பட்ட தொழு உரத்தை வயலில் சீராக விதைத்து உடனே உழுது மண்ணோடு கலக்கிவிட வேண்டும். வயலில் கலந்து சில நாட்கள் விட்டால் தழைச்சத்து ஆவியாகி வீணாகிவிடும். தொழு உரம் குறைந்த அளவு கிடைப்பதனால் அதனை அதிகளவு பலன் தரும் பயிர்களுக்கும் மரங்களுக்கும் இடவேண்டும். கரும்பு, வாழை, காய்கறிகள், தோடை, திராட்சை, கொய்யா போன்றவை அதிக பயன் தரும்.

முக்கிய உரம் ஆட்டெரு, ஆட்டின் கழிவுகளில் தண்ணீர்ப்புழுக்கள் இருப்பதால் எளிதில் மக்கக் கூடியவை. ஆட்டின் சிறுநீரில், ஆட்டின் சாணத்தைவிடத் தழைச்சத்து ஒருமடங்கு, மணிச்சத்து பத்து மடங்கு, சாம்பல் சத்து நான்கு மடங்கு அதிகம்.

ஆகவே தான் வெள்ளாடுகளைத் தொட்டில் முறையில் வளர்த்தும் செம்மறி ஆடுகளை நேரடியாகத் தடை போட்டு ஆட்டுச் சிறுநீரை உரமாக்குகின்றோம். ஊட்டச் சத்துக்களை வீணாக்குவதைத் தடுக்க தடை போட்ட நிலங்களை உடனடியாக உழுது உரங்களை மண்ணுடன் கலந்துவிட வேண்டும்.

---

## விவசாயிகளுக்கு மானியம் வழங்கல்

மாங்குளப் பிரதேசத்தில் உலக விவசாய ஸ்தாபனத்தின் நிதி உதவியுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து 114 பயனாளிகளுக்கு நெல்லும், 125 பயனாளிகளுக்கு உழுந்தும், 45 பயனாளிகளுக்குச் சோழமும் அத்தோடு கத்தி, மண்வெட்டி என்பனவும் மானியமாக வழங்கப்பட்டன.

இதேபோல் ஒட்டுசுட்டான் பிரதேசத்திலும் முன்கூட்டியே விவசாய உள்ளீடுகள் வழங்கிய பயனாளிகளுக்கு கழுத்து மண்வெட்டியும், கத்தியும் வழங்கியதோடு, மரக்கறி விதை வழங்கிய பயனாளிகளுக்கு பூவாளி, கத்தி என்பனவும் நெல் வழங்கிய பயனாளிகளுக்கு மண்வெட்டியும், வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நெல் விதைத்த பயனாளிகள் 100 பேருக்கு விவசாய உள்ளீடுகளும் உழவுக்குரிய பணம் என்பனவும் சேர்த்து மொத்தப் பெறுமதியாக 1 பயனாளி வீதம் 9000 ரூபா வழங்கப்பட்டதுடன், சிறு தானியச் செய்கையில் ஈடுபட்ட பயனாளிகளுக்கு 4500 ரூபா பெறுமதியான உள்ளீடுக்ளும் உழவுக்கான பணமும் வழங்கப்பட்டது.

முத்துஐயன்கட்டு குள கிராமசேவகர் பகுதியில் பொருண்மிய மதியுரையகத்தினால் 125 பயனாளிகளுக்கு 9000/= வீதம் நெற்செய்கைக்கு மானியம் வழங்கப்பட்டது.

சின்னச் சாளம்பன் கிராமத்தில் 20 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பயனாளி ஒருவருக்கு இரண்டு ஆடுகள் வீதம் வழங்கப்பட்டது.

இதேபோல் குமுழ முனைப் பிரதேசத்தில் சிறுதானியம் மரக்கறிச் செய்கையில் ஈடுபடுவோருக்கு மண்வெட்டி, பூவாளி என்பன வழங்கப்பட்டன. குமுழமுனைப் பிரதேசத்தில் 27 மண்வெட்டிகளும், 20 பூவாளிகளும், அளம்பிலில் 7 மண்வெட்டிகளும், உடுப்புக்குளத்திலுள்ள பயனாளிகளுக்கு 20 மண்வெட்டிகளும் 20 பூவாளிகளும், வழங்கப்பட்டன.

ஆறுமுகத்தான்குளம், தண்ணிமுறிப்புக்குளம் ஆகிய கிராமங்களுக்கு ரெக் நிறுவனத்தால் 65 பயனாளிகளுக்கு 9000 ரூபா வீதம் விவசாய உள்ளீடுகளும் பணமுமாக வழங்கப்பட்டது. அத்தோடு குமுழமுனையில் 20 பயனாளிகளுக்கு 15 கி.கிராம் வீதம் நிலக்கடலையும் வழங்கப்பட்டது.


## பணிகள் தொடர வேண்டுகின்றேன்



கிளிநொச்சி மாவட்டம் பு,நகரிப் பிரதேசத்தைச் சேர்ந்த பொன்னையா-தங்கராசா 27/02/2004 அன்று யாழ்.மாவட்ட நீதவான் திரு இ.த.விக்னராசா அவர்கள் முன்னிலையில் சமாதான நீதவானாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் பு,நகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் உபதலைவராகவும், பல பொது நிறுவனங்களில் கௌரவ பதவிகள் வகித்துச் சேவையாற்றியவரும், இந்நாள் பு,நகரிப் பிரதேச வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவராகவும், கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தலைவராகவும், சமய சமூகப் பணிகளிலும் தொண்டாற்றி வருகின்றார். இவர் இளைப்பாறிய உள்ளூராட்சி ஊழியர் ஆவார்.

இவரது பணிகள் பல ஆண்டு தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சிவஸ்ரீ கை.இராஜேஸ்வரக் குருக்கள்
[J.P] ஜே.பி
ப்ரதமகுருவழிப்பிள்ளையார் ஆலயம்,
ஜெயபுரம்.

(சி-9336)


## இலக்கியப் படைப்பாளிகளே...

உங்களிடமிருந்து வெள்ளிநாதம் எதிர்பார்ப்பது-

**தரமான**

சிறுகதை
கவிதை
உருவகம்

இன்னும், இன்னும் உங்கள் எண்ணங்களில் தோன்றும் வண்ணங்கள்... உங்கள் படைப்பாளிகளின் பரப்புகள் போராட்டம், சமூகம் என விரிந்த பார்வையாக இருக்கட்டும்.

படைப்புக்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி-

ஆசிரியர்
வெள்ளிநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## பொறுக்கி எடுத்த பூக்கள்

### காசி ஆனந்தனின் நறுக்குகள்

1 உன் கோவணம்
அவிழ்த்தப்பட்டதா?
அவன் கைகளை வெட்டு
கெஞ்சி வாங்கி கோவணம்
கட்டாதே.
அம்மணமாகவே போராடு...

* * *

2 செருப்பைப் பார்க்கையில்
நீங்கள்-
அணிந்திருக்கிறவனின்
காலைப் பார்க்கிறீர்கள்.
நான்-
அதைச் செய்தவனின் கையைப்
பார்க்கிறேன்.

### ஒருவாய் - இருகாதுகள்

நீ என்ன பேசுகிறாய் என்பதை விட
எதிரில் இருப்பவர்
பேசுவதை நீ எவ்வளவு கவனத்துடன்
கேட்கிறாய் என்பதுதான் முக்கியம்.
அடுத்தவர் பேசுவதைக் கேட்காமல்
நாம் மட்டும்
பேச வேண்டுமென்றால் சுவர் முன்
நின்றுகூடப் பேசலாமே!
அடுத்தவருடைய பேச்சைக் கேட்க
நமக்கு இரண்டு காதுகளும்-
நம்முடைய கருத்தைக் கூற நமக்கு
ஒரு வாயும் இருப்பதை
நினைவில்கொள்...! -பிளேட்டோ.

### -அடடே.. அப்படியா?-

மெலிந்த எலி கொழுத்த எலியிடம்
கேட்டது. என்ன உண்கிறாய் உடம்பு
இப்படி உப்பிக் கிடக்கிறதே!
'வேளாவேளைக்கு உயர்தர உத்தரவாத
முத்திரை பதித்த எலிப்பாசாணத்தை'
என்றது
பெருமையோடு கொழுத்த எலி.

### ஓஹோ... அப்படியா?

ஆலயத்துப் பிள்ளையாரைப் பார்த்து
அரச மரத்தடிப் பிள்ளையார் சலிப்புடன்
கூறினார்-
"நீ... பரவாயில்லை அதிஷ்டக்காரன்
மனிதர்கள் பக்தர்களாக, உன்னைக்
கண்டு வணங்க வருகிறார்கள்...
நானோ அவர்களை வெறும்
மனிதர்களாகப்
பார்த்துக்கொண்டிருக்கிறேன்..."

### மகுடியார் கதைகள்


ஒருவர் மகுடியாரிடம் சொன்னார்
"நான் அகிம்சையை நேசிப்பவன்"
'நான் நம்பமாட்டேன்' என்றார் மகுடியார்.
'ஏன்' என்று கேட்டார் அவர்
"உங்கள் பெயரில் ஆயுதத்தை
வைத்துக்கொண்டு அகிம்சைவாதி
என்றால் யார் நம்புவார்?"
-என்றார் மகுடியார்
அந்த நபர் ஓஹோவெனச் சிரித்தார்.
-அவரின் பெயர் வேலாயுதம்.

* * *

ஒரு சோம்பேறி நண்பர் மகுடியாரிடம்
கேட்டார்
"உங்களுடைய பொழுதுபோக்கு என்ன?"
"வாசிப்பது..." என்றார் மகுடியார்
"என்னுடைய பொழுது போக்கு என்ன
தெரியுமா" என்றார் சோம்பேறி நண்பன்..
"ஓ..தெரியுமே... சுவாசிப்பது தானே"-
என்றார் மகுடியார்.
சோம்பேறி நண்பரின் முகத்தில்
ஈயாடவில்லை.

பொறுக்கி

தீராப் பிரச்சினைகளுக்குத் தெளிவற்ற விடைகள் தருவது, தத்துவ மெய்யியல். - ஹென்றி ப்ரூக் ஆடம்ஸ்



# தமிழின் மகிமை

தமிழின் முற்கால எழுத்து வடிவங்கள் பற்றியும் தொன்மை பற்றியும் கட்டுரை எழுதிய ம.க.அ. அந்தனிசில் அவர்களின் கட்டுரைகள் சில தொகுப்புக்கள் மூலம், எமது தாய்மொழியின் பழமை பற்றியும் அவற்றின் வலிமை , தமிழர்களாகிய நாம் தெரிந்திருத்தல் அவசியமாதலால் அனைவரும் அறிந்து கொள்வோம். ஆதியில் சைகையால் கருத்து பரிமாறி வந்த மனிதன் பின்னர் ஒலிக் குறிகளை எழுப்பி பேச்சு மொழியை தோற்றுவித்த வெகு நீண்ட காலத்தின் பின்னர் பேச்சு இலக்கியங்கள் வழங்கத் தலைப்பட்டன. அதன் பின்னர் எழுத்து வடிவம் தோற்றம் பெற்ற பின் இலக்கியங்கள் எழுத்தில் பொறிக்கப்பட்டன. கால வளர்ச்சியில் சிறந்த இலக்கியங்கள் தோன்றலாயின. உலகில் பழமை மொழிகளான கிரேக்கம், இலத்தீன், சீனம், போன்று தமிழும் பழமையான மொழியென மொழியியல் அறிஞர்கள் கூறுவர். சீன மொழிக்கு 4000 ஆண்டுகளுக்கு மேலான வரலாறு உண்டு. ஆனால் அதனை விட கூடுதல் வரலாறு உடையதாக தமிழ் மொழி விளங்குவதை நாம்அறிய முடியும்.

சீனமொழிக்குள் சுமார் 300 தமிழ் சொற்களும் ஆயிரத்துக்கு மேலான தமிழ்ச் சிதைவுச் சொற்களும் இருப்பதாக அறியப்படுகிறது. ரெவ, கால்டுவெல், டாக்டர் பரே போன்றோர் வட மொழிக்குள் பல நூற்றுக்கணக்கான தமிழ்ச் சொற்கள் இருப்பதாக கூறியிருக்கின்றனர். இவற்றின் மூலம் தமிழ்மொழி மிகப் பழமையான மொழிஎன்பது ஆதாரமாக உள்ளது.

வட மொழிக்கு நீண்ட காலம் எழுத்து வடிவம் இருக்கவில்லை. அம்மொழிக்கு பெயர் இல்லாததாலேயே 'வடமொழி' என அழைக்கப்பட்டது பின் அது சமஸ்கிருதம் எனப்பட்டது. முன்னர் வட மொழிக்கு இலக்கணம்,நூல்கள் இருந்திருப்பினும் பாணினி வட மொழிக்கு இலக்கணம் எழுதிய பின்னரே அது நன்றாக செயற்பட்டது எனப் பொதுப் பெயரைக் கொண்டது. சமஸ்கிருதம் என்றால் நன்றாகச் செய்யப்பட்டது. உண்மை அப்படியிருக்க பாசை என்று தமிழ் மொழி மானிட மொழி என்றும் வட மொழியில் தமிழ் மொழி பல சொற்களைக் கடன்பட்டதாகவும் ஆரியர் கதைவிட்டனர். வடமொழியினர் வரிவடிவெழுத்தை தமிழ் மொழியினரிடம் இருந்து கற்றுக்கொண்டனர்.

என்று ஆங்கிலேய அறிஞரான டைஸ் டேவிட் (RHYS DAVID) கூறியிருப்பது எந்த அறிஞராலும் மறுக்கமுடியாத ஆதாரமாகும்.

தமிழின் வரி வடிவெழுத்து அமைப்பை தமது மொழிக்கும் கையாண்டு பின்னர் வட மொழியில் இருந்தே பலவற்றை தமிழ் மொழி கடன் வாங்கியதாக ஆரியர் கூறினர். மிக பழங்கால எழுத்து வடிவமான தமிழ் பிராமி எழுத்துக்களின் சாயல் ஐரோப்பிய எழுத்துக்களில் பல வகைகளில் படிந்திருப்பது கவனிக்கத்தக்கது.

நிச்சயமாக தமிழ் பிராமி எழுத்து வடிவம் ஐரோப்பிய எழுத்து வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படவில்லை யாகையால் இவ் எழுத்துக்கள் எவ்வளவு பழமை மிக்கவை என்பது புலனாகும்.

பழைய தமிழ் பிராமி எழுத்து வடிவங்களை அசோகன் உட்பட பிற மொழியினரும் கையாண்டனர். மகத நாட்டுச் சக்கரவர்த்தியான அசோகனின் (கி.மு 273-232) மகத மொழிக்கு எழுத்து வடிவம்


**ந.கங்கா**

இருந்ததில்லை. இதன் காரணமாக அசோகன் பௌத்த சமயம்தழுவிய பின் தன் அறக் கட்டளைகளை கற்றூண்களில் பொறிப்பதற்கு தமிழ் பிராமி எழுத்துக்களையும் பயன்படுத்திக்கொண்டனர். 'ஷ்','ஸ்','ஹ' போன்ற வட ஒலிக் குறிகளுக்கு மட்டும் அவன் சில புதிய எழுத்து வடிவங்களை உருவாக்கியிருந்தான். இவ்வாறு பிற மொழியினர் பழைய தமிழ் பிராமிய எழுத்துக்களை கையாண்டதால் போலும் தமிழர் தமிழ்மொழிக்கு வட்டெழுத்து எனும் புதிய எழுத்து வடிவத்தை தோற்றுவித்துக் கொண்டனர்." வட்டெழுத்து" என்பது வட்டவடிவமான அமைப்பினை கொண்டதால் உருவான பெயராகும். பழைய தமிழ் பிராமி எழுத்துக்களில் பாவனையை அடுத்து கி.பி.9ம் நூற்றாண்டில். தமிழகம் முழுமையும் இவ் வட்டெழுத்து வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கையிலும் புத்தளம் தோணிக்கல் பகுதியில் கி.மு. வலகம்பாகு எனும் அரசனின் காலத்தில் (கி.மு.88-76) பொறிக்கப்பட்டிருக்கும் இரண்டு கல் வெட்டுக்களில் பெருவாரியான தமிழ் பிராமி எழுத்துக்கள் காணமுடிகிறது. இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் இவ்விரு கல் வெட்டுமே மிகப் பழமையானது. என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழர் வட்டெழுத்தை தோற்றுவிக்கும் முன்னர். உலகின் எந்த மொழிகளுக்கும் வட்ட வடிவமான அமைப்பில் எவ்வித எழுத்து வடிவமும் இருந்திருக்கவில்லை. ஆதலின் உலகில் முதல் முதல் வட்ட வடிவமான அமைப்பில் உருவாக்கப்பட்ட எழுத்து வடிவம் "தமிழ் வட்டெழுத்துத்தான். காலப் போக்கில் திராவிட மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆதியில் மொழிகளில் எழுத்து வடிவங்களும் தமிழ் வட்டெழுத்து சாயலிலேயே அமைந்துகொண் டன. தமிழகத்தில் தமிழ்வட்டெழுத்து வழங்கி வந்த காலத்திலேயே இலங்கையின் வட்டச்சாயலை உடைய சிங்கள எழுத்துவடிவம் தோன்றியது என்பதற்கு ஆங்கிலேயரான இலங்கையின் முன்னாள் தொல்லியல் ஆணையாளர் கலாநிதி எட்வேட் முல்லரின் கூற்று ஆதாரமாகவுள்ளது. இவர் எழுதிய "இலங்கையின் சாசனங்கள்" என்ற நூலின் முன்னுரையில் கி.பி 8ஆம் அல்லது 9ம் நூற்றாண்டுவரை ஒரு தனித்துவமான சிங்கள எழுத்து வடிவம் தோன்றியிருக்கவில்லை என்று கூறுகிறார்.

...And that A pecliar sinhalese character did not originate until the 8th OR 9th century...

(DR. Edward muller, Ancient inscriptions in ceylon (Text) 1883, London)



எனவே தமிழ்ப் பிராமி எழுத்து, தமிழ் வட்டெழுத்துக்கள் போன்றவையே பிறமொழியெழுத்து வடிவத்திற்கும் சிங்கள எழுத்து வடிவத்திற்கும் தோற்றத்திற்கும் ஆதாரமாக விழங்கியது. இன்றைய தமிழ் எழுத்து வடிவம் சுமார் கி.பி. 10ம் நூற்றாண்டிலேயே முழுமையான புழக்கத்திற்கு வந்தது.



# திருக்குறள்

தமிழ் இலக்கிய வரலாற்றின் சங்கமருவிய காலத்தில் எழுந்த இலக்கியமே திருக்குறளாகும். ஆனால் திருக்குறள் பற்றிய காலம் இலக்கிய ஆய்வாளர்களிடையே வாதப்பிரதி வாதங்களை உண்டு பண்ணியிருக்கிறது. சங்ககாலத்தைத் தொடர்ந்து தோன்றிய சங்கமருவிய காலத்தில் பல அறநூல்கள் தோன்றியிருப்பினும் இத்திருக்குறளானது மக்கள் வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டிய மக்களின் வாழ்வுக்கு இன்றியமையாத ஒவ்வொரு மனிதனும் எளிதில் அறிந்து கொள்ளக்கூடியதான கருத்துக்களை கூறியிருப்பதனால் எல்லா மக்களுமே இத்திருக்குறளை விரும்பிப் படிக்கின்றார்கள். அதிசயம் ஆனால் உண்மையான செய்தி என்னவெனில் 05 வயது நிரம்பிய அட்சயா என்னும் சிறுமி திருக்குறள் அனைத்தையுமே மனனம் செய்துள்ளாள். உலகமே வியக்கும் அளவிற்கு சிறுமியின் கெட்டித்தனம் எனில் எங்களால் ஏன் இத்திருக்குறளை மனனம் செய்ய முடியாது? அதிசயமா? அட்சயாவா? என்னும் அளவில் உலகம் அச்சிறுமியை கவனிக்கும் போது எங்களால் இத் திருக்குறளை மனனம் செய்து அதில் கூறியுள்ள கருத்துக்களின் படி ஒழுகமுடியாதுவிடின் நாம் உயர்தர வகுப்பில் கற்பதன் பயன் என்ன? இவ்வா றெல்லாம் நல்ல கருத்துக்களை கூறி மக்களை விழிப்படையச் செய்யும் இத்திருக்குறளானது திருவள்ளுவரால் இயற்றப் பெற்றதாகும். இத் திருக்குறள்

"அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்கே உலகு"

எனத்தொடங்கி "ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம் கூடி முயங்கப் பெறின்"

என முடிவடைவதனைக் காணலாம். இது

அறத்துப்பால்-38அதிகாரம்

பொருட்பால்-70அதிகாரம்

காமத்துப்பால்-25அதிகாரம்

எனும் 03 பெரும் பிரிவுகளை உடையது. அறத்துப்பாலானது பாயிரம்(4) இல்லறவியல்(20) துறவறவியல்(13) ஊழியழ்(01) எனும் பகுதிகளை உடையதாகும். பொருட்பாலானது அரசியல் (25 அங்கவியல் 32) ஒழிபியல் 13 எனும் பகுதிகளையுடையதாகும். காமத்துப்பாலானது களவியல்(07 )கற்பியல் (18) எனும் பகுதிகளையுடையதாகும்.

ஒழிபியலானது அரசியல், அங்கவியலில் கூறாத செய்திகளை, கூறுவதால் அப் பெயர் பெற்றது. ஆனால் இதனைக் குடியியல் என்று கூறுவதே பொருத்தமானது என மணற்குடவர் கூறுகின்றார். இத்திருக்குறளினை பலரும் புகழ்ந்து பேசியிருப்பதினைக் காணலாம்.

"சிலப்பதிகாரத்திற்கு முந்திய காலம் பற்றி எந்தவொரு சமூகவியல் ஆய்வும் திருக்குறளை ஆராயாது விடின் நிறைவு பெறாது" "எனப் பேராசிரியர் சிவத்தம்பியும்" "திருக்குறள் வாழ்விற்குரிய அன்பு நெறியைக்கூறும் உயர்ந்த நூல், உயர்ந்த ஞானத்தைப்புகட்டும் செம்மொழிகளில் தொகுப்பு, இதுபோல் உலக இலக்கியத்தில் வேறெங்கும் இல்லை" எனப் பிரஞ்சு நாட்டைச் சேர்ந்த "அல்பேட் ஸ்வைட்சர்" கூறியிருப்பதனையும் காணலாம்.

மேலும் பாரதி கூட வள்ளுவரைப்பற்றி புகழ்ந்திருப்பதனைக்காணலாம். யாமறிந்த புலவர்களுள் கம்பனைப் போல் வள்ளுவனைப் போல், இளங் கோவைப்போல், பூமிதனில் யாங்கெனும் பிறந்ததில்லை" எனவும் "வள்ளுவன் தன்னை உலகிற்கு தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு. எனவும் புகழ்ந்திருப்பதனைக் காணலாம். இவை மட்டுமல்லாது அணு வைத்துளைத்து ஏழ் கடலைப் புகட்டி குறுகத்தறித்த குறள்" என ஔவையாரும் "கடுகைத் துளைத்து ஏழ்கடலைப்புகட்டி குறுகத்தறித்த குறள்" என இடைக்காடரும். "முப்பால் மொழிந்த முதற்பாவலர் ஒப்பார் எப்பாவலரிலும் இல்"

என நல்லந்துவானரும் கூறியிருப்பதனைக் காணலாம். பகவானுக்கும் ஆதிக்கும் மகனாகப் பிறந்த வள்ளுவர் உறையூரிலுள்ள வள்ளுவர் சேனையில் வாழ்ந்ததால் வள்ளுவர் எனப் பெயர் பெற்றார். இவர் அதியமான் கபிலர் முதலியோ ருக்குச் சகோதரராகப் பிறந்த தோடு பரந்த அறிவும் சிறந்த ஒழுக்கமும் உடையவராக இருந்தார். வள்ளுவரினதும் குறளினதும் சிறப்புக்கருதியே இவ்விரண்டிற்கும் அடையாகத் திரு என்பது சேர்க்கப்படுகின்றது. நாலும் இரண்டும் சொல் லுக்குறுதி எனப்புகழப்படுகின்ற திருக்குறள் பொய்யாமொழி முப்பாநூல் வாயுறை வாழ்த்து தெய்வநூல் தமிழ்மறை வள்ளுவம் திருவள்ளுவம் என மறுபெயர்கள் பெறுவதனையும் காணலாம். இவற்றோடு அறநூல் வாழ்க்கை நூல் உலகப்பொது மறைநூல் என திருக்குறளுக்குரிய பெயர்களில் சிலவாகும். இவ்வாறே வள்ளுவரும் தெய்வப்புலவர் பொய்யாமொழிப்புலவர் செந்நாப்போதர் முதற்பாவலர் பெருநாவலர் எனப் பல பெயர் கொண்டு விளங்குவதனைக் காணலாம்.

**கு.கார்த்திகா.**

குழந்தையின் எதிர்கால வாழ்வு, அன்னையின் ஆக்கம். - நெப்போலியன் போனப்பார்ட்

(07ஆம் பக்கத்தொடர்ச்சி...)

முழுப் பேரும் சிங்களப் பிரமுகர்கள்
அதிருப்தி உற்றனர் எம்மவர்
அறிவீராக!
நாற்பத்தி நான்காமாண்டு
சட்டசபையிலே ஜே.ஆர்
நாட்டுக்குச் சிங்களமே தேசியமொழி-
எனக்கொண்டு வந்த தீர்மானத்தால்
கோபமுற்றது தமிழர் தரப்பு
அறிவீராக!
சோல்பரி அரசியல் யாப்பு
சுதந்திரத்தில் வந்த போது
சொன்னார் டி.எஸ் உங்களைத்
துன்புறுத்தமாட்டோமென்று.
உரைத்தவாறு நடக்கவில்லை
உளம் குமுறினர் தமிழர் தரப்பு
உணர்வீராக!
அமைக்கப்பட்டது அமைச்சரவை
சுதந்திரத்துக்குப் பின்னே!
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
அதன் சார்பை நோக்கியபோது
அதிருப்தியுற்ற தரப்பினர்
அதனின்றும் வெளிவந்தனர்.
அவ்வேளையே தோற்றம்பெற்றது
தமிழரசுக்கட்சி அறிவீராக!

புலிகளுடன் மட்டுமே பேசுவதும்
அவர்கள் மட்டுமே தமிழரின்
பிரதிநிதிகள் என்பதும்
சனநாயக விரோதம் எனச்
சாற்றுகிறீர்
அரசியல் என்பது இரத்தம் சிந்தாத
யுத்தம்.
யுத்தம் என்பது இரத்தம் சிந்துகின்ற
அரசியல்
மாஓவின் மேற்கோளை
மனமறியப் படித்திருப்பீர்.
இரத்தம் சிந்தா யுத்தத்திலே
இறங்கினர் மிதவாதத் தமிழ்த்
தலைமை
ஆயுதம் கொண்டு அவர்கள்
அடக்கப்பட்டனர்
விளைவு?
தமைக்காக்க ஆயுதத்தை
தற்காப்புக்கு எடுத்தது அடுத்த
தலைமுறை.
ஒன்றினூடாகவே மற்றொன்று
தோற்றமானது-இது
தேவையின் பாற்பட்ட வரலாற்று
நிகழ்வு வலிந்தெடுத்த முயற்சி அல்ல.
இலட்சியத்திலே உறுதி-அதை
அடையும்
இலக்கினிலே தெளிவு
அர்ப்பணிப்பு சிந்தை ஆளுமைத்
திறமை
இவற்றினூடே தமிழர்களுடன்
இரண்டறக்கலந்தனர் இவர்கள் எனின்
ஏகப் பிரதிநிதிகள்
என்றுரைப்பதில் என்ன தவறு?
ஈரோசின் சுயேச்சைக் குழுவுக்கு
ஏற்பட்டதே வாக்குப்பலம் எதனால்?
தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு
தந்தனரே வாக்குப்பலம் எதனால்
மக்களின் அங்கீகாரம் இவை எனில்
மறுத்திடல் தகுமோ?
புலிகளைப் பொறுத்துத்தான்
சனநாயகம் உங்கள்
புத்திக்கு வந்ததோ?
இரண்டாயிரத்தொன்றிலே
ஆட்சிக்கு வந்த அரசு
இரண்டாண்டுடன் கலைக்கப்பட்டதே
எங்கே போனது சனநாயகம்?

தொண்ணூற்றொன்றில்
கிடைத்த வாக்குப்பலம்
இரண்டாயிரத்தொன்றில் குறைந்த
தினால்
ஆட்சியிலிருக்க எண்ணுதல் தவறன்று
இறங்கிச் சென்றனரா?
எங்கே போனது சன நாயகம்?
இரண்டாயிரத்தொன்று தேர்தலிலே
இரண்டரை லட்சம் வாக்காளர்
விடுதலைப்புலிகளின் பகுதிகளுக்குள்
வாழ்விடம் கொண்டிருந்ததினால்
புள்ளடி போடத் தடுக்கப்பட்டனரே
எங்கே போனது சனநாயகம்?
இப்பகுதிகளில் இருக்கின்ற
இடம்பெயர்ந்த குடிமக்கள்
இலங்கையரே என்றெண்ணி
அடையாள அட்டை இருந்தும்
வாக்குப் புள்ளடி
அடையாளம்இடத் தடுக்கப்படுகின்றாரே
எங்கே போனது சனநாயகம்?

தமிழரை அடக்கி ஆள
நாடாளுமன்றத்துக்குத்
தகுந்த பலம் கொடுத்தது
இந்தச் சனநாயகம்தான் என்பதை
என்றோ அறிந்தனர் தமிழர்!
அடக்குமுறை புரிகின்ற
இலங்கை அரசுகளும்
ஆதரவளிக்கின்ற அந்நியதேசங்கள்
ஆரவாரித்துச் சிலாகிப்பது
இந்த சனநாயகம் தான் என்பதை
என்றோ அறிந்தனர் தமிழர்!
பாலியல் துன்புறுத்தல்கள்
படுபாதகக் கொலை கொள்ளை
பாதாள உலகத்தாரின் பயங்கரங்கள்
அதிகரிப்பு என
அறிக்கை விடுகின்றனர் பொலிசார்.
ஆட்சிக்கு வந்த அரசுகளின்
சனநாயக லட்சணங்கள் இப்படி!
இந்தநிலையில்-
புலிகள் சனநாயக முறையில்
தெரியப்படாதவர்கள் என்று
புகழ்தல் எவ்வாறு பொருந்தும்?
சொல்வது உண்மையானால்
சுதந்திர முன்னணி
சொல்வதன் பின் புலிகளுடன்
பேசுவோம் நிபந்தனையுடன் எனப்
பேசுவதன் பொருள்தான் யாது?

அரசியல் தீர்வுக்கு மக்கள்
ஆணை பெறுதல் வேண்டும்
அன்னவர் முடிவுக்கே விடுதல்
வேண்டும்
உரைத்துள்ளீர் இவ்வாறு.
எழுவதிலே ஆட்சிக்கு வந்த
சிறிமாவோ
ஏழு வருடம் ஆட்சி செய்தார்.
மக்கள் ஆணை பயன்பட்டதா?
ஆனது எதுவுமில்லை.
ஆறில் ஐந்து பெரும் பலத்துடன்
ஆட்சியிலிருந்தார் ஜே.ஆர்
எழுபத்தேழில்.
பதினேழு வருட ஆட்சியிலே
பயனேதும் உள்ளதா சமாதானம்?
ஆனது எதுவுமில்லை.
சனாதிபதி சந்திரிகாவுக்கு
சமாதானத்துக்காகத்தானே
62.5 வீதவாக்குகள்
அறுதியாகக் கிடைத்ததென
ஆர்ப்பரித்தனரே தொண்ணூற்றி
நான்கில்
ஆனது எதுவுமில்லை.
இரண்டாயிரத்தொன்றில்
ஏறினால் அரசு கட்டில்
பேசுவேன் புலிகளுடன்
ஏற்படுத்துவேன் இடைக்கால சபை
என
மக்கள் ஆணை பெற்றார் ரணில்
ஆரம்பமே முடியவில்லை
ஆவதுதான் எதுவோ?
இனப்பிரச்சினை கூர்மை அடைந்த
இந்த வேளைகளில் பெற்ற
மக்கள் ஆணையின் மாண்பு
இவ்வாறிருக்கும் போது
ஆணைபெற வேண்டுமா?
ஐயோ பாவம்!
இவை எல்லாம் வெறும் புருடா என
என்றோ அறிந்தனர் தமிழர்.

போர்நிறுத்த உடன்படிக்கை
செயலிழந்துவிட்டது.
புலிகள் பேச்சை நிறுத்தியதால்
என்றுரைத்துள்ளீர்.
ஆறு சுற்றுப் பேச்சுக்களில்
அடைந்துவிட்ட இணக்கங்கள்
ஆக்கமுடன் நடைமுறைக்கு
ஆக்கப்படவில்லை என்பதனால்
இடை நிறுத்துகிறோம் பேச்சை என்று
இயம்பினர் புலிகள். இதிலென்ன
தவறு?
உடன்படிக்கை வலுவிழந்தது
உண்மையெனக் கொண்டால்
உறுதியாய் அது கடைப்பிடிக்கப்படும்
என உரைத்திருந்தார் சனாதிபதி ஏன்?

கண்காணிப்புக்குழுத் தலைவர்தான்
இது தொடர்பாய்
கருத்துரைக்கும் அதிகாரம் உள்ளார்
என்பது
உடன்படிக்கையில் ஓரம்சம்.
வலுவிழந்துவிட்டது உடன்படிக்கை
என்று
வரையறுத்து உரைக்கவில்லை
அன்னார்.
இன்னும் தான் அறிவீராக!
சீர்முறை அரசின்
செயல்முறை வரும்வரையில்
நோர்வேயும் தற்காலிகமாகவன்றோ
விலகியிருக்கிறது கவனிப்பீராக!

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு
சுயநிர்வாகம் தேவை என்கிறீர்.
இலங்கை மக்கள்-
அந்நியரின் ஆட்சி நிர்வாகத்தில்
அடைந்துவிட்ட மாற்றத்தை
விளங்கியே பார்ப்பீராயின்
விளம்பமாட்டீர் இவ்வாறு.
பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம்
இருபதாம் ஆண்டில் வந்த போது
கரையோரச் சிங்கள மக்கள்
கணிசமாய்ப் பெற்றனர் நன்மை.
கண்டிய சிங்கள மக்கள்
இருபத்தினான்கில் விழித்த போது
கொண்டுவா சமஷ்டி என்று
குமுறினர்! கோரிநின்றனர்.
நாற்பத்தொன்பதில்
நம்மவர் தலைமை நாடினர்
சமஷ்டியை!
பிராந்திய சபைக்கு உடன்பட்டு
மாவட்ட சபைக்கு மனம்பட்டு
மாகாண சபைத் தேர்வு செய்து
எப்போது-
தன்னாட்சி அதிகார
சபைக்கு ஒரு வரைபு
வரலாற்று முன்நகர்வை
எவ்வாறு பின் இழுக்கமுடியும்?
ஆறுகள் பின்னோக்கிப் பாய்வதில்லை
அறிவீராக!

அரசியல் தீர்வுக்கு முன்னர்
ஆகாது தன்னாட்சி அதிகாரசபை
நோகாது உரைக்கின்றீர்
நொந்த மக்களுக்கல்லவோ
நோவு தெரியும்.
மனத்தாலும் செயலாலும்
இணக்கமொன்று இருந்தாலன்றோ
வளத்தாலும் பணத்தாலும்
ஆட்சிதனைப் பகிர்தல் கூடும்.
இதற்காகக் கேட்பதன்றோ
தன்னாட்சி அதிகார சபை.
இதற்கே மறுப்பெனின்
எவ்வாறு தீர்வுவரும்?
அதிகாரப்பகிர்வுக்கு
வரைபொன்று வரைந்து
ஆட்சியிலிருந்தவர் கரங்களில்
அதுதனை அளித்தபின்
நான்காம் நாளிலே
அமைச்சரவையின் அதிகாரம்
குறைக்கப்பட்டது.
ஆகிய செயல்கள்தனை
ஆழமாகப் பார்க்கும் போது
பாரிய கடின பாதை
கடந்திட வேண்டுமெனக்
கருதுதல் தகும் அன்றோ.
உலகவங்கியின்
இலங்கைப் பிரதிநிதி
பீற்றர்ஹரல்ட்
பேசுகின்றார் இவ்வாறு;
வடக்குக் கிழக்கின் செயற்திறனை
வலிமைமிக்கதாய் ஆக்குவதெனின்
உயர்நிலைப் பங்கு புலிகள் வகிக்க
உருவாக்கவேண்டும்
இடைக்காலக்கட்டமைப்பு
(வீரகேசரி 13-07-2003)

களத்தைப் புரிந்தவர்
கருத்தைச் சொல்கின்றார்
இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை
வேண்டும்
என்பது இப்போது புரிகிறதா?

சோமவன்ச அவர்களே!
இலங்கைப் பிரச்சினை
இவ்வாறு சிக்கலடைய
சிங்களத் தலைமைகளின்
அகந்தை ஆணவம்
அதிகார மமதை காரணம்
அதனால்-
உகந்த தீர்வை எட்ட முடியவில்லை
உணர்வீராக!
பிரச்சினைகளின் காரணங்களுக்குத்
தீர்வு கண்டால் எதிர்மறைக்
காரியங்களுக்கு இடமில்லை
என்பதை
அறியுந் திறன் இருந்தும்
அண்டை அயல் தேசங்களின்
அனுபவங்களைப் பார்த்திருந்தும்
ஆணவ மனப்பாங்கு மாறவில்லை
அவர்களின் அகநிலை
அசைந்துகொடுக்கவில்லை
அதற்கு உரமூட்டவல்லவா
ஆர்ப்பரித்து வந்துள்ளீர்.
அதன் எதிர் விளைவை
அனுபவிப்பது நீங்கள் அல்லவா?
இச்செய்தி மடலை எழுதுவதற்கு
தூண்டியது உங்களது செவ்வி!
அதனால் உரைக்கின்றேன் நன்றி!
இதன்பால் செய்திகளைத் தர
உதவிய பிரச்சாரங்களுக்கும்
நன்றிகள் உரியன!
பாவம் லங்காமாதா!
தன் மேனியில் வாள்கொண்டுகீற
மீண்டும் ஒருவர் வந்திருக்கின்றார்
என்று கவலைப்படுகிறது.
இதனை உணர்த்தியே
இம்மடலை நிறைவு செய்கின்றேன்

**சி.ஆறுமுகம்**

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-60



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் –60

..................................................
..................................................
..................................................
..................................................

பெயர் : ..................................................
முகவரி : ..................................................
..................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –59



லோகநாதன் – விஜிதா,
புத்தடி D2
விசுவமடு.

## பரிசுக்குரிய வரிகள்

வீர உயிர் உரிமையதை சீரழிக்கும் வஞ்சகரின்,
நெஞ்சதனில் கூறுவோம் "வேங்கை தமிழர்" என்று
கெஞ்சிடும் நிலையல்ல உரிமை தாவென்று – தலைவன்
பேரால் உரைப்போம் தேர்தல் களத்தில் நின்று.

## பாராட்டுக்குரிய வரிகள்

*என் அன்புத் தம்பியே - தமிழ்*
*கூட்டமைப்புக்கு ஓட்டுப் போட்டு*
*இன்று போல் என்றும் ஒற்றுமையை*
*உணர்த்தி வெற்றிவாகை சூடுவோமடா.*

த.ஜெயதீபன்,
533/11,தர்மபுரம்.

*உயர் பாதுகாப்பு வலயத்தினுள்*
*உள்ள தன் வீட்டிற்குச் செல்ல*
*நாளைய பொழுதாவது நல்லதாக விடியுமாவென்று*
*சின்னமாய் உள்ள வீட்டைப்பார்க்கும் இளம்பிஞ்சு.*

பொ.நகுலா,
புதுக்குடியிருப்பு.

*வீடுபோகக் காத்திருக்கும் வீர உணர்வுகளை*
*நாடறியும் நாமும் நன்கறிவோம்.*
*வீட்டுக்கு நேரே புள்ளடி போட்டு - எம்*
*நாட்டைக் காப்போம் நாம்.*

க.இரத்தினசிங்கம்,
266,ஜெயந்திநகர்.

*பட்ட துன்பம் எத்தனையோ இந்த மண்ணில் என்றும்,*
*கவனித்து காத்திடவே யார் வருவார் மனமிரங்கி - இதுதான்*
*சின்னம்அலையாய் எழுவோம் அசையா தேர்தல் இலக்கு இதுவே*
*உணர்வோம். இன்றே இதையே வெல்வோம், சிரிப்போம்.*

ம.அருள்யோண்சன்,
விசுவமடு.

*பதினெட்டு வயது தாண்டிப் போடும் வாக்கை*
*பத்து வயதில் போட எண்ணும் - பாலகனின்*
*மனவுணர்வு தமிழரசுக்கட்சியின்*
*வெற்றிக்கு பாலம் போடுமோ?*

தெ.மயூரதனன்,
முல்லைத்தீவு.


இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
அருச்சுனா புகைப்படக் கலையகம் வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.

நாம் அறிவு பெற வேண்டுமானால், அறியாமை உடையவர்களாய் இருக்க வேண்டும். – தியோர்டோ ட்ரீஸர்

# ஓராண்டு நினைவலைகள்

தோற்றம்
21-11-1945

மறைவு
20-03-2003



## திரு-மூத்ததம்பி குணசிங்கம்

திதி:07-04-2004-துதியை

அன்புத்தெய்வமே!
ஆண்டு ஒன்று ஓடினாலும்
உங்கள் நினைவு!
எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது!
ஆயிரம் உறவு இருந்தாலும்
அப்பா என்று அழைக்க உறவு ஒன்று இல்லை
உங்கள் பிரிவு எங்களை வாட்டுகின்றது
இறைவன் உங்களை
தன்னுடன் அழைத்தாலும்
உங்கள் நினைவு
எங்கள் மனதை விட்டு நீங்காது!

உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கும் அன்புமனைவி,
மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள் தாய், சகோதரர்கள்.

இல:138,குமரபுரம்,
பரந்தன்,கிளிநொச்சி.

(4313)










இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு மார்ச் மாதம் 19 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 16 ஆம் ஆண்டு நினைவில் ...

19-03-2004 → 19-04-2004



தியாக தீபம்

# அன்னைபூபதி

அன்னைபூபதி தனிமனிதப்பிறவியாகச் சாகவில்லை; தமிழீழத்தாய்க்குலத்தின் எழுச்சிவடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது.

தமிழீழத்தேசியத்தலைவர்
வே.பிரபாகரன்

ஈழநாதம்

[illegible]